பேரறிஞர்

# அண்ணா



# பிடி சாம்பல்



# பிடி சாம்பல்

# பிடி சாம்பல்

பேரறிஞர்
டாக்டர் சி. என். அண்ணாதுரை,
எம். ஏ.,

மறைமலை அடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே,
சென்னை - 600 001.

விலை ரூ. 5-90

37825

பூம்புகார் வெளியீடு எண்: 159
முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1980
உரிமை: திருமதி ராணிஅண்ணாதுரை

அச்சிட்டவர்கள்: பூம்புகார் பப்ளிகேஷன்ஸ் பிரஸ், சென்னை-600001.

## பதிப்புரை

சமூகத்தின் மூலை முடுக்குகளில் ஒளிந்து கிடக்கும் உயிர்த் துடிப்புள்ள பிரச்னைகளில் ஏதாவது ஒன்றை எடுத்து, வெளிப்படுத்தி, அதற்குப் பரிகாரம் காண முயல்வது எதுவோ அதுவே மக்கள் இலக்கியம்

இதில் வெற்றி கண்டவர் விரல்விட்டு எண்ணத்தக்க அளவிலேதான் இன்றளவும் இருந்து வருகிறார்கள்.

ரசனைக்காக எழுதுவதை, கவலையை மறப்பதற்காக கற்பனையில் சிறகடித்துப் பறப்பதையெல்லாம் இலக்கியமாக ஒருக்காலமும் அங்கீகரிக்க முடியாது.

படிப்பதற்காக மட்டுமல்ல, படிப்பினை பெறுவதற்காகவும் அந்த இலக்கியம் மக்கள் சமுதாயத்திற்குப் பயனுடையதாய் இருக்க வேண்டும்.

துவண்டு போயிருக்கும் மனத்தைத் தூக்கி நிறுத்தும் வல்லமை கவிதைக்கு எந்த அளவுக்கு உண்டோ, அதே அளவுக்கு உரை நடை இலக்கியத்துக்கும் உண்டு.

இதிலே கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை பலிக்காது.

கதைக்கென்று சிருஷ்டிக்கப்படும் ஒரே ஒரு பாத்திரத்தின் நேர்முக தரிசனமே இதற்குத் தேவை.

புறப்படும் இடத்திலிருந்து அந்தப் பயணம் முடியும் கட்டத்திற்குள்ளே வந்து போகும் கிளைவழிகளுக்கெல்லாம் இதிலே இடமில்லை.

பயணத்தின் குறிக்கோளே இதற்குப் பிடித்த நைவேத்தியம்.

உணர்ச்சி மயமான சொற்களால் படிப்போர் நெஞ்சை உருகிடச் செய்யும் யுக்தியே கதைக்குரிய சிறந்த ஆராதனை.

மனித சமுதாயத்தில் இன்னமும் ஜடமாகவும் முடமாகவும் இருக்கின்ற விகாரங்களை— விவஸ்தை கெட்ட விஸ்வரூபங்களை அளந்து காட்டும் அடையாளச் சீட்டாக இது அமைய வேண்டும்.

மனித மனத்தை நிறைவு படுத்தும் வேலையை, கொஞ்சம் அழகாக எழுதத் தெரிந்த யாராலும் செய்து காட்ட முடியும். அதுவல்ல, சிறுகதை.

ஒரு மனத்தின் சேஷ்டையை மற்றொரு மனத்துக்கு எடுத்துக் காட்டுவது மட்டுமல்ல;

அந்த மனத்தின் கசிவைப் பிரதிபலிக்கும் கண் ணாடியாகவும் அது பொருந்தி இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட கதையைத்தான் 'சிறுகதை' யாகக் கொள்ள முடியும்.

காலத்துக்கேற்ற மாதிரி —சூழ்நிலைக்குத் தகுந்த விதத்தில் எந்த ஒரு பூவும் தன் நிறத்தை மாற்றிக் கொள்வதில்லை. ஆனால் மனிதருக்கு புத்தி சொல்லக் கிளம்பும் சில புஸ்வாண எழுத்தாளர்கள் மட்டும் உடையை மாற்றிக்கொள் வது போல மனத்தை மாற்றிக் கொண்டு, எழுது வதையெல்லாம் 'கதை' என்று கதைக்கின்ற இந்தக் காலகட்டத்தில், உங்கள் கரங்களில், உண்மையான -உயிருள்ள கதைகளைச் சிருஷ்டித்த பெருமைக் குரிய பேரறிஞர் அண்ணா அவர்களின் சிறு கதைத் தொகுப்பை, 'பிடி சாம்பல்' என் னும் தலைப்பில் தவழவிட்டிருக்கிறோம்.

மனித சமுதாயத்துக்கு அவசியமாகத் தேவைப்படும் ஒன்றை, அது எங்கு பிறந்திருந் தாலும் அதைச் சுவீகாரம் கொள்வதில் எந்த ஒரு தவறும் கிடையாது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் 'சிறு கதை' என்பது சுவீகாரக் குழந்தைதான். அதுவும் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட குழந்தை அது.

அந்தக் குழந்தையை அமரர் அண்ணா அவர்கள், தம் கரத்தில் ஏந்தித் தவழவிட்டி

ருக்கும் பாங்கை இதில் நீங்கள் பரவலாகக் காண லாம். அந்தக் குழந்தையின் மூலமாக அவர் வெளிப்படுத்தியிருக்கும் ஒவ்வொரு விஷயமும் விழிப்பை மட்டுமா, நல்ல வெளிச்சத்தையும் கொடுக்கக் கூடிய ஒன்றாகும்.

அத்தகு சிறப்புள்ள—உயிர்த் துடிப்புள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் கதைகளை நாங்கள் வெளியிட்டுக் கொள்ளும் உரிமையைப் பூரணமாக வழங்கி இருக்கும் திருமதி ராணி அண்ணாதுரை அவர்கட்கு எங்களின் இதய பூர்வமான நன்றி.

**பூம்புகார் பிரசுரத்தார்**

# 1
# பிடி சாம்பல்

"**சா**ம்பல்! சாம்பல்! சாளுக்கிய நாடு சாம்பலாயிற்று! சாளுக்கிய மன்னன் பிணமானான், களத்தில்! முடிவிலொரு பிடிசாம்பலானான்! முடிவிலொரு பிடி சாம்பல்! பாய்ந்து சென்ற திக்கெலாம் வெற்றி கண்ட வேந்தன், பராக்கிரம மிக்க பார்த்திபன், சாளுக்கிய திலகம் புலிகேசியும் போரில் தோற்றான்; அவனுடைய குருதி சாளுக்கிய மண்ணிலே குழைந்து கிடக்கிறது. வீர உரையாற்றி, வெற்றி முழக்க மிட்டு, பிடிபட்ட மன்னர்களை விரட்டிப் பேசிய, அவனு டைய வாயிலே இரத்தம்! புகழ் மாலை தாங்கிய உடலிலே, புண்! சாளுக்கிய நாடே! தீயிட்டனர் உனக்கு! தீய்ந்தது உன் எழில்! செல்வம் கருகிவிட்டது. புகழ் புகைந்துபோயிற்று. மாடமாளிகைகளிலே நெருப்பு! மண்டபங்களெல்லாம் மண் மேடுகளாயின. அழிந்தது கோட்டை. மிகுந்தது என்ன? எதிரியிட்ட தீ, தன் பசி தீர சாளுக்கிய நாட்டைத் தின்றுத் தீர்த்தான பிறகு, மிச்சமானது என்ன? சாம்பல்! ஆம்! சாளுக்கிய நாட்டின் கதி இதுவாயிற்று. பிடிசாம்பல்! முடிவிலோர் பிடி சாம்பல்!"

**சா**ளுக்கிய நாட்டின் மீது, பல்லவன் நரசிம்மன் போர் தொடுத்தான்—போரென்றால், மிகப் பயங்கரமானது; வரலாற்றிலே மிகமிகக் குறிப்பிடப்பட வேண்டிய சம்பவம்.

வாதாபி, சாளுக்கியத்தின் தலைநகரம்—எழில்மிக்க இடம். பல்லவப் படை, அந்த அழகு நகரை, அடியோடு அழித்துவிட்டது. வாதாபியின் அழிவுபோல், வேறெந்தப் போரிலும், வேறெந்த நகருக்கும் அழிவு நேரிட்டதில்லை

என்று கூறுவர்—அவ்வளவு பயங்கரமான அழிவு. சாளுக்கியனின் படைகள், சண்ட மாருதத்தில் சிக்கிய கலம் சுக்கு நூறாவது போல, சின்னாபின்னமாயிற்று. ஊர் உருத் தெரியாது அழிந்தது. மன்னனும் களத்திலே பிணமானான். பல்லவப் படையின் தாக்குதலால், சாளுக்கிய சாம்ராஜ்யமே படுசூரணமாகிவிட்டது.

வாதாபி, இன்றைய பம்பாய் மாவட்டத்திலே உள்ள இடம்! அதனை அழித்த பல்லவப் படையோ, காஞ்சியிலிருந்து கிளம்பிச்சென்றது-பல்லவ சாம்ராஜ்யத் தலைநகரம் காஞ்சிபுரம்.

காஞ்சிபுரம்—வாதாபி! இடையே, எவ்வளவு தொலைவு!! இடையே, எவ்வளவு ஆறுகள், காடுகள், நாடு நகரங்கள்! இவ்வளவையும் தாண்டிச் சென்று, சிங்கத்தை அதன் குகையிலே சென்று தாக்கிக் கொன்றிடும் வீரம்போல பல்லவனின் படை, மாற்றானின் மணிபுரிக்குச் சென்று, தாக்குதலை நடத்தி வெற்றி பெற்றது.

சாளுக்கியன், சொந்த நாட்டுக்குள்ளிருந்து கொண்டு போர் நடத்தினான்—பல்லவனோ, எதிரி நாட்டுக்குள் நுழைந்து, கடும் போரிட்டு வெற்றி பெற்றான். மகத்தான வெற்றி! சாளுக்கிய மக்களின் மனதை மருட்டிவிட்டது, பல்லவ மாவீரர்களின் பேராற்றல்!

எங்கும் நாசம் நர்த்தனமாடிற்று! அழிவு எனும் அந்தகாரம் கப்பிக் கொண்டது சாளுக்கியத்தை. அந்த அழிவு கண்ட சாளுக்கிய வீரன் கதறினான், 'பிடி சாம்பல்! முடிவிலொரு பிடி சாம்பலாகிவிட்டது சாளுக்கிய நாடு!!' என்று.

அந்தச் சாளுக்கிய வீரனின் அழுகுரல் கேட்ட தமிழ் வீரர் சிலர், தாய்நாட்டைத் தீ தின்னக் கண்டு தேம்பியவனைப் பிடித்திழுத்துக் கேட்டனர், ''ஏடா! மூடா! எதுக்குக் கதறுகிறாய்?'' என்று. ''யாரிவன் பித்தன்! பிணக் குவியலுக்கிடையே பிதற்றிக் கிடக்கிறான்! பிடி சாம்பலாம், பிடி சாம்பல்! பேதை! தமிழ்நாட்டு வீரமெனும் வெந்தழலிற்

பட்டால், எதுதான் பிடி சாம்பலாகாது? வாதாபி மட்டும் விதி விலக்கோ! உமது புலிகேசி மட்டும் தப்புவானோ! சிங்கங்கள் பலச் சீறிப் போரிட்டுச் செந்தமிழ் நாட்டவரிடம் பங்கப்பட்டதை இவன் அறியான் போலும்! ஏடா! மூடா! புலிகேசி தமிழகத்தைத் தாளின்கீழ் போட்டுத் துவைக்கலாம் என்று எண்ணினான்; அவனுடைய சேனை தோற்றோடும் போக்கில், அவனுடைய பிணத்தைத் துவைக்கும் என்பதைக் கண்டானா அவன். வேங்கிநாட்டிலே அவன் பெற்ற வெற்றி, வெறியூட்டிவிட்டது. வடநாட்டு வேந்தன் ஹர்ஷனை வென்றுவிட்டதாலேயே, தன்னை மிஞ்சிடும் தார்வேந்தன் எவனும் இல்லை என்று இறுமாந்து கிடந்தான்; இறந்துபட்டான்! அவனுடைய நகரம் எரிந்துபட்டது. தமிழரிடம் கலந்துறைவோர், அவரிடம் திங்களின் குளிர்ச்சியைக் காண்பர்; எதிர்த்தோர், கதிரவனின் வெம்மையால் கருகுவர்.'' என்றனர் தமிழ்வீரர். சோகத்தோடு சாளுக்கியன், ''ஆம்! வீரர்களே! வெற்றியால் களித்துள்ளவரே! கருகித்தான் போயிற்று, எமது வாதாபி!'' என்று கூறினான்.

''சாளுக்கிய நாடு...?'' என்று கேலி செய்தனர் தமிழ் வீரர்.

''இனி, தலைதூக்காது.''—என்று தலையைக் கவிழ்த்துக் கொண்டு பேசினான் சாளுக்கியன். அழிந்துபட்ட நகரை விட, அவன் அதிக பரிதாபமாகக் காணப்பட்டான்.

வெற்றி பெற்ற பல்லவப் படை, வேழம் முதற்கொண்டு வேழமுகச் சிலை வரையிலே, ஒன்றுவிடாமல், சாளுக்கிய நாட்டுப் பொருள்களைப் பல்லவ நாட்டுக்குக் கொண்டுசென்றனர். அந்தச் சாளுக்கியனும், பல்லவ நாட்டுக்கு இழுத்து வரப்பட்டான்-போரிலே பிடிபட்டவனல்லவா! அவனுடைய கண்கள், சாளுக்கியத்தின் அழிவைக் கண்டு கலங்கிற்று—ஆனால் பல்லவநாட்டிலே, ஒவ்வொருவர் முகத்திலும் வெற்றி ஒளி வீசக்கண்டு, பல்லவத்தின் எழிலைக் கண்டு, அவனுடைய கண்கள் அடைந்த வேதனை, களத்திலே எழுந்ததைவிட அதிகமென்றே கூறலாம்.

சாளுக்கியன் பிடிபட்டவன், அடிமை, யுத்தக் கைதி என்று தன்னைப் பற்றிப் பல்லவ நாட்டவர் கேலி பேசின தால்கூட அவன் மனம் புண்படவில்லை.

''வாதாபி படுசூரணமாயிற்று.''

''சாளுக்கியம் சிதைந்தது.''

''புலிகேசி பிணமானான்.''

இந்த வார்த்தைகள், எந்தப் பக்கத்திலும் கிளம்பின! நாலா பக்கங்களிலிருந்தும் அம்புகள், வேல், ஈட்டி முதலியன பாய்ந்துவந்து தாக்குவதுபோல, சாளுக்கியனின் செவியில், இந்த வார்த்தைகள் வீழ்ந்தன.

வேலை ஒன்றும் கடினமில்லை. அதிலும், அவன் வேலைக்கு அமர்ந்திருந்த இடம், பல்லவ சாம்ராஜ்யாதிபதி யின் அரண்மனைக்கு அடுத்த அந்தஸ்துள்ளது! படைத்தலை வர் பரஞ்சோதியிடம், அந்தச் சாளுக்கியன் வேலைக்கு அமர்ந்தான். தாய் நாட்டின் வெற்றிக்காக, வீரவாளேந்தி, பணி புரிந்து வந்த அந்தச் சாளுக்கியனுக்கு, என்ன வேலை கிடைத்தது? பரஞ்ஜோதியின் ஆயுதச் சாலையில் காவல்!! பரஞ்ஜோதிக்கு அடைப்பம் தாங்கும் பணி; எடுபிடி வேலை செய்வது, நிலத்தில் உழுவது, தோட்டக்காவல்—இப்படி ஏதேனும் வேலை தந்திருந்தால்கூட, அந்தச் சாளுக்கியனின் மனம் வேதனை அடைந்திருக்காது. ஆளப் பிறந்தவர்கள்கூட ஆளடிமையானதுண்டு. படையிலே பணி புரிய வேண்டியவன், பணியாளானால் பரவாயில்லை; சகித்துக் கொள்ளலாம் என்றாவது தோன்றும். ஆனால், சாளுக்கியனுக்குத் தரப் பட்ட வேலை, பரஞ்ஜோதியின் ஆயுதச் சாலையிலே காவல் புரிவது!

அந்த வாள்—எத்தனையோ சாளுக்கியப் படைத்தள பதிகளின் சிரங்களை வெட்டி வீழ்த்திய வாள்! சாளுக்கிய ரின் குருதி தோய்ந்த வாள்! வேல்! அம்பு! ஈட்டி! எறிவாள்! சொருகுவாள்! வளை, மற்றும் பல பொறிகள் எல்லாம் சாளுக்கிய சாம்ராஜ்ய அழிவுக்குப் பயன்பட்ட கருவிகள்!

புலிகேசியைப் பிணமாக்கிய படைத்தலைவனின் ஆயுதச் சாலையிலே, காவல் புரியவேண்டும்! சாளுக்கியன் மனம் மிக மிக வேதனைப்பட்டதிலே ஆச்சரியமென்ன! தாய்நாட்டை அழித்த கருவிகள், நாள்தோறும் பார்க்க வேண்டும்; அவைகளை வரிசையாக, ஒழுங்குபடுத்த வேண்டும், பழுது பார்க்க வேண்டும்—இவை, சாளுக்கியனின் பணி! இதைவிட, நாள் தோறும், நானூறு சவுக்கடி பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிடலாம்! பிரதிதினமும் பாம்புப் புற்றிலே கரத்தைவிட்டுக் கடிபடவேண்டும் என்று தண்டனை தந்திருக்கலாம்.

ஒவ்வொரு நாளும், பரஞ்ஜோதியின் ஆயுதச் சாலையில் காவல் புரிவதைவிட, ஒவ்வொரு விநாடியும், அந்த வாளைக் காண்பதைவிட, அந்தத் தண்டனைகள் கொடுமையல்லவே என்றெண்ணினான் சாளுக்கியன்.

இவ்வளவு வேதனையில் தள்ளப்பட்ட, வில்லாளன்—அந்தச்சாளுக்கியனின் சிறப்புப்பெயர் அங்ஙனம்அமைந்திருந்தது—தன் தாய்நாட்டைப் பற்றி எண்ணத் தவறவில்லை. எண்ணினது மட்டுமல்ல, தன் ஆயுள் முடிவதற்குள், தாய் நாட்டுக்கு ஏற்பட்ட பழியையும் இழிவையும், தன் இரத்தத்தால் கழுவவேண்டும் என்று தீர்மானித்தான்.

அவன் அந்தப் பிடி சாம்பலை மட்டும் விடவில்லை, பேழையில் இருந்தது. சிறு பட்டுத் துண்டிலே முடியப்பட்டு! யாருமறியாவண்ணம், ஒவ்வோர் நாளும் நடுநிசியில் செல்வான்; பேழையைத் திறப்பான்; கண்களிலே கொப்பளிக்கும் நீரைத் துடைப்பான்; பட்டு முடிப்பை எடுப்பான்; பார்ப்பான்; பெருமூச்செறிவான்; 'பிடி சாம்பல்! பிடி சாம்பல். முடிவிலொரு பிடி சாம்பல்! சாளுக்கியன் கரத்தில் சாளுக்கிய நாட்டின் அழிவைக் காட்டும் பிடி சாம்பல்!' என்று தனக்குள் கூறிக் கொள்வான்; பட்டு முடிப்பைப் பேழையுள் வைப்பான்; பிறகு படுக்கையிற் சென்று புரள்வான்; கண்ணை மூடினால், களம் தெரியும்; திறந்தாலோ, விளக்கொளி தீப் பந்தமாகக் காணப்படும்; விடிய விடியத் துடித்தபடி இருப்

பான்! வேறென்ன செய்வான்!! வெற்றி பெற்ற வீரரிடம், அவனோர் வேலைக்காரன். சரணடைந்த சாளுக்கியன் தன் தாய்நாடு சாம்பலானதைக் கண்டவன்!

பரஞ்ஜோதியின் ஆற்றலை, வாதாபியின் வீழ்ச்சி, தமிழகம் உணரச் செய்தது. நரசிம்மப் பல்லவனின் கீர்த்தி, பல்லவ சாம்ராஜ்யத்தின் சிறப்பு, இவைகளைப் பற்றி மக்கள் பேசாமலில்லை. பெருமை அடையாமலுமில்லை. ஆனால், பரஞ்ஜோதியைப் பற்றிப் பேசியான பிறகுதான்!

பரஞ்ஜோதியின் புகழ் வளர்வது கண்டு, சாளுக்கியன், ஏற்கெனவே வேதனைப் பட்டதைவிட அதிகமாக அனுப விக்தது சகஜம். ஆனால், பரஞ்ஜோதியின் புகழ் வளருவது கண்டு, பல்லவ சாம்ராஜ்யத்திலேயே வேறுசிலருக்கு வேதனை பிறந்தது. அவர்கள், பரஞ்ஜோதிபோல, படைத் தளபதி களுமல்ல—புகழுக்காகப் போட்டியிடுபவர்களுக்குள் உண் டாகும் மாச்சரியம் என்ற அளவிலே கருதலாம். ஆனால், பரஞ்ஜோதியின் புகழ் ஒளி கண்டு, வேதனைப்பட்டவர்கள், வீரர்களல்ல!

பல்லவ சாம்ராஜ்யம், பல்வேறு வளங்களுடன் சிறந்து விளங்கிற்று. செல்வம் செழித்த இடம். கலையும் ஓங்கி வளர்ந் திருந்தது. மன்னன் நரசிம்மன், வைணவன்—ஆனால், சைவரின் பகைவனல்ல!

சைவம்—வைணவம் இரண்டும் வெளிப்படையாக ஒன்றை ஒன்று தாக்கிக் கொண்டு, ஊரை கவமாக்கிய கால மல்ல அது. அந்தக் கோரம் குறைந்துவிட்டது. குறைய வேண் டிய அளவு, வேறோர் மார்க்கம், இரண்டையும் அறைகூவி அழைத்தது. அந்த மார்க்கமே, சமணம். சமணத்தின் ஆதிக் கத்தைக் கண்டு, வைணவமும் சைவமும் அஞ்சின—அஞ்சின துடன், இரு சக்திகளும், கூட்டுச் சக்தியானாலொழிய, சம ணத்தை வீழ்த்த முடியாது என்று முடிவு செய்தன. எனவே தான் சைவ—வைணவ, மாச்சரியம் குறைந்தது. அரியும், அரனும் ஒன்றுதானென்று பேசப்பட்டு வந்தது. இருமார்க்கங் களும், இறைவனின் திருவடிகளுக்கே அழைத்துச் செல்ல

ஏற்பட்டன—சமணம் போல, நிரீஸ்வரவாதமல்ல அவை—என்று பேசவும் தலைப்பட்டனர்.

இந்த 'பாசம்' இருந்த காலம்—பல்லவ சாம்ராஜ்யம் ஓங்கி வளர்ந்த சமயம். பல்லவ மன்னர்களும், சைவ—வைணவம் இரண்டையும் ஆதரித்து வந்தனர். மன்னரின் ஆதரவு பெற்றதால், இவ்விரு மார்க்கங்களும், மகோன்னத நிலை அடைந்தன. பெரும் பொருள் செலவிட்டுக் கலை நிபுணர்களை கொண்டு அழகான பலபெரிய கோயில்களைஅமைத்து, மன்னர்கள் 'பக்திமான்'கள்—'கலாவாணர்கள், என்ற விருதுகளுடன் புகழடைந்தனர். சமணம், ஆதரிப்பாரற்றுப் போயிற்று. இசையும் நடனமும், கூத்தும் கேளிக்கையும், பஜனைகளும் பல்வேறு விழாக்களும், சைவ வைணவச் செல்வாக்கை அதிகரிக்கச் செய்ததுடன், மக்களுக்குப் பெரியதோர் மனமயக்கத்தை ஊட்டின. இத்தகு முறைகளற்றதாலும் தத்துவங்களின்மீது கட்டப்பட்டதாலும், துறவு நிலையைப் பெரிதும் வற்புறுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்ததாலும், சமணம், செல்வாக்கிழந்தது. அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்ற முறைக்கேற்றபடி, மன்னரின் ஆதரவைப் பெற்ற சைவ—வைணவத்தையே மக்களும் ஆதரித்தனர்.

இந்த 'வெற்றி'க்காக ஏற்பட்ட, சைவ—வைணவக் கூட்டுறவு, சமணம் இனித் தலைதூக்காது என்ற நிலை ஏற்பட்ட பிறகு, மீண்டும் போட்டியிடலாயின. இம்முறை நடந்த போட்டி, மக்களிடை, தத்தமது மதத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறியும், வேறு மதத்தின் சிறுமைகளை எடுத்துக் காட்டியும், நடத்தப்படும் பிரச்சாரமாக அமையவில்லை. பல நாட்கள் 'அரியும்—அரனும் ஒன்றே' என்று மக்களிடையே பேசியாகிவிட்டதால், மீண்டும், அரி—அரன் இருவரில், யார் உண்மைத் தெய்வம், சைவம்—வைணவம் இரண்டிலே எது சிறந்த மதம்என்ற போட்டிப்பிரச்சாரத்தை நடத்துவது முறையுமாகாது, பலனும் தராது என்பதை அறிந்த, அம் மதத்தலைவர்கள், மக்களிடம் சென்று பேசி, மண்டையை உடைக்கும் கலகத்தை மூட்டிவிடும் முறையைக் கைவிட்டு, அரண்மனையை முற்றுகையிடலாயினர்! மன்ன

ரிடம் செல்வாக்குப் பெற்று, தமது மார்க்கத்துக்கு மதிப்புத் தேட எண்ணினர். அரசாங்க மதம் என்ற அந்தஸ்து கிடைக்பதற்காக அரும்பாடுபட்டனர். இந்த முயற்சியில், போட்டியில், ஓரோர் சமயம், சைவரும், பிறிதோர் சமயம் வைணவரும் வெற்றி பெறுவர்—அதற்கேற்றபடி சைவத்துக்கோ, வைணவத்துக்கோ, ஆதிக்கம் கிடைக்கும். அரசபலம் பெற்று அந்த மதம் ஓங்கும்.

இந்தப் 'போட்டிக்கு'ப் பல்லவநாடு, வளமான இடமாக அமைந்தது. ஒரு அரசர், வைணவத்தை ஆதரிப்பார்—அவர் காலத்தில் எங்கும் வைணவக் கோயில்கள் எழிலுடன் கிளம்பும்! விழாக்கள், வைணவத்தின் சார்பில் நடைபெறும். மற்றொருவர், சைவத்தை ஆதரிப்பார் —அவர் காலத்திலே சைவக் கோயில்கள் கட்டப்படும்; இம்முறையில், இரு மார்க்கங்களும் தழைத்தன.

நரசிம்மப் பல்லவன், வைணவ மதத்தை ஆதரித்தான்—அவனுடைய தகப்பனோ, சைவன். மன்னன் மகேந்திரன் காலத்திலே, மகேஸ்வரனுக்குக் கோயில்கள் கட்டப்பட்டு, மானியங்கள் அளிக்கப்பட்டன. மகேந்திரன் மகன், நரசிம்மப் பல்லவன், வைணவ மதத்தை ஆதரித்தான்.

இந்நிலையில், படைத்தலைவர், வாதாபியின் மாபெரும் வெற்றி பெற்ற மாவீரன், பரஞ்ஜோதி சைவன். பரஞ்ஜோதியின் புகழொளி கண்டு, வைணவருக்கு அருவருப்பு ஏற்படாமலிருக்க முடியுமா! மன்னனின் ஆதரவு வைணவத்துக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் வெற்றி ஒளியோ, சைவப் பரஞ்ஜோதிமீது வீசுகிறது—சைவர் பெருமையடைகின்றனர்—இது இத்துடன் நிற்குமோ, அன்றி, அரண்மனைக்குள், சைவம், புகுநிலை ஏற்படுமோ! பரஞ்ஜோதி புகழ் பெருகுவது, வைணவத்துக்கு இருட்டடிப்பாக முடியுமாயின், என் செய்வது என்ற அச்சம் அரிதாசர்களைப் பிடித்தாட்டிற்று.

"பரஞ்ஜோதி, மாவீரன்; தமிழ் நாட்டின் திலகம்; பல்லவ சாம்ராஜ்யத்தின் மணிவிளக்கு."

''ஹர்ஷனை வென்றான் புலிகேசி! புலிகேசி தோற்றான் நம் பரஞ்ஜோதியிடம்!''

''படைத் தலைவருக்கேற்ற புத்தி கூர்மை, அஞ்சா நெஞ்சு அனைத்தும் படைத்த ஆற்றலரசனன்றோ நம் பரஞ்ஜோதி.''

''படைத் தொழில் நுட்பம் சகலமும் அறிந்தவர்.''

''வாதாபியின் வீழ்ச்சி...''

''வாடிக் கிடந்த மக்களைக் குதூகலப்படச் செய்து விட்டது.''

''மற்றையத் தமிழ் வேந்தர்களும்...''

''பாராட்டுவர், வெளியே; உள்ளே பொறாமை அடைவர்''

''பயமுமிருக்கும்!''

''எங்கும் இந்த இணையில்லா வீரருக்குப் பெருமதிப்புத்தான்!''

''மக்கள், பரஞ்ஜோதியை...''

''வணங்குகிறார்கள்!''

''மன்னருக்கும் அவரிடம் அளவு கடந்த மதிப்பு!''

''இர்ாதா? ரணகளச்சூரன்! வெற்றி வீரன்! வாதாபிக்குத் தீயிட்ட தீரன்! மகேந்திர மன்னன் தோல்வியைத் துடைத்த தளபதி! மட்டற்ற மதிப்பும் மங்காப் புகழும் இந்தப் பல்லவ பரம்பரைக்குப் பெற்றுத் தந்த தலைவன்..''

''ஆம்! ஆனால்...பரஞ்ஜோதி ஒரு சைவன்!''

''ஆமாம்! சைவன்!''

''சைவன்! மன்னன் வைஷ்ணவன்! நாமும் அரிதாசர்கள்! கீர்த்தி பெற்றவனோ சைவன்!''

''ஆனால், அதனால் ''

''ஆனால் என்ன! அதனால் என்ன! பரஞ்ஜோதியின் புகழ், சைவத்துக்குத்தான் உரம் அளிக்கும். பாற்கடலிற் பள்ளிகொண்ட பரந்தாமனின் பக்தனான நரசிம்ம மன்ன னின் மனமும், மெள்ள மெள்ள, சைவனாம் பரஞ்ஜோதியின் கீர்த்தியைக் கேட்டுக் கேட்டு மாறி...''

''மகேந்திர மன்னன் மகன்! வைணவத்தை விட்டு...''

''தந்தை போலத் திருநீற்றுப் பூச்சுக்காரனாவானோ!''

''நிச்சயம்! அரச அவையில் ஆற்றலரசன் பரஞ்ஜோதி வீற்றிருக்கும் வரை, வைணவத்துக்கு இந்த ஆபத்து ஏற் பட்டே தீரும் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.''

''ஏன் அப்படி எண்ணுகிறீர்! எம்பெருமானின் பெருமை களை எடுத்துக் கூறுவோம். சைவம் உயர்ந்ததா வைணவம் சிறந்ததா என்பதை பரஞ்ஜோதியே முன்னின்று பேசுவ தாயினும், நமது கட்சி ஜெயம் பெறச் செய்யும் சக்தி நமக்கு இல்லையா? மேலும் பரஞ்ஜோதி போரிலே புலி;போதகாசிரி யனோ? வீரன்; ஆனால் வைணவத்தை வீழ்த்தக்கூடிய விவ கார ஞானஸ்தனோ! வரட்டுமே, அப்படியொரு சந்தர்ப்பம். வைணவமே சிறந்தது என்று என்னால்—உங்கள் யாவரைக் காட்டிலும் ஞானத்திலே மிகக்குறைந்தவனான அடியேனால் ஸ்தாபிக்க முடியும்.''

''அசட்டுத்தனமான காரியம்! சைவம் பெரிதா,வைண வம் பெரிதா என்று சண்டையிடத் தொடங்கினால், சமணம் மீண்டும் தலைதூக்கும்.''

''உண்மை! அந்தத் தொந்தரவு வேறு இருக்கிறது.''

''அரி—அர ஒற்றுமைக்கு அவசியம் இருக்கிறது; அந்த ஆபத்தைப் போக்கும் அருமருந்து அது ஒன்றே மிச்சம். ஆகவே, சைவ—வைணவ விவாதம் கூடாது.''

''பிறகு...''

''அந்த முறை கூடாது! ஆனால், எப்படியேனும் பரஞ்ஜோதியை அரச அவையிலிருந்து நீக்கியாக வேண்டும். அவன் படைத்தலைவனாக வீற்றிருக்க விட்டால், வைணவம் தானாக நசிந்துவிடும்.''

''மன்னனோ, பரஞ்ஜோதியைக் கிடைத்தற்கரிய பொக்கிஷமாகக் கருதுகிறான்.''

''கருதுகிறானல்லவா! இனி மற்றவர்கள் செல்லாக்காசு தானே!''

''ஆமாம்!...''

''பரஞ்ஜோதி சைவன்! எப்படியேனும், ராஜசபையில் அவன் இனியும் இருக்க இடம் தரலாகாது.''

அச்சம் கொண்ட அரிதாசர்கள், இங்ஙனம் பேசிடாது இருக்க முடியுமோ! சைவம், பிரசாரத்தால் அல்ல; மன்னனிடம் செல்வாக்குப் பெற்று அல்ல, ஒரு மாவீரனின் வெற்றி ஒளியின் துணைகொண்டு இனி, செல்வாக்குப் பெறுமே, மன்னன் நரசிம்மன், அரிதாசன் என்று ஆனந்தமாகக் கூறினவுடன், ஆம்! ஆனால், படைத் தலைவர் பரஞ்ஜோதியார் சைவர் - அவர் பல்லவ நாட்டுக்கே மணிவிளக்காக உள்ளார்; அவர் சிவபக்தர்—என்றென்றோ சைவர் கூறுவர்!

அரச ஆதரவு அற்றுப் போய்விடுமோ என்ற அச்சம் கொண்ட வைணவர்கள், வாதாபியை வீழ்ச்சி பெறச் செய்த பரஞ்ஜோதியை, வைணவத்துக்கு வைரியாகிவிடக் கூடியவர் என்று எண்ணி ஏங்கினர். இந்த ஏக்கத்தைப் போக்கிக் கொள்ள, பேச்சு மட்டும் பயன் தருமா, செயலிலும் இறங்கியாக வேண்டுமல்லவா! என்ன செய்ய முடியும்? மெள்ள பிரச்சாரம் நடத்தினர். வருகிறது வைணவத்துக்கு ஆபத்து! மன்னன் நரசிம்மப் பல்லவனின் ஆதரவு பெற்ற வைணவத்துக்கு நெருக்கடியான நிலைமை வருகிறது. வாதாபியிலே பரஞ்ஜோதி பெற்ற வெற்றியைச் சைவர்கள் தமக்குச் சாதகமாகக் கொண்டு, சைவத்திற்கு அரச ஆதரவு கிடைக்குமாறு செய்யப் போகிறார்கள். வீழ்ந்தது வாதாபி! தாழ்ந்

தது வைணவம் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே, வைணவம் வாழ வேண்டுமானால், பரஞ்ஜோதியாருக்கு அரச அவையிலே, இன்றுள்ள செல்வாக்கு ஒழிந்தாக வேண்டும்—என்று பிரச்சாரம் புரியவும், கட்சி சேர்க்கவும், வைணவர்கள் முனையாமலிருக்க முடியாதல்லவா?

தாய்நாடு சாம்பலானதைக் கண்டு தவித்துக் கொண்டிருந்த சாளுக்கிய வீரன், வில்லாளன், இந்த நிலையை நன்கு அறிந்து கொண்டதுடன், தன் நோக்கத்துக்கு, இச் சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டான்.

''பரஞ்ஜோதி! எமது வாதாபிக்கு நெருப்பிட்டாயல்லவா? தீக்கு இரையாக்கினாய் திருநகரை! இதோ, தோற்ற சாளுக்கியன் மூட்டும் தீ, உன் நாட்டை அழிக்கப் போகிறது பார்!'' என்று கூறவில்லை—ஆனால் அவன் செய்தது என்னவோ, அதுதான். வெகுண்ட வைணவருக்கு, வேக மூட்டலானான், அவர்களிடம் பேசி. என்ன பேசினான்?

''புலிகேசி, பிணமானான் களத்தில்! கடும் புயலினால் வேருடன் களைந்து எறியப்பட்ட மரமானான். சாளுக்கியப் படை சின்னாபின்னமாகிவிட்டது. வாதாபி நகரம் தீக்கு இரையாயிற்று. எல்லாம் நமது படைவீரர்களின் தீரத்தால்—அவர்கள் காட்டிய அபாரமான போர்த்திறத்தினால்!''

''சாளுக்கியப் படை தோற்றது உண்மை. பல்லவருக்கு வெற்றி கிட்டியதும் உண்மை. ஆனால் அந்த வெற்றிக்குக் காரணம், பல்லவப்படை காட்டிய வீரம் என்று கூறுவது முழு உண்மையாகாது. நண்பர்களே! என் மீது கோபிக்க வேண்டாம். சாளுக்கியர் கோழைகளல்ல; வீரம், பல்லவருக்கு மட்டுமே உரித்தானதுமல்ல; பல்லவப் படை காட்டிய வீரம் மட்டுமல்ல, வாதாபியின் வீழ்ச்சிக்குக் காரணம்...'

''பேசுகிறாய், பெருமூச்செறிகிறாய், உண்மை அல்லவென்கிறாய். நீ கூறுவதுதானே, பல்லவப் படையின் வெற்றிக்குக் காரணம். அவர்களின் வீரதீரமல்லவா?''

''அதுமட்டுமல்ல என்றுதான் கூறுகிறேன்.''

''ஆமாம் நண்பர்களே! அவன் கூறுவதிலும் அர்த்தம் இருக்கிறது. படை வீரர் காட்டிய வீரம் மட்டுமல்ல, வெற்றிக்குக் காரணம்.படைத்தலைவர் பரஞ்ஜோதியாரின் அபாரமான ஆற்றலும், போர்த் தொழில் நுண்ணறிவுமேதான் வெற்றிக்கு முக்கிய காரணம்.''

''முக்கிய காரணம் என்று கூறினீர் வீரரே! பொருத்தமாகப் பேசினீர், வெற்றிக்கு முக்கிய காரணம் தளபதியின் தீரமும் திறமும். ஆனால் மூலகாரணம் ஒன்று இருக்கிறது.''

''அதென்னவாம், மூலகாரணம்?''

''உண்டு.''

''உண்டெனினும் கூறும். விழியை உருட்டினால் விஷயம் விளங்குமோ! பெருமூச்சு, எங்களுக்குக் கூறும் பதிலாகுமா?''

''எனக்குத் தெரியும் அந்த மூலகாரணம். கூறினால், நீங்கள் சரி என்று ஏற்றுக் கொள்ள மாட்டீர்களே என்றுதான் அஞ்சுகிறேன்.''

''அறிவுக்குப் பொருத்தமானது எது கூறினும், மறுப்புரை கூறுவது எமது மரபன்றே. மூலகாரணம் என்ன? சொல், கேட்போம்.''

''உரைக்குமுன் ஒன்று, உம்மைக் கேட்கிறேன்; கோபியாது பதில் கூறவேண்டும். வீரமும் வீரரும், படைவரிசையும் படைக்கலன்களும், உங்கட்கு, பல்லவ வேந்தன் நரசிம்மன் காலத்துக்கு முன்பும் உண்டல்லவா?''

''ஏன் இல்லை! மன்னன் மகேந்திரன் காலத்தில் மாவீரர்கள் இருந்தனர்.''

''மகேந்திரன் காலத்திலே, போர் இருந்ததன்றோ?''

''ஆமாம்! போரிட்டோம்.''

''வருத்தமோ, வெட்கமோ வேண்டாம் நண்பர்களே! மகேந்திரன் காலத்திலே, தோல்வி கண்டீர்கள். பெருந் தோல்வி. வீரர்களே! வீரமும் தீரமும் நிறைந்த வேந்தன் புலிகேசியின் படைகள், பல்லவ நாட்டுக்குப் பயங்கரமான தோர் புயலாயிற்று. அதைத் தாங்க மாட்டாது தவித்த பல்லவப்படைதான், இன்று வாதாபியை வென்றது''

''ஆமாம்.''

''எப்படி முடிந்தது என்று கேட்கிறேன்.''

''இது என்ன கேள்வி? வீர தீரமிக்க எமது படைகள், ஆற்றல் மிக்க எமது தலைவர், பரஞ்ஜோதியின் திறமையால் வெற்றி கிடைத்தது.''

''உண்மைக்கு வெகு அருகாமையில் வந்துவிட்டீர்களே! பரஞ்ஜோதி! ஆம்! அந்தச் சைவரின் பலம்! சைவத்தின் மகிமை! அதுதான் வெற்றியைத் தேடித்தந்தது. படைத் தலைவரின் சிவசக்தியே பல்லவத்தின் வெற்றிக்குக் காரணம். வாதாபியை, உமது படைவீரரா கொளுத்தினர் என்று எண்ணுகிறீர்! பித்தம் உங்களுக்கு. சிவபக்தராம் பரஞ்ஜோதி, சைவத்தின் பலத்தை, எமக்கு விளக்க அல்ல, வைணவ நரசிம்ம மன்னருக்கு விளக்க, திருபுராந்தகனை வேண்டித் தொழ, அவர் தமது நெற்றிக் கண்ணைத் திறந்தார்—ஒரு கணம்; ஆமாம்! எமது வாதாபி எரிந்தது—பிடிசாம்பல்! பிடிசாம்பல்! முடிவிலோர் பிடிசாம்பலாயிற்று!''

சாளுக்கியன், சைவத்தின் மேன்மையை வெற்றிக்குக் காரணம் என்பதை விளக்கினது, கலங்கிக் கிடந்த வைண வருக்கு, மேலும் கலக்கத்தைக் கொடுத்தது. அவர்களுக்கு ஆத்திரமாகத்தான் இருந்தது. அவன்மீது அடங்காக்கோபம் ஏற்பட்டது. அவன் பொய்யுரைத்திருப்பின், கோபம் பொங் கிப் பிறகு அடங்கிவிட்டிருக்கும். ஆனால் அவன் சொன்னதை எண்ணிப் பார்க்கப் பார்க்க, அவன் உரையிலே உண்மை இருக்கக் கண்டனர். காணவே, கோபம் மேலும் மேலும் கொதித்தது!

அந்தச் சாளுக்கியன் அடிமைதான்! ஆனால் அவன் சொன்னது உண்மை. வெற்றிக் களிப்பு, அந்த வேதனையை மாற்ற முடியாது. ஏந்தப் புலிகேசி களத்திலே பிணமாக்கப் பட்டானோ, அவனுடைய வெற்றிமுரசு, பல்லவத்தின் தலை நகரத் தலைவாயிலில் கேட்டதை அத்தமிழ் வீரர்களறிவர். மகேந்திரன் காலத்தில் நேரிட்ட அந்த விபத்தைச் சாளுக்கி யன் கவனப்படுத்தினான். என்ன கர்வம்! என்ன ஆணவம்! தோற்றோடிய துஷ்டன், துடுக்குத்தனமாகவும்பேசுகிறானே! வெற்றி வீரர்களாக இருக்கும் நம் எதிரிலேயே, நம்மை இழி வாகப் பேசுகிறானே! என்று கோபம் பிறந்தது முதலில். ஆனால் உடனே தணிந்துவிட்டது. அவன் உரைத்ததோ உண்மை! ஓர் நாள், காஞ்சிபுரம், பல்லவத்தின் தலைநகரம், இன்றோ நாளையோ, இரவோ, பகலோ, இப்போதோ, இன்னும் சற்று நேரத்திலோ, சாளுக்கியனிடம் சிக்கிச் சீரழி யும் என்று வீரர்கள் எல்லாம் விசாரப்பட்ட நிலை இருந் தது. தோல்வி! துயரம்! வெட்கம்! வேதனை! அதனைத் தான், பிடிபட்ட சாளுக்கியன் கவனப்படுத்தினான். பிழை அல்ல, உண்மை.

ஆம்! அந்த நாள், அவர்கள் கவனத்துக்குக் கொண்டு வரப் பட்டதும், பழைய நிகழ்ச்சிகள் பலவும் மனக்கண் முன் தோன்றின.

பல்லவ சாம்ராஜ்யத்தைப் பதைக்க வைத்த புலிகேசி, அவர்கள் மனக்கண்முன் வந்து நின்றான்.

புலிகேசி, இராஷ்டிரகூடர், கடம்பர், கொங்கணர், இலாடவர், சேதிநாட்டவர், கலிங்கர், கோசலர், வேங்கி நாட்டவர் என்று பல்வேறு நாட்டவரை வென்று புகழ் பெற்றவன். சாளுக்கியாதிபதி சமர் செய்து வைரம் ஏறிய வீரனானான்! எங்கும் வெற்றியே கண்டான்.

புலிகேசியின் புகழ், வடக்கே இமயம் வரை மட்டுமல்ல, பாரசீக மண்டலம் வரை பரவிற்று. பாரசீக மன்னன் வெற் றிப்பவனி வரும் புலிகேசியிடம் தோழமை கொண்டாடு வதைத் தனக்குற்ற பெருமை எனக்கொண்டான். இமயம்

தடுத்திராவிட்டால், அதற்கு அப்பாலுள்ள நாடுகளையும் 'ஒரு கை' பார்த்திருக்கக் கூடியவனே புலிகேசி. சாளுக்கிய நாட்டின் புகழொளியாய் விளங்கிய புலிகேசி பெற்ற எல்லா வெற்றிகளையும் மிஞ்சிவிட்டது, ஹர்ஷனுடன் போரிட்டுப் பெற்ற வெற்றி. சாம்ராஜ்யாதிபதி எனவும், சமரில் வல்லவனெனவும் புகழ் பெற்றவன் ஹர்ஷன். வடநாட்டிலே அவன் அமைத்த வல்லரசு, தென்னாட்டையும் விழுங்கிவிடக் கூடியதோ என்று எவரும் அஞ்சக்கூடியதாகவே இருந்தது. வடநாட்டுச் சிற்றரசர்களின் சிரம் தன் அடிதொழ, மணிமுடி பூண்டு மகோன்னதமாக வாழ்ந்து வந்த ஹர்ஷன், தனக்கு இணை யாரும் இல்லை என்று இறுமாந்திருந்ததில் ஆச்சரியமில்லை. அவனுக்கு ஈடும், எதிர்ப்பும், சாளுக்கியத்திலிருந்து கிளம்பிற்று. புலிகேசி, போர் தொடுத்தான். தோல்வி கண்டறியாத ஹர்ஷனைத் தோற்கடித்தான். புலிகேசியின் புகழ், இந்த வெற்றியினால் உச்ச நிலை அடைந்ததும், சாளுக்கிய நாட்டுக்குப் பெருமதிப்பு பிறந்தது.

மகேந்திரன், மதிவாணர்களின் தோழன்; இசைவாணர்கட்கு நண்பன்; மாவீரர்கட்குத் தலைவன். பல்லவ நாடு பலவகை வளங்களுடன் விளங்கிடவே, மகேந்திரன், கலை இன்பத்திலே மூழ்கினான். மலைகளைக் கோயிலாக்கினான். காவியரும் ஓவியரும் களி கொள்ளும் விதத்திலே, செல்வத்தை அள்ளித் தந்தான். இன்பபுரியாகத் திகழ்ந்தது பல்லவ நாடு.

பூங்காவை அழிக்கப் புயல் கிளம்புவதுபோல, கலை இன்பத்தில் ஈடுபட்டிருந்த காவலனின் மன அமைதியைக் கெடுக்கவும், பல்லவ நாட்டின் சுதந்திரத்தை மாய்க்கவும், புலிகேசி புறப்பட்டான். தலைநகருக்கு வெளியே சென்று, தாக்க வரும் சாளுக்கியப் படையை எதிர்த்து நின்று பார்த்தான் பல்லவன். முடியவில்லை. பல்லவனின் படை வரிசையைப் புலிகேசி பிளந்திடலானான். களத்திலே நிலைமை மோசமாகிவருவதை உணர்ந்தான் மகேந்திரன். கடைசிவரை அங்கேயே நின்று போரிட்டு, களத்திலே பிணமாவதா, அன்றி வரவிருக்கும் ஆபத்தினின்றும் அந்தச் சமயம் எப்படித் தப்பு

வது என்ற முறையைக் கவனிப்பதா என்று யோசித்தான். ஆவேசத்துடன் போரிடும் சாளுக்கியப் படையிடம் தோற்றால், தோல்விக்குப் பிறகு, வெற்றி வெறியுடன் அப்படை முன்னேறிச் செல்லும்; தலைநகருக்குள் நுழையும். தலைநகரமோ கலைக்கூடம். சிற்பிகளின் சிந்தனைகளைச் சித்திரித்துக்காட்டும் மாடமாளிகைகள்! இசை பயிலும் இடங்கள்! கூத்தர் தங்கும் கூடங்கள்! நல்லற மன்றங்கள்! பள்ளிகள்! இவை எல்லாம் பாழ்படுமே! பல்லவனின் உள்ளமெலாம் அதனையே எண்ணிற்று. எண்ணிடவே, என்ன செய்தேனும் தலைநகரை, கலைக் கூடத்தை, காஞ்சிபுரத்தைக் காப்பாற்றியாக வேண்டும் என்று உறுதி பிறந்தது. ஆம்! காஞ்சிபுரத்துக்குள்ளே சென்று தங்கிவிட வேண்டும். அந்நகர் கலைக்கூடம் மட்டுமல்ல, எதிரி சுலபத்திலே பிடிக்க முடியாத கோட்டையுங்கூட! மதிற் சுவர்கள் பலமானவை.

மகேந்திரன், தன் படை வீரர்களை அழைத்துக்கொண்டு காஞ்சிபுரத்துக்கு வந்து சேர்ந்தான். உள்ளே, முஸ்தீபுகளைப் பலப்படுத்தினான். சாளுக்கியப் படைக்கும் பல்லவப் படைக்கும் இடையே, பலமான மதில்! கலைக்கூடம், கோட்டையாகிவிட்டது. முற்றுகையிட்டான் சாளுக்கியன். காஞ்சிபுரத்தைக் கைப்பற்றுவது அவ்வளவு எளிதானதல்ல என்பதைக் கண்டான். வேட்டைக்காரரிடமிருந்து தப்பி, சிங்கம் தன் குகைக்குள்ளே நுழைந்து கொண்டது போலிருந்தது மகேந்திரன் நிலைமை. இந்திய உபகண்டத்திலே, பல்வேறு இடங்களிலும், தன் பண்பால், உயர் மதிப்புப் பெற்று விளங்கிய காஞ்சிபுர மக்கள், அதுகாலை, கலக்கமடைந்து, காலமெல்லாம் செலவிட்டு கருத்தைச் செலவிட்டு அமைத்த கலைக்கூடங்கள், சாளுக்கியனால் அழிந்துபடுமோ என்று அஞ்சினர். சமணம், பௌத்தம், வைணவம், சைவம் எனும் மதத்துறைகள் ஒவ்வொன்றுக்கும், ஆங்கு பேராசிரியர்கள் இருந்தனர்; பல்கலைக் கழகங்கள் இருந்தன; வணிகர்கள், வெளிநாட்டு வேந்தர்கட்கும் நுண்ணறிவு கூறிய பண்பினர் இருந்தனர்; நாளந்தா, தட்சசீலம் முதலிய வட நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்குப் பேராசிரியர்களைத் தந்து உதவிய,

சான்றோர் மன்றமாக விளங்கிய காஞ்சிபுரம், இனிச் சாளுக்கியப் படைக்கு இரையாவதோ! இதற்கோ இத்துணை எழிலும் செல்வமும், கலையும் உயர்நிலையும் பெற்றோம், வளர்த்தோம் என்றெண்ணி ஏங்கினர்.

சாளுக்கிய மன்னன் புலிகேசி, மகேந்திரன் மருட்சி அடைந்தது கண்டு மகிழ்ந்து, அடியோடு பல்லவ நாட்டை அழித்தொழிப்பதைவிட, அங்கு தனக்குப் பணிந்த நிலையில் பல்லவ மன்னன் இருந்து அரசாள்வது சிறந்தது என்று எண்ணியே, சாளுக்கியம் சென்றான். பல்லவனின் படைபலம் பாழ்பட்டது. செல்வம் குறைந்தது. மதிப்பு மங்கிற்று. தோல்வித் துயரத்தால், பல்லவம் துவண்டுவிட்டது. அதைத்தான் அந்தச் சாளுக்கியன் கவனப்படுத்தினான். பழைய புண்ணைக் கிளறினான்—கிளறியதோடு விடவில்லை—தோல்வியால் துவண்ட பல்லவம், மீண்டும் ஒளிபெற்றது, சைவத்தின் பலத்தினால் என்று கூறுவதன் மூலம், புண்ணிலே வேலும் பாய்ச்சினான். எங்ஙனம் தாங்குவர் இந்த வேதனையை.

சைவம் வெல்கிறது! சைவம் ஓங்குகிறது! வீழ்ந்தது வாதாபியல்ல,வைணவம் வீழ்ந்தது!—என்று பல்லவ நாட்டு வைணவர்கள் பதைபதைத்தனர்.

சாளுக்கியன் எதிர்பார்த்தது நடைபெறத் தொடங்கிற்று. வெற்றிக் களிப்பினூடே வேதனை. ஆனந்தப்பட வேண்டிய மக்களுக்குள்ளே, அச்சம், அருவருப்பு, அவநம்பிக்கை! ஆம்! அவன் எண்ணத்தின்படி, பல்லவ நாட்டுக்குள் தீ மூண்டுவிட்டது—கலகத் தீ!

இது மூண்டுவிட்ட பிறகு, சாளுக்கியனின் மனதிலே, நம்பிக்கை அதிகரித்தது. பரஞ்சோதியாரிடம் பணியாளாக இருப்பவன் என்ற முறையிலே, பலரைக் காணச் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பயன்படுத்திக் கொண்டு, சைவத்தின் மேன்மையை விளக்கும் போக்கின் மூலம் எவ்வளவு அருவருப்பைக் கிளப்ப முடியுமோ அந்த அளவு செய்து வந்தான்.

"என்ன இது?"

"திருநீறு?"

"ராம! ராம!"

"ஏன்? இந்தத் திருநீறு அல்லவா பல்லவ ராஜ்யத்தைக் காப்பாற்றி, நரசிம்ம மன்னனின் பீடம் ஆடாதபடி பார்த்துக் கொண்டது—பாதுகாப்பளித்தது?"

"துடுக்குத்தனமாகப் பேசாதே. ஓய்! வைணவ சிரோன்மணியே! வாயை மூடும்! வாதாபி தீக்கு இரையாகாது இருந்தால் என்ன நேரிட்டிருக்கும்?"

"நேரிடுவது என்ன—என்ன ஐயா! மிரட்டுகிறீர்?"

'நானா? இதுவா மிரட்டல்! உண்மையைக் கண்டு ஏன் நீர் மிரள்கிறீர்?வாதாபி வீழ்ச்சி,பல்லவனின் மீட்சியல்லவா?'

"ஆமென்றே வைத்துக் கொள்வோம்!"

இதிலென்ன தயை! சாளுக்கியப்படையை, சாளிக் கிராமம் தடுத்துவிடவில்லை, ஞாபகமிருக்கட்டும். 'சடாட்சரம்' தடுத்தது. சடாட்சரமோ, பஞ்சாட்சரமோ—எனக்கு அக்கரை இல்லை; எமது நரசிம்ம மன்னர் வெற்றி பெற்றார். வெற்றி பெற்றார் மன்னர், மனமறிந்த பொய் பேசுகிறீர், மாதவன் அடியார் என்று கூறிக் கொள்கிறீர். மன்னனுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தது, இந்தத் திருநீறு. தோல்வியால் துவண்ட பல்லவ நாட்டை வெற்றியால் ஜொலிக்கச் செய்த விசித்திர நீறு! மதிலுக்குள் ஓடி ஒளிந்து மகேந்திரனின் காலத்தை—அவன் மகன் காலத்தோடு ஒப்பிட்டுப் பாரும்! இடையே என்ன காண்கிறீர்? அன்று பரஞ்ஜோதி இல்லை; விளைவு என்ன? படுதோல்வி; இன்று பரஞ்ஜோதி இருக்கிறார். பலன்? பெருவெற்றி! திருநீற்றின் வெற்றி—சிவனருளின் வெற்றி!—சைவத்தின் மேன்மையை ஜெகம் அறியச் செய்தது இந்தப் பிடி சாம்பல்! பூசும் நெற்றியில், வாழ்க்கை வற்றாத வளமுள்ளதாகும். இது சாமான்யத் திருநீறு அல்ல—பரஞ்ஜோதியின் பூஜைக்குப் பயன்படும், பரிமளத் திருநீறு—பகையை ஒழிக்கும் பொடி—பல்லவ சாம்ராஜ்யத்தை நிலை நாட்டிய திருநீறு!

வில்லாளன், விபரீதமான விளையாட்டிலே ஈடுபட்டான். சைவத்தின், மேன்மையை எடுத்துக்கூறுவது மட்டுமல்ல, மதமாற்ற வேலையையே, அதிலும், கட்டாய மதமாற்றக் காரியத்தையே துணிவுடன் செய்யலானான். அவன் தோற்ற சாளுக்கியன்தான்—அடிமை, சந்தேகமில்லை—ஆனால் அவன் 'பெரிய இடத்திலே' படைத் தலைவர் வீட்டிலே அல்லவா பணியாளாக இருக்கிறான். அக்ரமக் காரியந்தான் செய்கிறான்—கட்டாய மதமாற்றம்—ஆனால், அதற்காக அவனைக் கண்டித்தால், தண்டித்தால், அவன் பரஞ்ஜோதியாரிடம் முறையிட்டுக் கொள்வானே!

''என்ன துணிவு உங்கட்கு! எனது மனையிலுள்ள பணியாளைத் தண்டித்தீர்—அது என்னையே கேவலப்படுத்தியதன்றோ! என்ன எண்ணினீர் என்னைப் பற்றி! என் ஆற்றல் தேவைப்பட்டது, புலிகேசியை வீழ்த்த. இன்று என்னை அவமானப்படுத்துகிறீர்-என்று பரஞ்ஜோதியார் சீறினால் என்ன செய்வது. ''நீங்கள் கண்டிக்குமளவு என்ன குற்றம் புரிந்துவிட்டான் வில்லாளன்! திருநீற்றின் பெருமையை எடுத்துக் கூறினதா, குற்றம்! திருநீறு, உமக்குப் பிடிக்கவில்லை. ஆனால் திருநீற்றுக்காரனின் தோள்வலியும், வாள்வலியும் தேவைப்பட்டது நாட்டைக் காக்க,'' என்று வெகுண்டுரைத்தால், என்ன செய்வது என்று கலங்கினர்—மக்கள்—குறிப்பாக,வைணவர்கள். மன்னனிடம் முறையிடவேண்டிய அளவு விவகாரம் முற்றிவிட்டது. மன்னனோ, ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டான்.

''அன்னிய நாட்டானின் துடுக்குத்தனம்.''

''பரஞ்ஜோதியார் இப் பயனற்றவனை ஏன் பணியாளாகக் கொண்டார்?''

''பரஞ்ஜோதியாருக்குத் தெரிந்திராது, இவனுடைய செயல்.''

''ஒரு சமயம், சாளுக்கியன் சைவத்தின் பெருமையை உணர்ந்தது பற்றி அவர் மகிழ்கிறாரோ என்னவோ!''

''அவருக்குத் தெரிந்தேதான், இவன் சைவப் பிரச்சாரத்தை இவ்வளவு துணிவாகச் செய்கிறான் போலும்.''

''பக்க பலமில்லாமல் வெளிநாட்டான் இந்த விபரீதச் செயல் புரிவானா?''

''தன்னைக் கேட்பவர் யார் இருக்க முடியும் இந்த மண்டலத்தில் என்று பரஞ்ஜோதியார் எண்ணுகிறார் போலும்.''

''வாதாபியே அழிந்தது,வைணவர் எம்மாத்திரமென்று எண்ணுகிறாரோ என்னவோ?''

''சைவன் நான்—என் நாட்களிலே, அரசாங்க மத மாகச் சைவம் திகழ்வதுதான் முறை என்று கருதுகிறார் போலும்.''

மன்னனின் செவியில் விழும்படி மட்டுமல்ல, மக்களிடம் பரவுமளவு, விதவிதமாகப் பேசலாயினர், மேலே குறித்துள்ளபடி. சாளுக்கியன் பூரிப்படைந்தான். தீ பரவுகிறது என்றெண்ணி வெற்றிப் பாதையிலே விரைந்து நடக்கலானான். தான் கையாள ஆரம்பித்த முறை பலிக்கிறது என்று தெரிந்ததும், வில்லாளன், அதைத் தொடர்ந்து நடத்தலானான்—அவன் மட்டுமல்ல—அவன் துவக்கினான், பல சைவர்கள், அவனைத் தொடர்ந்தனர். எங்கும் சைவத்தின் மேன்மையைப் பற்றியே பேச்சாகிவிட்டது. வைணவர்களின் முறையீடு, மன்னன் செவி புகுந்தது, அவன் தீவிரமாக யோசிக்கலானான்.

**கை**லைநாதனின் கட்டளையை உனக்குக் கூற வந்தேன்—காடு மலை வனம் கடந்து. கருத்தறியாது நீ செய்யும் காரியத்தினால், உனக்கு நேரிட இருக்கும் சர்வநாசத்தினின்றும் நீயும், உன் ராஜ்யமும், குலமும், தப்ப வேண்டுமானால், பாபத்தைத் துடைத்துக் கொள்ள வேண்டுமானால், நரசிம்ம மன்னனே! நமச்சிவாயத்தின் நல்லதொண்டனாம் பரஞ்ஜோதியை, நரவேட்டையாடும் பழிப்பணியிலே புகுத்தும் செயலை நிறுத்து இன்றே—இல்லையேல்—சொல்லக்

கூசுகிறேன் மன்னவா! எல்லையற்ற பரம் பொருளின் பக் தனை, இழி தொழிலில் புகுத்தும் பாபம், உன்னைச் சும்மா விடாது!

மதலைக்கு மதுவினைத் தருபவள் தாயல்ல, பேய்! மகேந்திரன் மகனே! மாசிலாமணியாம் ஈசனார்க்குத் தொண்டராக உள்ள பரஞ்சோதியை, 'வெட்டு குத்து' வேலைக்கு அனுப்பும் உன்னைக் கண்டு, உலகின் முதல்வன், கோபிக்கிறான்—சபித்திட முடிவு செய்துள்ளான்.

நீ வெற்றி பல பெறுவதற்காக, உன் கீர்த்தி பரவுவதற் காக, உன் ராஜ்யம் வளர்வதற்காக, உன் எதிரிகளை ஒழிப் பதற்காக, பரஞ்ஜோதியை-பக்தனை—சிவத் தொண்டனை வேலை வாங்குகிறார்—பசுவைக் கொன்று தின்பது போன்ற பாபக்கிருத்யம் அது—வேண்டாம்,பல்லவ குலாதிபா!பராக் கிரமம் உனக்கு இருந்தால், போரிலே நீ வெற்றி பெறு, இரவல் கேட்காதே—அதிலும் இறைவன்பால் தொண்டு செய்யும் எமது பரஞ்ஜோதியைப் பாழ்படுத்தி, வெற்றியை நாடாதே.

உண்மையை உன் உள்ளம் உணரவில்லையா! உன் தகப்பன் மகேந்திரன் சாளுக்கியனிடம்தோற்றான்—வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு பரஞ்ஜோதியுடைய தல்ல, உன் பொறுப்பு! தவறினாய்! தயாபரனின் தொண் டனைத் தவறான பாதையிலே திருப்பினாய்.

என்ன யோசிக்கிறாய்! பரஞ்ஜோதி இல்லாப் பல்லவ நாடு, நீரில்லா ஆறாகுமென்றா? பேஷ்! இதற்கு நீ ஏன் பல்லவ மன்னன் என்ற பட்டத்தைச் சுமக்கிறாய். பட்டம் உனக்கு; அரசபீடம் உனக்கு! கஷ்டமும், நஷ்டமும் பரஞ் ஜோதிக்கா! கைலைவாசன் உன்னைக் கேட்கிறான், முற் றிடா முன்னம், பழிவழியைவிட்டு நேர்வழி நடந்து, பாபத் தைப் போக்கிக் கொள். பரஞ்ஜோதியைச் சிறையிலிருந்து விடுதலை செய்—உன் அரண்மனை அவனுக்குச் சிறைதான்; சந்தேகம் இல்லை. நீ தரும் அந்தஸ்து—பொன்விலங்கு; வேண்டாம் அவை. விடுதலை செய், விமோசனம் வேண்டு

மானால் படைக்கு வேறு தலைவனைத் தேடு—பரஞ்ஜோதிக்கு வேலை இருக்கிறது, ஊர் கொளுத்துவது அல்ல அவன் வேலை.

ஊராள நீ! ஊர்பிடிக்க பரஞ்ஜோதி! பல்லவனே! இது உன் பரம்பரை நியாயமோ? வீரர் வழி வந்தவனே, விடுதலை செய். இல்லையேல், விண்ணவன் விடும் சாபம் உன்னையும், உன் பின் சந்ததியையும் இலேசாய்விடாது.

மேனி எல்லாம் திருநீறணிந்த அந்தச் சாது, மிக்க சீற்றத்தோடு, பேசினார் இதுபோல—பேசினாரா—கட்டளை பிறப்பித்தார்—கைலைநாதன் மீது ஆணையிட்டுக் கூறினார். காவலன் துளியும் பதறாமல், சீறாமல் அவர் உரையைக் கேட்டுக் கொண்டான்—இடையிடையே புன்சிரிப்புடன்.

மன்னன் கோபிக்குமளவு, கடுஞ்சொற்களை வீசிய காவி அணிந்தோர், புயலை எதிர்பார்த்து ஏமாந்தார். மன்னனைத் தன் கேலி மொழியால், கோபப் பார்வையால், ஆர்ப்பரிப்பால், தாக்கினான். குன்றெடுக்கும் நெடுந்தோளனாகிய நரசிம்மப் பல்லவன்,சாந்தத்துடன் வீற்றிருந்தார்—குறுக்குக் கேள்வி—கோபக்குறி—வெறுப்பு—ஏதுமின்றி கேட்டுக் கொண்டார், வசை மொழிகளை.

மன்னனின் போக்குக் கண்டு, சாதுவுக்குக் கடுங் கோபமே பிறந்தது.

''நாடாளும் உன்னை நேரிலே, வாயில் வந்தபடி ஏசுகிறேன். அவமதிப்பாகவே பேசுகிறேன்! ஆடாமல் அசையாமல், பதறாமல், சீறாமல், அவ்வளவையும் கேட்டுக் கொள்கிறாயே—ஏன் கோபிக்க மறுக்கிறாய்—ஏன் என்னைத் தண்டிக்காமலிருக்கிறாய்—வா, போருக்கு!'' என்று, மன்னனை மல்லுக்கு இழுத்தது, அந்தச் சாதுவின் பார்வை! அவன், உண்மைச் சாதுவாக இருந்தால்தானே! அவனுடைய அன்றையப் போக்கு ஆச்சரியமூட்டுவதாகக் கருதலாம்—அவன் சாளுக்கியன்—சாதுவல்ல! சாதுபோல வேடமணிந்து வந்து,

சைவத்தின் பெயரைக் கூறி, சாம்ராஜ்யாதிபதியை மிரட்டி னான் வில்லாளன். வேந்தன், வெகுண்டானில்லை. ''ஆவன செய்வோம், அறனடியாரே! ஆவின் பாலும், முக்கனியும் அரண்மனை விருந்து மண்டபத்திலே தயாராக உள— வாரும்'' என்று அன்புடன் அழைத்தான்.

''நாம் வந்தது நாவின் ருசிக்காக அல்ல! நாதன் கட்ட ளையை நாடாளும் உமக்கு அறிவிக்கவே வந்தோம்—இனிச் செல்கிறோம்'' என்று கூறிவிட்டு, சாது வேடத்திலிருந்த சாளுக்கியன் போய்விட்டான். அவன் போன பிறகு, நெடு நேரம் வரையில் மன்னன் சிரித்தான்.

''அரசனிடம் யாரோ ஒரு சாது வந்து, ஏதேதோ பேசினானாம்.''

''மிரட்டினானாம்.''

''சாபக் கொடுப்பேன் என்று கூறினானாம்.''

''மன்னன் மனம்மாறி, அவன் கட்டளையை நிறை வேற்ற இசைந்துள்ளாராம்.''

''சபை கூட்டுகிறாராமே!''

சாது—சாம்ராஜ்யாதிபதி சந்திப்பிற்குப் பிறகு, அரண் மனை முக்யஸ்தர்கள் இதுபோல் பேசிக் கொண்டனர். அவர் கள் கூறியபடி, அரச அவை கூடிற்று. மன்னன் நரசிம்மப் பல்லவன், வைணவர்கள் முறையீடு பற்றியோ, வம்பு பேசிய சாதுவைப் பற்றியோ பிரஸ்தாபிக்கவில்லை.

அவையில், அன்று விசேஷ அலங்காரங்கள் செய்யப்பட் டிருந்தன. மன்னனின் வருகைக்கு முன்பே, சபை கூடிவிடு வது முறை—அன்று சபைக்கு, மன்னனே முதலில் வந்து சேர்ந்தான். சபையில், பரஞ்சோதியாருக்கு வழக்கமாகத் தரப்படும் ஆசனத்தை எடுத்துவிட்டு, வேறோர் விலை உயர்ந்த ஆசனம் அவருக்காகப் போடச் செய்தான். வழக்கமான விசாரணைகளை அன்று நிறுத்திவிட்டான். பரஞ்ஜோதியார் சபை வந்ததும், தழுவிக் கொண்டான்.

சபை ஆரம்பமாயிற்று. மன்னன், ஆசனத்திலிருந்து எழுந்து நின்றபடி பேசினான், தழுதழுத்த குரலில்.

''ஆஹா! அபசாரம், அபசாரம்! என்ன காரியம் செய்தேன்! சிவனடியாராகிய தங்களை, சிவத்தொண்டில் ஈடுபட்டு, மெய்ஞான போதகனின் அருளைத் தேடும் அவாக் கொண்ட மெய்யன்பராகிய தங்களைப் பாவியேன், படுகொலைத் தொழிலிலல்லவா இதுநாள் பரியந்தம் ஈடுபடுத்தி வைத்தேன். இறைவனின் கோபத்துக்கு இலக்கானேன். என்னே என்மதி! தங்கள் பெருமையை முற்றும் உணராது இருந்தேன்!''

''மன்னரே! ஏன் இந்த மனக்கலக்கம்? மண்டலாதிபதியாகத் தங்களின் சேவையில் நான் மனமுவந்து ஈடுபட்டவனன்றோ...!''

''எனக்கா சேவை! தாங்களா! தகுமா தவச்சிரேஷ்டரே! தங்களைச் சேவை செய்யச் சொல்வதா! நானா! என்ன விபரீதமான காரியம்? மன்னாதி மன்னர்களெல்லாம் தங்கட்குச் செய்தலன்றோ முறை...''

''அரச சேவை, என் கடமைதானே!''

''உமக்கு அரசன் யானோ! திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளன்றோ!''.

''அவன் அண்டசராசரங்கட்கும் ஐயன்! ஆயினுமென்ன காவலா! நான் போர்த் தொழில் புரிவதை மேற்கொண்டேன். தங்களவையில் இடம் பெற்றேன். அன்பும் ஆதரவும் பெற்றேன். மன்னருக்காகப் பணிபுரிவது, அந்த மண்டலத்து வாழ் மக்களின் கடமைதானே? அந்தக் கடமையை, நான் களிப்புடன் ஆற்றினேன்.''

''கலக்கமடைகிறேன், கங்கையைத் தலைக்கணிந்த கடவுளின் திருத்தொண்டரை, யான், 'வேலை' வாங்கும் 'பாப' காரியத்தில் இதுவரை ஈடுபட்டதை எண்ணி.''

''வீண் வேதனை அடைகிறீர் வேந்தரே! நாட்டுக்குப் பணியாற்றுவது நல்லோர் கடமை. நான் அஃதன்றி வேறென்ன செய்தேன். என்றும் அப்பணி புரிவதே என் விருப்பம்; முறையுங்கூட.''

''முறையன்று, அறமுமன்று. சைவ மெய்யன்பராம் உம்மை, அறியாது போனேன். பெரும்பழி தேடிக் கொண்டேன். இப்போதுதான் உணர்ந்தேன் உமது பெருமையினை. அமைச்சரே! சீலராம் பரஞ்ஜோதியாருக்கு மானியமாக்கிய ஊர்ப் பெயர் குறிக்கப்பட்ட செப்புப் பட்டயம் எங்கே? பெற்றுக் கொள்க, பெருநெறி கண்டவரே, பிழை பொறுத்தருள்க!''

''மன்னரே! தாங்கள் மனமுவந்து அளிக்கும் இந்த மானியம்...''

''பேழையில் பொற்கட்டிகள் உள்ளன. பெருந்தகையீர்! ஏற்றுக் கொள்க!''

''என்னே மன்னரின் கொடைத்திறன்! ஏனோ எனக்கு இத்துணை செல்வம்?''

''சைவச் செல்வரே! பெருநிதியன்று யான் அளித்தது''

''பெருநிதியன்றோ! மன்னரே! தங்கள் ஆதரவு பெற்று அவையில் அமர்ந்த அன்றே யான் பெருநிதி பெற்றவனானேன். என் அரசர்க்குப் பணிபுரியும் பேறு கிடைத்ததே பெருநிதியன்றோ! ஏதோ, தங்களின் வலிமைமிகுந்த படை பலத்தைக் கொண்டு, புலிகேசியைத் தோற்கடித்தேன். இச்சிறு செயலுக்கு எவ்வளவு பரிசு! என்னென்ன வகையான உபசாரம்!''

''உபசாரமென்று உரைத்திட வேண்டாம் உத்தமரே! என் காணிக்கை இவை.''

''மன்னா! யான் உமது படைத்தலைவன்-பரிசு இவை-என் பணிக்கு மெச்சி.''

''பரிசு அல்ல! தாங்கள் பணியாளரல்ல! படைத்தலைமையல்ல, தங்கள் தகுதிக்கும் தவத்துக்கும் ஏற்ற நிலை. பரஞ்ஜோதியாரே! பல்லவ சாம்ராஜ்யத்தின் கீர்த்தி மிக்க படைத்தலைவர் என்ற நிலையிலே, பாவியேன், ஒரு பரம பக்தரை, சைவ அன்பரைச் சிறைப்படுத்தி வைத்திருந்தேன். இறைவனின் அன்பனை, இரக்கமற்ற போர்த் தொழிலிலே புகுத்தினேன். இன்று அந்தத் தவறை உணர்ந்தேன். இனித் தாங்கள், எல்லையற்ற இன்பம் தருவதும், இகபரசுகத்துக்கு ஏதுவாவதும், தங்கள் இருதயத்துக்கு இன்பமூட்டுவதுமான சிவத்தொண்டு செய்து கொண்டு சுகமே வாழ்வீராக!

''வேந்தே! இதென்ன வார்த்தை! இதன் பொருள் என்ன? இனி நான் அரச அவையில்...''

''அரச அவையில் என்றும் நீர் ஓர் மணிவிளக்கு. ஆனால்...என் படைத்தலைவன் என்ற சிறுதொழில் புரியச் சொல்லிப் பழி ஏற்க மாட்டேன்.''

''படைத் தலைவனாக இனி நான்...''

''அதனை நான் அனுமதிப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும்! தாங்கள் இருக்க வேண்டிய இடம் வேறு! வேந்தர் சபையிலே வேலை தாங்கும் வேலையல்ல, விழி மூன்றுடையோனின் சேவை செய்து விளங்க வேண்டும் தாங்கள்.''

பரஞ்ஜோதி திகைப்படைந்தார்—பிரதானியர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை—வைணவர்கள், புன்சிரிப்பை அடக்கிப் பார்த்தனர், முடியவில்லை—மன்னன், அவையைக் கலைத்துவிட்டு, அரண்மனைக்குச் சென்றுவிட்டான்.

பரஞ்சோதியார் வாழ்க!

சைவம் ஓங்குக!

நரசிம்மப்பல்லவன் வாழ்க!

நாதனின் நற்தொண்டன் வாழ்க!

என்று நகரெங்கும் முழக்கம். மன்னனின் கனவிலே ஈசன் பிரத்யட்சமாகி இட்ட கட்டளையாம் என்று தெளிவற்றவர்கள் பேசினர். அதுவே நகரெங்கும் பரவி விட்டது—பகுத்தறியக்கூடியவர்கள், இதைத் தடுக்க முடியவில்லை.

பரஞ்ஜோதியார் தமது மாளிகை சென்றார் மனவாட்டத்துடன்.

மன்னன் மதிமிக்கவன்! எதிர்பார்த்ததைவிட, அதிகத் திறமையாகவே காரியத்தைக் காவலன் முடித்துவிட்டான். சைவத்தவ வேடதாரியின் மொழி கேட்டு, மன்னன் மிரண்டே போனான் போலும். உண்மையிலேயே பழியும் பாவமும் தன்னைப் பற்றிக் கொள்ளும் என்று கருதினானோ என்று வைணவமார்க்கத்தவர் பேசிக் கொண்டனர்—சைவத்துக்கு, அரச அவையிலும் அதன் மூலம் நாடெங்கும் ஏற்பட்ட செல்வாக்கு இனிச் சிதைந்தொழியும் என்று எண்ணி மகிழ்ந்தனர். வைணவத்துக்கு நேரிட இருந்த விபத்து, தவிர்க்கப்பட்டது என்று களித்தனர்.

சிவபக்தன், ஆகவே சேனாதிபதியாக இருக்கக்கூடாது, இருப்பது மகாபாவம் என்று மன்னர் கூறுகிறார். எதிரிகளை ஒழித்தவன், இணையில்லாப் போர்வீரன், படைகளை நடத்திச் செல்வதிலே, திறமைமிக்கோன், இனி இவனால் பல்லவ சாம்ராஜ்யத்தின் புகழ் திக்கெட்டும் பரவும் என்று மக்கள் பூரிப்புடன் பேசிக் கொண்டனர். மன்னனோ! பொன்னும், பொருளும், பூமியும் கொடுத்து, வாளையும் கேடயத்தையும் பறித்துக் கொண்டான். ஏன்? என்ன நோக்கம்? சிவத்தொண்டு புரியத்தான் வேண்டும். ஆமாம், நானே அதனை அறிந்துதான் இருக்கிறேன். அத்தொண்டு செய்வதற்கும், நாட்டைக் காத்திடும் நற்தொண்டு புரிவதற்கும் எப்படி முரண் வந்து சேரும்.

என் ஐயன், எதிர்த்தோரை அழிக்காமல் விட்டவனல்லவே! திரிபுராந்தகனல்லவோ! அவர் அடியவனாம் நான், போர்த் தொழிலில் ஈடுபடுவது, சிவ நெறிக்குத் தகுதியல்ல என்றார் மன்னர்! என் செவியில் அச்சொல் வீழ்ந்தபோது,

திகைத்தேன். அந்தத் திகைப்பு இன்னமும் மாறவில்லை; எப்படி மாறும்?

நானே, மறுத்துப் பார்த்தேன். இறைவனுக்கு ஆற்ற வேண்டிய தொண்டு போலவே, என் அரசனுக்கும் பணி புரிவதேயன்றோ முறை என்று வாதாடினேன். மன்னன் தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

தமிழகம் வாதாபியின் வீழ்ச்சியைக் கேட்டுக் களித்தது. வாதாபி...என் வெற்றி...கடைசியில் அந்த வெற்றி... என்னை அரச அவையிலிருந்து விரட்டிவிடவா பயன்பட்டது! அவனுக்கு அடியவனாக இருந்து வருபவன். ஆகவே இங்கு வேண்டாம்! யாரும் கேட்டறியா வாதம்! எதிர்பாராத விபத்து! ஏன்? என்பால் மன்னருக்கு என்ன கோபம்? வெறுப்புக்குக் காரணம் இல்லையே. பேழையும் பொற்கட்டிகளும் மானியமும் அளித்தார் மன்னர்; அளித்து, என்னை 'பஜனை' செய்யச் சொல்கிறார்!

பரஞ்ஜோதி, பரமபக்தன்! சிவத்தொண்டு புரியும் செம்மல்! சிவனருள் காரணமாகவே, வாதாபியில் வெற்றி கிடைத்தது என்றனர் அமைச்சர். ஏன், அதே சிவனருள் அதன் பயனையும், என் மூலமாகவே மன்னன் அடையக் கூடாது? இதுவரை போர்த் தொழிலிலேயும் ஈடுபட்டபடி, சிவத்தொண்டும் செய்துகொண்டு, சிவனருளைப் பெற என்னால் முடிந்தது—அமைச்சர் கூறி அரசனும் ஒப்பின மொழிப்படியே யோசிக்கும் போது, அங்ஙனமிருக்க, எப்போதும் போலவே, அரச அவையில் இருந்து ஆற்ற வேண்டிய பணியினையும் செய்து கொண்டே என்னால் அதே சிவத்தொண்டில் ஈடுபட்டிருக்க முடியாதா! மன்னரின் நோக்கந்தான் என்னவோ!

பலப்பல எண்ணினார் பரஞ்ஜோதியார். காலைமுதல் மாலை நெடுநேரம் வரையில், இதே சிந்தனை—''விரட்டப்பட்டோம்'' என்பதுதான், அவருடைய சிந்தனையின் முடிவு. ஏன் என்று யோசித்தார்—அவருடைய முகத்திலே புன்னகை பூத்தது. மெள்ள வாய்விட்டுக் கூறினார், ''பாபம்! பீதி! பாபம்! பரிதாபம்!'' என்று.

வைணவர்கள், விழாக் கொண்டாடினர், இரகசியமாக-பரஞ்ஜோதி தொலைந்தான் அரச அவையைவிட்டு என்று களித்து. சைவர்கள், பகிரங்கமாகவே விழாக் கொண்டாடினர், மன்னன் சைவத்தின் மேன்மையை உணர்ந்து, சிவபக்தராம் பரஞ்ஜோதியாரை, சிவத்தொண்டு புரிக என்று கூறி விட்டான்—இனிச் சைவம் கொழிக்கும் எதிரிப் படைகள் முறிந்ததுபோல. எமது சைவத்துக்கு எதிராக உள்ள மார்க்கங்கள் அழிந்துபடும் என்று பெருமையுடன் பேசிக் கொண்டனர். மன்னன், அரண்மனைத் தோட்டத்திலே, தனியாக உலவ அமைக்கப்பட்டிருந்த மணி மண்டபத்திலே, உலவிய வண்ணம், ஏதேதோ எண்ணிக் கொண்டே இருந்தான். இடையிடையே மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தான். இருள் சூழ்ந்தது. பணியாள், விளக்கு ஏற்றி வைத்து விட்டுப் போய்விட்டான். விளக்கை அடிக்கடி தூண்டி விட்டுக் கொண்டே மன்னன் உலவினான்—அவன் மனதிலே உலவிய எண்ணங்கள்; அவை இவை.

''அப்பா! மிகமிகச் சிரமப்பட வேண்டி இருந்தது. சிக்கலான காரியம்! பரஞ்ஜோதி துளியும் எதிர்பார்த்திருக்க முடியாது. தெரிந்து கொண்டும் இருக்க முடியாது. ஒரே திகைப்பு.

ஆனால் என்ன செய்வது! ஓங்கி வளருகிறது அவன் கீர்த்தி, ஒப்பற்ற வீரன் பரஞ்சோதி என்று மண்டலமெங்கும் பேசுகிறார்கள் சகலரும்—ஆமாம்! இடையிடையே ஒப்புக்கு ஒரு மொழி என்னைப்பற்றி வருகிறது. இதற்கு நான் ஏன் மன்னனாக இருக்க வேண்டும்! மண்டலம் புகழ்வது வாதாபியை வென்றவனை! மண்டலத்துக்கு நான் மன்னன்! அலங்காரப் பொம்மை! செ! அந்த நிலையில் மகேந்திரன் மகன் இருப்பதா! படைத்தலைவன் பரஞ்ஜோதியைக் கொண்டுதான், பல்லவ மன்னன் தன்னைத் தமிழருக்கு அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலைமை பிறந்தது. நரசிம்மன் யார் தெரியுமோ? வாதாபியை வென்ற வீரர் திலகம். பரஞ்ஜோதியார் வாழும் பல்லவ நாட்டுக்கு மன்னன்!

படைத்தலைவன் முதலில், பல்லவ மன்னன் பிறகு! மன்னன் மண்பொம்மை, பரஞ்ஜோதி; அதைக் காட்டும் விளக்கு!

பரஞ்ஜோதியாக இருக்க இசையலாம், யாரும்! பரஞ் ஜோதியின் புகழ் ஒளிமுன், மின்மினி போன்று மன்னவன் என்ற பட்டத்தை மட்டும் தாங்கிக் கொண்டிருக்க யாருக்கு மனம் இடங்கொடுக்கும்?

எங்கே போர் மூண்டாலும் இனி, என்ன பேசுவர். ''பல்லவனுக்குப் பயமில்லை. பரஞ்ஜோதியார்இருக்கிறார்'' என்று கூறுவர். என் அரசு, அவருடைய ஆற்றலை அரணா கக் கொண்டுதான் நிலைக்க முடியும் என்ற நிலை! எத்தனை மண்டலங்களிலே இதுவரை கேலி மொழி பேசினரோ, யான் என்ன கண்டேன்.''

''பல்லவன் ஏன் போருக்குத் துள்ளுகிறான் தெரியுமா? பரஞ்ஜோதி இருக்கிற தைரியம்!''

''எனக்கும் ஒரு பரஞ்ஜோதி கிடைத்தால் நானும் நர சிம்மப் பல்லவன் போலப் பெருமை அடைந்துதான் இருப் பேன்'' என்றேல்லாம் பேசி இருப்பர். என் மண்டல மக்க ளும் அதே மனப்போக்கைக் கொண்டுள்ளனர்.

பல்லவன்—பரஞ்ஜோதி—இரு பதவிகளில்! என்னைக் கேட்டால், பரஞ்ஜோதிப் பதவியே மேல் என்பேன்!

இரு 'அரசு' ஏற்பட்டுவிட்டது. ஆம்! ஆற்றலரசனாகி விட்ட பரஞ்ஜோதி ஓர் அரசர்! அரசர் மகனானதால் அரசனான் நானே ஓர் அரசன்! ஒரு மண்டலத்தில் இரு அரசர்களா? கூடாது! நிலைக்காது!!

ஆகவேதான், அவர் விலகுவதால் நஷ்டம் என்றபோதி லும் விலக்கவேண்டி நேரிட்டது. மண்டலம் பலவற்றை, அந்த மாவீரனுடைய துணையால் பெறலாம்! ஆனால் என்ன பலன்? புது மண்டலங்கள், பழைய மண்டலம், இரு இடமும், என்னை மட்டுமல்லவே, அவரையும்தானே, அரச ராகக் கொள்ளும்! பல்லவ சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தப்

37825
MARAIMALAI ADIGAL

படைத்தலைவர் பரஞ்ஜோதியால் முடியும்! ஆனால் சாம் ராஜ்யம் மட்டுந்தானா விரிவாகும், அவருடைய கீர்த்தியும், செல்வாக்கும் கூடத்தான் வளரும்! ஓங்கி வளரும்! என்னை மறைக்குமளவு வளரும்! அரசனைக் கேலிச் சித்திரமாக்கும் அளவுக்குப் படைத்தலைவனின் புகழ் பரவும்! செ! அந்த நிலையை நரசிம்மன் விரும்ப முடியுமா? பரஞ்ஜோதியில்லாப் பல்லவ சாம்ராஜ்யத்தை நான் ஆளவேண்டும்—அரசன் என்ற பெயருக்கு அப்போதுதான் நான் அருகதையுள்ளவனாவேன்.

ஆமாம்! நரசிம்மன் அரசனாகவும், பரஞ்ஜோதி படைத் தலைவராகவும் இருந்தால், மன்னன் என்ற நிலையே மங்கும். மங்குவதோடு முடியுமா? அந்த மாவீரன் மனதிலே மாசு இல்லை. ஆமாம்! இன்று இல்லை! மாசு உண்டானால்? ஆசை ஏற்பட்டால்? மங்குவதுமட்டுமா, அந்த மாவீரன் மனதிலே, மகுடத்தின்மீது ஆசை பிறந்தால்,நரசிம்மன் சிரத்திலே இருக்கும் நவரத்தின கிரீடம்...ஆமாம்...பறிக்கப்பட்டும் விடக்கூடும்...படைத் தலைவர்கள் பட்டத்தரசர்களை வெட்டி வீழ்த்திக்கூட இருக்கிறார்கள்!

பரஞ்ஜோதி அப்படிப்பட்டவரல்ல! ஆனால் எப்படியோ எதிர்காலம்! இன்னும் இரண்டோர் வெற்றிகள் வாதாபி வீழ்ந்ததுபோல் வேறு சில பல நகர்கள் வீழ்ந்து, வெற்றிமாலை மேலும் பல, அவர் மார்பில் வீழ்ந்தால், எண்ணம் எப்படி எப்படி மாறுமோ! என்னென்ன தூவுவரோ, சதி செய்யும் தந்திரக்காரர்? யார் கண்டார்கள்!

கொஞ்சும்போதே கிளி கடித்துவிடுகிறதே கோதையர் இதழை! மன்னனாம் எனக்குள்ள புகழை மிஞ்சிடும் புகழ் பெற்ற மாவீரன் பரஞ்ஜோதியின் கூர்வாள், புகழின் சின்னம் இன்று. நாளை அதுவே புரட்சிக் கருவியாக மாறினால்...

பொறாமையா எனக்கு? இல்லை! இருக்காது!—அப்படியும் திட்டமாகச் சொல்வதற்கில்லையே.

அன்றோர் நாள் பவனி வந்தேன்... ''பல்லவ சாம்ராஜ்யாதிபதி, நரசிம்ம மகாராஜாதிராஜர் வாழ்க!'' என்று பெருந்திரளான மக்கள் அன்புடன் ஆரவாரம் செய்தனர். அதே மக்கள், அடுத்த விநாடி அவரைக் கண்டதும் ''புலிகேசியை வீழ்த்திய ஈடில்லாத் தலைவர், எமது பரஞ்ஜோதியார் வாழ்க!'' என்று ஆரவாரம் செய்தனர்.

என்ன இருந்தாலும், எனக்கு உரைத்த வாழ்த்தொலியை, பரஞ்ஜோதியாருக்கு அளித்த வாழ்த்தொலி வென்று விட்டது!

நான், பல்லவ சாம்ராஜ்யாதிபதி! அவ்வளவுதான் சொன்னார்கள் மக்கள்.

அவரை? எமது பரஞ்ஜோதி என்றல்லவா அழைத்தனர்.

எனக்கு இலேசாகக் கோபம்! பொறாமை, கொஞ்சம் உண்டாயிற்று—மறைப்பானேன். கொஞ்சம் அச்சம்கூடத் தான். அருவருப்பும் தட்டிற்று, அடிக்கடி மக்கள் வெற்றி வீரன், வாதாபியை வென்ற தீரன் என்றெல்லாம் அவரைப் புகழக் கேட்டு.

மன்னனும் மனிதன்தானே! மனம் நிம்மதியாகவா இருக்க முடியும் மன்னன், மக்களின் மனம், படைத் தலைவனிடம் அடைக்கலம் புகுவது கண்டு?

பரஞ்ஜோதியாரிடம் எனக்கும் மதிப்புத்தான். இல்லை என்று யாரும் கூற முடியாது. ஆனால், அவர் அருகே இருக்கும்வரை, நான் அரசனாக இருக்க முடியாது. நரசிம்மன் அரசனாக வேண்டும்! பரஞ்சோதியில்லாமல், பல வெற்றி பெற்றாக வேண்டும். பல்லவ மன்னனிடம் ஒரு படைத்தலைவன் இருந்தான், பரஞ்ஜோதி அவன் பெயர், என்று வரலாறு இருக்க வேண்டுமேயொழிய, பரஞ்ஜோதியை படைத்தலைவராகக் கொண்ட பல்லவ மன்னன் ஒருவன் இருந்தான்; அவன் பெயர் நரசிம்மன் என்று வரலாறு இருத்தலாகாது.

ஆகவேதான் அவரை நீக்கிவிட்டேன்.

நல்ல வேளை! சைவ—வைணவ மாச்சாரியத்தைக் கொண்ட அந்தப் பிரதானியர்கள் கிடைத்தனர். அவர்கள் சொன்ன யோசனையும், தக்கதோர் உதவியாக அமைந்தது.

காரணமின்றி அவரை நீக்கியிருக்க முடியாது—கலகமே பிறந்துமிருக்கும். சைவர் என்ற துவேஷத்தால் வைணவ மன்னர், பரஞ்ஜோதியை விலக்கிவிட்டார் என்று வதந்தி பரவினால், வீண்வம்பாகும். அவரை சிவத்தொண்டு புரியச் செய்துவிட்டேன்! அதுவே சரியான முறை! பரஞ் ஜோதியாரை, படைத்தலைவர் பதவியிலிருந்து விலக்கிவிட்டு மட்டும் இருந்தால், ஆபத்து வேறு உருவில் வரக்கூடும்! ஆமாம்! எந்த மண்டலமும் அவர் வரவை ஆவலோடு எதிர் பார்க்கும். சென்றால் பல்லவ சாம்ராஜ்யம் சிதையும்.

இப்போது நிர்ப்பயம்! பரஞ்ஜோதியார், வாளெடுத்துத் தன் வல்லமையை நிலைநாட்டி, வளரும் புகழ் மேலும் ஓங்கச் செய்து, என் புகழையும் மங்கச் செய்ய முடியாது; வேற்றூர் சென்று என் மனதை மருட்டவும் முடியாது! அவர் இனிச் சிவத்தொண்டு புரிந்து வருவார்! இங்கே என் விருப்பத்தின்படி, பல்லவனின் படை இருக்கும். போரில் வெற்றியும் கிடைக்கும்! தளபதி யார்? பரஞ்ஜோதியல்ல. மன்னனை மிஞ்சும் ஜோதியல்ல, நானாகப் பார்த்து உண் டாக்கும் 'ஜோதி' இருக்கும்.

ஆம்! நரசிம்மனின் வீரத்தையும், புகழையும் இழக்காம லிருக்க வேண்டுமானால், நரசிம்மனின் படை, தலைவர் பரஞ்ஜோதியாரை இழக்கத்தான் வேண்டும். மணி முடி தரித்த எனக்கு மன்னனுக்குரிய வீரம், கீர்த்தி கிடைக்க வேண்டுமானால், பரஞ்ஜோதியார் மடம் புகுந்தாக வேண் டும். ஆகவேதான் அவரை மடத்தில் சென்று மகேஸ்வரனைத் தொழுமாறு கட்டளையிடவில்லை—வேண்டிக் கேட்டுக் கொண்டேன்—வென்றேன்; மன நிம்மதியும் பெற்றேன்—வாழ்ந்தேன்.

விளக்கொளி மங்கலாயிற்று. உலவிக் கொண்டே நரசிம்மப் பல்லவன், நிழலுருவத்தைக் கண்டான்—சிரித்

தான்—விளக்கைத் தூண்டிக் கொண்டே, "பரஞ்ஜோதி! எனக்கு ஒளி கொடுக்க ஒரு ஜோதி வேண்டாம்! என்னால் தூண்டிவிடப்பட்டு, ஒளிவிடும் ஜோதி போதும்" என்றுகூறிக் கொண்டே, அரண்மனை உட்பகுதிக்குச் சென்றான். காற்று வீசி, விளக்கு அலைந்தது; எண்ணெய் குறைந்தது; தூண்டி விட ஆளில்லை, விளக்கு படர்ந்து போய்விட்டது—எங்கும் இருள்மயம்!

சேனைத் தலைவர் சிவபக்தரானார்-மாளிகை, காட்சிப் பொருளாக்கப்பட்டது—மடத்தில் குடி ஏறினார் பரஞ்ஜோதி—சாளுகியன், அந்தக் குடிபுகு விழாவை வெற்றி விழாவாகக் கொண்டாடினான். சின்னாட்கள், பரஞ்ஜோதியின் புதிய கோலத்தைக் கண்டு களிப்பதிலே செலவிட்டான். மடத்திலே புகுந்த படைத் தலைவரின் செயலைப் பலரிடம் பாராட்டிப் பேசினான். சிவநெறி புகுவோர் சிலர், பரஞ்ஜோதியாரைப் போலக் கொலைத் தொழிலாம் படைத் தொழிலை விட்டு விலக வேண்டுவதே முறை என்று கூறினான். பரஞ்ஜோதியின் பண்டாரக் கோலத்தைக் கண்டு ஏற்கனவே மயக்கமடைந்தவர்கள், வில்லாளனின் தூண்டுதலால், அடியோடு மயக்கமுற்று, ஆளுக்கோர் மடம் தேடிக் கொள்ளலாயினர். படைத் தளபதிகள் பலர், மடம் புகுந்தனர்—களத்திலே அவர்களைக் கொல்வதைவிட, அவர்களை வாழ அனுமதித்து, அதேபோது அவர்களின் ஆற்றலைப் பயனற்றதாக்கிவிடுவது சிறந்தது. நாகத்தை அடித்துக் கொல்லலாம்; இல்லையேல், அதன் நச்சுப் பல்லைப் பெயர்த்தெடுத்துவிட்டுப் பெட்டியில் போட்டு வைக்கலாம்; ஆடவைத்துக்கூட மகிழலாம்-அதுபோல,சாளுக்கியத்தை அழித்த படைவீரர்கள், அவர்களின் தலைவன் பரஞ்ஜோதி மடம் போய்ச் சேர்ந்தான்—பல்லவம், தன் கூர்வாளை, வெற்றி வாளை இழந்தது—இழக்கச் செய்தோம்;வென்றோம் என்று சாளுக்கியன் கூறிக் களித்தான். அவனுடைய நினைவு, உடனே தாய் நாட்டின்மீது சென்றது. இந்தச் சந்தோஷச் செய்தியை, வெற்றிச் செய்தியை சாளுக்கியரிடம் கூறவேண்டும் என்று துடிதுடித்தான். பக்குவமாகப் பேசிப் பரஞ்ஜோதி

யாரிடம் அனுமதி பெற்றுக் கொண்டான்; சாளுக்கியம் செல்லப் புறப்பட்டான்—அவன் மனதிலே, சொல்லொணாக் களிப்பு—ஓட்டம் பெரு நடையாக, குதிரைக் கொட்டில் சென்றான்—அழகியதோர் கருங் குதிரையைத் தேர்ந்தெடுத்தான்—வெற்றிவீரன்போல் அதன் மீது அமர்ந்தான். குதிரை கெம்பீரமாக நடந்தது—சாளுக்கியன், காஞ்சிபுரத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்தான், வெற்றிக் களிப்புடன்—பிறகு ஊரைவிட்டுக் கிளம்பிலான். குதிரை வேகமாக ஓடலாயிற்று; அதைவிட வேகமாக, அவன் மனதிலே எண்ணங்கள் கிளம்பிக் கூத்தாடின. மகேந்திரனைப் பணியச் செய்தபோது புலிகேசி பெற்ற பூரிப்பைவிட அதிகக் களிப்பு வில்லாளனுக்கு. தனி ஆள்! படை இல்லை! ஆனால் வெற்றி கிடைத்தது என்று எண்ணி மகிழ்ந்தான்

வென்றேன்! வென்றேன்! கொன்றேன்! கொன்றேன் சாளுக்கியத்தை வென்ற வீரனை! வாளிழந்து, போர் ஆற்றலொழிந்து போனான்.

மன்னா! புலிகேசி! எந்த வாதாபியைக் கொளுத்திச் சாம்பலாக்கினரோ, அந்த வாதாபியிலிருந்து படை அல்லக் கிளம்பினது, நான் ஒருவனே கிளம்பினேன்; வென்றேன், பழி தீர்த்துக் கொண்டேன். வாதாபியைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கினர்! அதை நான் கண்டேன் கண்ணெனும் புண் கொண்டு! அந்தச் சாம்பலில் ஒரு பிடி! அதே ஒரு பிடிச் சாம்பல்தான், சாளுக்கியத்திலிருந்து நான் கொண்டுவந்த, ஆயுதம்! ஆம்! பிடி சாம்பல்!

முடிவில் ஓர் பிடி சாம்பல்! அதனையே உபயோகித்தேன்; பெற்றேன் பெரும் வெற்றி! பிடி சாம்பலால், முடியுடைய மன்னரையும் மிஞ்சிய புகழ் படைத்து, இடியெனப் போர் முழக்கமிட்டு, வெற்றிக்கொடி பிடித்து உலவிய வீராதி வீரன், வாதாபியைத் தீயிட்ட தீரன், புலிகேசியைப் போரிலே வீழ்த்திய சூரன், பல்லவ சாம்ராஜ்யத்தின் வீரச் சின்னமாக விளங்கிய படைத் தலைவன் பரஞ்ஜோதியைப் படுகளத்தில் அல்ல—பாய்ந்து தாக்கி அல்ல—கூர்வாள் கொண்டு அல்ல—

அவனுடைய நாட்டில், அவன் அறியா வண்ணம், ஒரு பிடி சாம்பலால் வென்றுவிட்டேன்!

அந்த வெற்றியின் தன்மை எத்தகையது? ஆஹா! எண்ணும்போதே என் உள்ளம் பூரிக்கிறது. பரஞ்ஜோதி! தமிழகம் அந்த 'ஜோதி'யைக் காண முடியாதபடிச் செய்துவிட்டேன்.

'பரஞ்ஜோதி' இனி இல்லை அல்லவா! அடியார் இருப்பார்! நாயன்மாராக இருப்பார்! ஆனால் தமிழகத்தின் தலை சிறந்த படைத்தலைவன் இனி இல்லை! வாதாபிகளைத் தாக்கவரும் வீரர்கள் இல்லை—தோத்தரிக்கும் திருவாயும் கூப்பிய கரமும் இருக்கும். இருக்கட்டும்—கோயில் கட்டுபவர் கட்டட்டும்—பதிகம் பாடுவர்,—சலிக்காது பாடட்டும்—ஆனால் ஒரு மாவீரனை இழப்பர்; படைத்தலைவன் இனி இரான்.

வெற்றி மாலை பூண்ட மார்பிலே இனி வெண்ணிறச் சாம்பற்பொடி! விடு கணையை! வீசு வாளை! செலுத்து தேரை! குதிரைப் படை முன்னால் பாயட்டும்! வேற்படையாளர்கள் விரைந்து வருக! என்றெல்லாம் முழக்கமிட்ட வாயிலிருந்து இனி, 'பொன்னார் மேனியன்'—'பிறவாவரம் தாரும்' 'அடியார்க்கும் அடியேன்' என்றெல்லாம் பஜனைப் பதங்கள்தான் வரும். வாதாபியை வென்றவனை நான்வென்றேன்! புலிகேசியைக் கொன்றவன் மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டேன். மாற்றார்கள் என்றால் சீற்றம் கொண்டெழுவோனை, சிவனடியாராக்கிவிட்டேன். ஒருபிடி சாம்பலால்! ஒப்பற்ற சாளுக்கிய சேனையால் சாதிக்க முடியாத காரியத்தைச் சாதித்துவிட்டேன். அஞ்சா நெஞ்சனை அடியவனாக்கி விட்டேன்.

வாளேந்திய கரம், இனி வழியே வருகிற பண்டாரங்களின் தாள் ஏந்திடும். தோள் பலத்தால் தொலைதூரம் வரை தன் நாட்டின் கீர்த்தியை நிலைநாட்டினான். இனி நாடு, வீரம், போர், வெற்றி இவை பற்றிய சிந்தனையே இராது. சிங்கத்தைச் சிறு முயலாக்கிவிட்டேன்! வீரப் பட்டயம் கட்டிய நெற்றியில் விபூதிப் பட்டை!

பரஞ்ஜோதி சிறுத்தொண்டனானான். படைத்தலைவன் பக்தனானான்; முரசு கொட்டியவன் முக்திக்கு வழி தேட முனைந்துவிட்டான்; வீரக் கோட்டத்திலே இடம்பெற வேண்டியவன் வீழ்ந்து வணங்க வேண்டிய கோயிலுக்குக் குடி ஏறிவிட்டான். சாளுக்கிய நாட்டுக்குச் சண்டமாருதமாகியவன் சரித்திரத்தில் இடம் பெறாமல், சாதுக்கள் கூட்டத்தில் ஒருவனாகிவிடுகிறான்! போர்ப் பயிற்சிக்கெனத் தமிழகம் ஓர் போற்றற்குரிய கழகம் அமைத்திடின், அதிலே சாளுக்கிய நாட்டை ஜெயித்துப் புலிகேசியைக் கொன்ற மாவீரன் பரஞ்ஜோதி என்று ஓர் சிலை இராது. அது எவ்வளவு பெரிய இலாபம் நமக்கெல்லாம். பரஞ்ஜோதி! காடு மலை கடந்து, ஆறுகளைத் தாண்டி, அஞ்சா நெஞ்சன், ஆற்றல் மிக்கோன், வடநாட்டு வீரனை வீழ்த்திய வல்லமைசாலி, புலிகேசியை வென்றவன் என்ற எண்ணத்தை, அதன் மூலம் வீரத்தை, தமிழ் இனத்தின் தீரத்தை, தமிழகத்தின் கீர்த்தியை ஊட்டும் உருவமாக அமைந்துவிட்டால், பிறகு தமிழரின் வெற்றி எட்டுத் திக்கும் கொட்டுவரே! இனி அப் பயமில்லை! பரஞ்ஜோதியைப் பக்தராக்கிவிட்டோம்; இனித் தாளமும் மத்தளமும் கொட்டுவர் தமிழர். தாராளமாகக் கொட்டட்டும்; புலிகேசி! சாளுக்கிய நாட்டுக்காக இரத்தத்தைக் கொட்டினாய்! உன் இரத்தத்தைக் குடித்து வெற்றி கண்ட தமிழரின்மீது இதோ வஞ்சகம் தீர்த்துக்கொண்டேன்! ஒருபிடி சாம்பலால்! முடிவில் இந்தப் பிடி சாம்பல், சாளுக்கிய நாட்டின் சாம்பல், வெற்றியைப் பெற்றுத் தந்தது.

சாளுக்கிய நாட்டுக்குச் செல்லும் வழியில், எதிர்ப்படுவோரிடம், பழைய நண்பர்களிடம், பாதி பட்டுப்போனமரம் கருகிக் கிடந்த இடம், போர் நடந்த களம் ஆகிய இடங்களைக் கண்டபோது எல்லாம், வெற்றிக் களிப்புடன், வில்லாளன் இங்ஙனம் பேசினான்—சில சமயங்களிலே கூவினான்—கூத்துமாடினான்! ஆம்! அவன் ஆனந்தமடைந்ததிலே ஆழ்ந்த அர்த்தமிருந்தது; பல்லவ நாடு திறமை மிக்க படைத்தலைவரை இழந்து விட்டது; பல்லவப் படை, போர்த் திறனும், போர் பலவற்றிலே பெற்ற அனுபவத்தை எடுத்

துக் கூறும் ஆற்றலையும் படைத்த பரஞ்ஜோதியாரின் துணையை இழந்தது; ஒளியிழந்த மணிபோல், கூர் இழந்த வாள்போலாயிற்று பல்லவநாடு. இதனை மக்கள் உணரக் கொஞ்ச காலம் பிடித்தது. ஆனால்,. உணர்ந்தனர்—பல ஆண்டுகளுக்குப் பிறகு.

''சாளுக்கிய படை வருகிறதாமே!''

''படை பெரிய அளவாம்—மிக வீரமாகப் போராடும் படையினராம்.''

''ஆமாம்! ஆனால் என்ன! நாமென்ன, படைபலமற்ற நாட்டிலேயா வாழ்கிறோம். நரசிம்மப் பல்லவனின் திருக் குமரனிடம் தேர்ச்சிபெற்ற படை இருக்கிறது. கவலை ஏன்?'

''படை இருக்கிறது—பெரும்படைதான்—ஆனால் பரஞ்ஜோதி இல்லையே! பரஞ்ஜோதி இல்லை என்றதைரியத் தாலல்லவா, வாதாபி தரைமட்டமானதைக் கண்டு கலங் கிய சாளுக்கியர், மீண்டும் தலைதூக்க—நமது நாட்டின் மீது போர்த்தெடுக்கத் துணிந்தனர்.''

''பரஞ்ஜோதி இன்று இருந்தால்...''

''பரஞ்ஜோதி இல்லையே.''

''பரஞ்ஜோதியை இழந்த பிறகு, நமக்கு வெற்றி ஏது...''

கலங்கிப் பேசினர், காஞ்சிபுரத்து அரசு அவையினர், இதுபோல். அவசர அவசரமாக, அணிவகுப்புகள் தயாரா யின. முரசுகள் ஆர்ப்பரித்தன! ஆயுத ஒலி கிளம்பிற்று; நால்வகைச் சேனை கிளம்பிற்று; பாய்ந்துவரும் சாளுக்கியப் படையைத் தடுக்க, எல்லம் இருந்தது. ஆனால் மக்கள் மனதிலே நம்பிக்கை எழவில்லை. ஏனெனில், களத்திலே நின்று படைகளை நடத்திச் செல்ல பரஞ்ஜோதி இல்லை— படைத்தலைவர் பரஞ்ஜோதிதான் மடத்தலைவர் சிறுத் தொண்டரானாரே.

பல்லவர் படை வரிசையிலே மட்டுமல்ல, பரஞ்ஜோதியார் நினைவு சென்றது. தாக்க வரும் சாளுக்கியப் படையிலும் அதே பேச்சுத்தான். ஒரு பிரிவுக்குத் தலைமை வகித்துக் கெம்பீரமாக வருகிறான் வில்லாளன்—''பாய்ந்து செல்லுங்கள்! பயமின்றிச் செல்லுங்கள்! வெற்றி நிச்சயமென்ற உறுதியுடன் செல்லுங்கள்! பல்லவ நாடு, பரஞ்ஜோதியில்லா நாடு! பயமில்லை, படைகளை மட்டும் படைத்த நாடு, படைத்தலைவர் மடத்தினுள் சென்றுவிட்டார். பிடி சாம்பலால் பெரும் படைத் தலைவனை, சிறுத் தொண்டனாக்கிவிட்டேன். இனி பயமில்லை, ஜெயமுண்டு, செல்க!'' என்று கூவினான் களிப்புடன்.

அவன் சொன்னது சரியாகவே இருந்தது. வெற்றி சாளுக்கிய மன்னனுக்கே. புலிகேசியின் புதல்வன், நரசிம்மனின் மகனைத் தோற்கடித்தான். காஞ்சிபுரத்தில் தோற்ற மன்னன், வாதாபியை எண்ணாதிருந்திருக்க முடியுமா! வாளிழந்து நின்றபோது, பரஞ்ஜோதியைப் பற்றிய நினைவு வராமலிருக்க முடியுமா? வெற்றி பெற்ற சாளுக்கியப் படை வெறியாட்டமாடிக் கொண்டு, காஞ்சிபுரத் தெருக்களிலே பவனி வந்தபோது, சில ஆண்டுகளுக்கு முன்பு, சாளுக்கிய நாட்டிலே இருந்து கொண்டுவந்த பொருளின்குவியல்கள், யானை மீதும் குதிரைமீதும் ஏற்றப்பட்டு, முன்னே செல்ல, வெற்றிச் சங்கொலிக்க, பின்னே, பிடிபட்ட சாளுக்கியர்கள் வரிசையாக நடத்திவரப்பட, இருமருங்கும் ஊர் மக்கள் நின்று வாழ்த்தொலி கூற, பரஞ்ஜோதி, வாதாபியை வென்ற வீரன் பவனி வந்த காட்சி, மக்கள் மனக்கண்முன் தோன்றாதிருக்க முடியுமா? கண்கள் குளமாயின!

பரஞ்ஜோதி வெற்றிப் பவனி வந்த வீதிகளில் சாளுக்கிய மன்னன் பவனி வந்தான். அவன் சித்திரகாந்தா எனும் குதிரை மீதமர்ந்து வந்தான். அவனுடைய படைகள் சாளுக்கிய நாட்டுக்கு வாழ்த்தொலி கூறின, பல்லவ நாட்டுத் தலைநகருக்குள்.

பல்லவ மன்னனைப் பணியச் செய்தான் சாளுக்கியன்.

தன் பாதத்தை முத்தமிடச் செய்தான், சாளுக்கிய மன்னன்!

பல்லவ மன்னன், அந்த விநாடியில், எத்தனை முறை எண்ணினானோ பரஞ்ஜோதியைப் பற்றி!

எவ்வளவு ஆயிரமாயிரம் மக்களின் கண்களிலே, நெருப்பைச் சுடும் நீர் வெளி வந்ததோ!

தாய்நாடு பிறனிடம் அடிமைப்பட்டுத் தார்வேந்தன் எதிர்நாட்டு மன்னனின் பாதத்தை முத்தமிடக் கண்ட பிறகு, கண்களா அவை? புண்களல்லவா! ஆஹா! பரஞ்ஜோதி மட்டும் மடாலயம் புகாமல், படையில் இருந்திருந்தால்... என்று எண்ணித் துடித்தனர் மக்கள். வேறென்ன செய்வர்?

'பிடி சாம்பல்! பிடி சாம்பல்!' என்று முழக்கமிட்டான் வில்லாளன்.

'யாரிவன் பித்தன்? பிதற்றுகிறான்! பிடி சாம்பலாம், பிடி சாம்பல்!' என்று அன்று வாதாபியில் வில்லாளனைக் கடிந்துரைத்தனரே தமிழ்வீரர்கள்; அவர்கள் இம்முறை என்ன கூற முடியும். ''ஆம்! பிடி சாம்பல்! பிடிசாம்பலைத் தந்து பரஞ்ஜோதியாரைப் பூசிக் கொள்ளச் செய்து, மடத்துக்குள் அனுப்பினோம்; இன்று படைத்தலைவர் இன்றித் திகைத்துத் தோற்றோம்! பிடி சாம்பலால் தோற்றோம்.'' என்று மெள்ளக் கூறிக் கொண்டனர்.

''அழுக்கற்ற வெண்சாமரங்களையும் நூற்றுக்கணக்கான கொடிகளையும், குடைகளையும் பிடித்துக் கொண்டு புலிகேசியின்—அறுவகைப் படைகள் செல்லுங்கால், கிளம்பிய, தூசியானது எதிர்க்க வந்த பல்லவேந்திரன் ஒளியை மங்கச் செய்தது. பல்லவனும் காஞ்சிபுரத்து மதில்களுக்குள் போய் ஒளிந்து கொண்டான்.''

—கவி ரவிகீர்த்தி.

''மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே இகலரசன்முன்
கொணர்ந்தான்''

—சேக்கிழார்.

''புலிகேசியின் புதல்வன் விக்ரமன், நரசிம்மப் பல்லவன் மகன் பரமேஸ்வரனைத் தோற்கடித்து, சித்திரகாந்தா என்ற தன் குதிரைமீது அமர்ந்து, உருவிய வாளுடன் பவனி வந்து, பரமேஸ்வரனைத் தன் பாதத்தை முத்தமிடச் செய்தான்.''

—வரலாறு.

மகேந்திர பல்லவன் புலிகேசியிடம் தோற்றான். மகேந்திரன் மகன் நரசிம்மன், புலிகேசியைத் தோற்கடித்தான்—கொன்றான். புலிகேசியின் மகன் விக்ரமன், நரசிம்மனின் மகன் பரமேஸ்வரனைத் தோற்கடித்துப் பணிய வைத்தான்.

காஞ்சிபுரம் கலங்கிற்று! புலிகேசியின் வெற்றி முரசு கேட்டு; மகேந்திரன் காலத்தில், காஞ்சிபுரம் களித்தது. மகேந்திரனின்மகன் காலத்திலே, புலிகேசி களத்தில்கொல்லப் பட்டு, தலைநகர் வாதாபி தீக்கு இரையான செய்தி கேட்டு. காஞ்சிபுரம் மீண்டும் கலங்கிற்று, புலிகேசியின் மகன் விக்ரமன், நரசிம்மனின் மகன் (மகேந்திரனின் பேரன்) பரமேஸ்வரனைப் பணிய வைத்தது கண்டு.

அழுகுரல்—ஆனந்தம்—அழுகுரல்—மாறி மாறி வரும்! இதற்கு ஏதேனும் காரணம் இருந்தாக வேண்டுமே! ஒன்றும் இல்லையோ! மகேந்திரன், களத்திலே புலி, பல வெற்றிகளைப் பெற்றவன்; எனினும் புலிகேசியிடம் தோற்கிறான். பிறகு அதே புலிகேசி, மகேந்திரனின் மகனிடம் தோற்கிறான். பிறகு புலிகேசியின் மகன் விக்ரமன், நரசிம்மனின் மகன் பரமேஸ்வரனைத் தோற்கடிக்கிறான்.

இந்த விசித்திர வரலாற்றுக்கு, ஒரு விளக்கம், எங்கோ ஓர் உண்மை புதைந்திருக்க வேண்டும்—அதைக் கண்டறி

யும் முயற்சியே மேலே தீட்டியுள்ள வரலாறு கலந்த கற்பனை உரை.

என் முடிவு இது! பரஞ்ஜோதி படைத் தலைவராக இருந்ததால், பல்லவ நாட்டின் ராணுவ பலத்தைச் சாளுக்கியம் உணர முடிந்தது—வாதாபி வீழ்ந்தது.

படைத் தலைவரிற் சிறந்த பரஞ்ஜோதி, சிறுத்தொண்டராகிவிட்ட பிறகு, பல்லவ நாட்டுப் படை பலம் சரிந்தது; தோல்வி வந்தது.

பரஞ்ஜோதி, சிறுத்தொண்டன் ஆனார் என்பதை நான், ஆக்கப்பட்டார் என்கிறேன்.

அதாவது, பரஞ்ஜோதியை, மன்னன், சைவன் என்ற காரணத்தைக் காட்டிப் பதவியிலிருந்து விலக்குகிறான்.

இதற்கு மூன்று காரணங்கள் இருக்க வேண்டுமென்பது என் யூகம்.

1. சாளுக்கியர் தந்திரம்.
2. சைவ, வைணவ ஆதிக்கப் போட்டி
3. மன்னனுக்குப் பரஞ்சோதியாரிடம் ஏற்பட்ட இலேசான பொறாமை.

இவைகளை அர்த்தமற்றன என்றோ, விஷம் நிறைந்தன என்றோ, விதண்டாவாதம் என்றோ குறைகூறப் பலர் உளர் என்பதை நான் அறிவேன். ஆனால், அவர்களை நான் கேட்க விரும்பும் சில கேள்விகளுக்கு அவர்களிடமிருந்தல்ல, உங்களிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறேன்—அவர்களிடமிருந்து சிந்தனையை எதிர்பார்க்கிறேன்.

1. புகழ் பெற்ற பரஞ்ஜோதிக்குப் பிறகு, படைத் தளபதி என்ற பெயருக்குரிய வேறோர் வீரரின் பெயரும் பல்லவர் வரலாற்றில் இல்லாமற் போனது ஏன்?

2. கீர்த்தி பெற்ற பிறகு பரஞ்ஜோதியை, படைத் தலைவர் பதவியிலிருந்து மன்னன் விலக்குவானேன்?

மன்னன் விலக்கினான் என்று எப்படிக் கூறலாம்? மன்னன், பரஞ்ஜோதியாரின் பெருமையை உணர்ந்தான் என்றன்றோ அதற்குப் பொருள் என்று அறனடியார்கள் கூறுவர். அவர்களுக்குக் கூறுகிறேன், மன்னன் விலக்கினார்—பரஞ்ஜோதி மறுத்தார்—திகைத்தார்—இந்தப் பாடல்களை மீண்டும் ஓர்முறை படிக்க வேண்டுகிறேன்—என்னை மறந்து.

உங்கள் கண்முன், பதவியில் இருக்கக் கூடாது என்று தந்திரமாகப் பேசும் மன்னனும், திகைக்கும் பரஞ்ஜோதியும் தெரிவர்.

மேலும், எத்தனையோ அடியார்களும், தொண்டர்களும், நாயன்மார்களும், சைவத்தின் பெருமையை நினையூட்டவும், நிலைநாட்டவும் உளர்.

ஒரு பரஞ்ஜோதி சிறுத்தொண்டராக்கப்படாமல், படைத்தலைவராகவே இருக்க அனுமதித்தால், நஷ்டம் இல்லை, நாட்டுக்கும் சைவத்துக்கும். ஏற்கனவே ஏராளமாக உள்ள அடியார் கூட்டத்தில், ராணுவ வரலாற்றுக்கே ஓர் தலை சிறந்த எடுத்துக் காட்டாக இன்றுவரை, உலக வரலாற்று ஏடுகள் வரை, யாருடைய பெயர் இருக்க வேண்டுமோ, அந்தப் பரஞ்ஜோதியை அடியவர் கூட்டத்தில் சேர்த்து, வீரக்கோட்டத்துக்கு நஷ்டம், ஈடு செய்யமுடியாத நஷ்டத்தை உண்டாக்கிவிட்டனர். இது சரியா? சிந்திக்க வேண்டுகிறேன்.

சிந்தனையை, குறிப்பாகச் சிவநேசர்களின் சிந்தனையைக் கிளறவே இச்சிறு ஓவியம். பாராயணத்துக்குப் பயன்படுத்திய பாடல்களை, இதோ, சற்று நான் கூறினவை சரியா என்பதைப் பகுத்தறியப் பயன்படுத்திப் படித்துப் பாருங்கள்.

மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத்துளை நெடுங்கை வரை
யுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்
தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே இகலரசன் முன்
கொணர்ந்தார்.

பரஞ்ஜோதியார், தொன்னகரமாம் வாதாபியை வென்று அங்கிருந்து மணியும் அணியும், கரியும் பரியும் கொணர்ந்தார் என்று அறிவிக்கிறது இச்செய்யுள்.

கதிர்முடி மன்னனும் இவர் தங்களிற்றுரிமை ஆண்மை
யினை
அதிசயித்துப் புகழ்ந்துரைப்ப அறிந்த அமைச்சர்க
ளுரைப்பார்
மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்த வலியுட
மையினால்
எதிரிவருக் கிவ்வுலகிலில்லை என எடுத்து ரைத்தார்.

மன்னன் மகிழ்கிறான், பரஞ்ஜோதியாரின் ஆண்மையைக் கண்டு; அமைச்சர் கூறுகிறார்—பரஞ்ஜோதி, அறனடியார்; ஆகவேதான் வென்றார். அவருக்கு ஈடு இவ்வுலகில் இல்லை என்று கூறினர். இது இச் செய்யுளின் பொருள்.

''தம்பெருமான் திருத்தொண்டர் எனக் கேட்ட
தார்வேந்தன்
உம்பர்பிரான் அடியாரை உணராதே கெட்டொ
ழிந்தேன்
வெம்பு கொடும் போர்முனையில் விட்டிருந்தேன்
எனவெருவுற்
றெம்பெருமான் இது பொறுக்கவேண்டும் என்
இறைஞ்சினான்.

சிவனடியாரா இவர்! இவரையா நான் போர்க்கள வேலையில் ஈடுபடுத்தினேன், அபசாரம் என்று மன்னன் வருந்தினான் என்பது இச்செய்யுளின் பொருள். இதிலே

ஆச்சரியப் பகுதி என்னை எனில், படைத்தலைவர், சிவபக்தர் என்ற விஷயமும், மன்னனுக்கு மந்திரி சொல்லித்தான் தெரிய வருகிறது!

இறைஞ்சுதலும் முன்னிறைஞ்சி என்னுரிமைத்
தொழிற்கடுத்த
திறம்புரிவேன் அதற்கென்னோ தீங்கென்ன, ஆங்
கவர்க்கு
நிறைந்த நிதிக்குவைகளுடன் நீடுவிருத்திகள் அளித்தே
அறம்புரி செங்கோலரசன் அஞ்சலி செய்துரைக்கின்
றான்.

மன்னனைப் பரஞ்ஜோதி வணங்கி, என் தொழில் போரிடுவது. அதைச் செய்வதிலே தீது என்ன? அது என் கடமை என்று கூற, மன்னனோ, அவருக்கு ஏராளமாகப் பரிசுகள் வழங்கிப் பேசலானான் என்பது இச்செய்யுளின் பொருள்.

உம்முடைய நிலைமையினை அறியாமை கொண்
டுய்த்தீர்
எம்முடைய மனக்கருத்துக்கினிதாக இசைந்துமது
மெய்ம்மைபுரி செயல் விளங்க வேண்டியவாறே
சரித்து
செம்மை நெறித்திருத் தொண்டு செய்யும் என
விடையளித்தான்.

அப்படியல்ல, அறனடியாரே! உமது பெருமையை உணராமல் இருந்துவிட்டேன். இனி நீர் மடத்தில் சென்று சிவத்தொண்டு புரிக! என்று மன்னன் கூறி அனுப்பிவிட்டான் என்பது இச்செய்யுளின் கருத்து.

இனி யோசியுங்கள். விலக்கப்பட்டார் பரஞ்ஜோதி; அதற்காக விசாரப்பட்டார் என்று நான் கூறினது தவறா? செய்யுள் யாவும், பெரிய புராணம்—நமது சரக்கல்ல. ஒவ்வொரு செய்யுளுக்கு உள்ளேயும், இடையிடையேயும் புதைந்துள்ள பொருளை, யூகித்துத் தீட்டினேன்—சிந்தனையைக் கிளற.

வேவலுக்கோ, ஐசன்ஹவருக்கோ, பைபிளிடம் ஆசை; ஏசுவிடம் விசுவாசம் என்று பிறர் கூறக்கேட்டு, ஆஹா! அப்படியா! அங்ஙனமாயின் மாதாகோயில் பாதிரி வேலைக்கு அனுப்புகிறோம் என்று, பிரிட்டிஷ், அமெரிக்க சர்க்கார்கள் கூறுமா? பரஞ்ஜோதிக்குக் கூறப்படுகிறது. ஏன்?

படைத் தொழிலில் இருப்பதால் சிவத்தொண்டு சாத்ய மின்றிப் போகுமா? ஆவுரித்துத் தின்று உழல்பவனும், ஐயனை நம்பினால், அவர்களே நாம் வணங்கும் தெய்வம் என்று சைவம் கூறப் போர்த் தொழிலைக் கடமையாகக் கொண்ட பரஞ்ஜோதியாருக்கு மட்டும், ஏன் மடாலயம் புகவேண்டு மென்று நிர்ப்பந்திக்கப்பட்டது? இவை நீங்கள் சிந்திக்க வேண்டியவை. 'பிடி சாம்பல்' தீட்டியதன் நோக்கம் அது தான். ஆகவே சைவமெய்யன்பர்கள், 'பிடி சாபம்!' என்று சீறிடாமல், சற்றே சிந்தனையைச் செலவிடுங்கள்...முடியு மானால்!

★

# 2
# ஒளியூரில்

'ரதிமதன' நாடகம் நடத்த வேண்டுமானால், ராமப் பிரசாதனும், வாசமல்லிகாவும் அப்படியே அரங்கம் ஏறி நின்றால் போதும்; தத்ரூபமாக இருக்கும். எப்படித்தான் கிடைத்ததோ அந்த எழில், இருவருக்கும்! எவ்வளவு பொருத் தமாக அமைந்திருக்கிறது அந்த ஜோடி'' என்றான் சத்ரு சங்காரன்.

''அமைந்திருக்கிறது என்று கூறாதே, அமைய இருக் கிறது என்று சொல்'' என்று திருத்தினான் காவியபூபதி.

''தடை என்ன இருக்கிறது, அவர்கள் தம்பதிகளா வதில்? ராமப்பிரசாதன் தகப்பனார் ரங்கராஜ பண்டிதர் தன் மகன், அழகிற் சிறந்தவளை அடைவதற்கான முயற்சி யில் ஈடுபட்டபோதே ஆசீர்வதித்தாரே—அழகான மங்கை என்பதற்காக மட்டுமல்ல, ஐஸ்வரியமும் ஏராளமாக இருக் கிறது என்ற காரணத்தால். வாச மல்லிகாவின் தகப்பனா ருக்கு வாணிபத்திலே ஏராளமாக இலாபம் குவிகிறது. பல அரசாங்கங்களுக்குப் பண்டங்கள் வாங்கித் தரும் பொறுப்பும் கூட அவரிடம் தரப்பட்டு இருக்கிறது. மண்டலாதிபதிகள், தம்முடன் சரிசமமாக அல்லவா நடத்தி வருகிறார்கள் பாஞ்ச சன்ய பூபதியாரை! அவ்வளவு நல்ல செல்வாக்கு அவருக்கு'' என்று விளக்கமளித்தான், சத்ரு சங்காரன்.

அந்த இருவர் மட்டுமல்ல, மாளிகை பலவற்றிலேயும் நிகழ இருக்கும் இந்த நேர்த்தியான திருமணத்தைப் பற்றிய பேச்சாகவே இருந்தது.

காதல் கைகூடுகிறது என்ற நிலை ஏற்படும்போது, அலாதியாகப் பிறந்திடும் பேரழகுடன் வாசமல்லிகா விளங்கினாள். எந்த அரசரும் அவளை அதுவரையில் சிறை எடுத்துச் செல்லாததற்குக் காரணம், அவள் அப்படிப்பட்ட அழகி அல்ல என்பதல்ல. அந்தக் காலம், ருக்மணியைத் தூக்கிக் கொண்டோடிய கிருஷ்ணன் காலமல்ல; அந்த இடமும் உரு மாறிக் கூடிடும் வித்தை அறிந்தவர் வாழும் விசித்திர உலகமுமல்ல.

வாசமல்லிகாவின் அழகு மணம், ராமப்பிரசாதனைக் கவருவதற்கு முன்பே, ரங்கராஜ பண்டிதரின் மனம் பூபதியாரிடம் இலயித்திருந்தது. பண்டிதருக்குப் போதுமான 'தொழில்' கிடைக்காத காலம் அது. அரச அவைகள் இருந்தன. ஆன்றோர் கூடிடும் அரங்குகளும் இருந்தன. மக்கள் மன்றங்களும் இருந்தன. எனினும், அங்கெல்லாம் முன்பு போலப் பண்டிதர்களுக்கு கெம்பிரக்குரலெழுப்பி,பகவானின் பல்வேறு திருவிளையாடல்களைக் குறித்துப் பாடியும் பேசியும், பக்திரசம் ஊட்டி, பரிசும் பவிஷும் பெறுவதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை. பூஜாமாடங்களிலே, எப்போதும்போல முரளிதரன் இருந்தான்; கோதண்டபாணி கோயிலில் ஆறுகால பூஜை, எப்போதும்போல நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. துளசி மாடங்களைச் சுற்றிவந்து தத்தம் நாயகர்கள், குறைவற்ற செல்வத்துடனும், நீண்ட ஆயுளுடனும் வாழ அருள் புரியும் என்று வேண்டிக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் எல்லாவற்றிலும் தரக் குறைவோ, ரசக் குறைவோ இருப்பதுபோலக் காணப்பட்டது. ஆலயமணி ஓசையிலேகூடக் கெம்பீரம் குறைந்து சோகம் ஒலித்தது.

''பத்துநாள் போகட்டும்; பிறகுதான் நிச்சயமாக எதையும் சொல்லமுடியும். இப்போதைக்குப் பிராணபயம் உடனடியாக இல்லை. நாடியிலே கோளாறு இல்லை. ஆனால் நாளை மறுநாள் என்ன ஆகிறதென்று எப்படிக் கூறமுடியும்? எதற்கும் ஒரு பத்து நாள் கழியட்டும்!'' என்று மருத்துவர் கூறுவது கேட்ட இல்லத்தார், நோயாளியை எந்த நோக்கு

டன் பார்ப்பார்களோ, அந்தப் பார்வையிலேயே, ஆலயப் பூஜாரிகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஸ்வாமிகளே! எப்படி க்ஷேம இலாபங்கள்?''

''இருக்கிறேன், தங்கள் யோக க்ஷேமம் எப்படியோ?''

''எல்லாம் அவ்விடம் உள்ளது போலத்தான்.''

''பகவத் கடாட்சம் எப்படியோ, பார்ப்போம்.'' இவ்வளவுதான் அவர்களிடையே பேச்சு—அதுவும் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, வறட்சி நிறைந்த குரலில், மிரட்சி பொங்கிடும் கண்ணினராய்.

பொன்னொளி பரப்பிக் கொண்டிருந்த காலம் அது—எனவே புரட்டர்களும், புல்லர்களும் மனம் புழுங்கிப் போயினர். புனித மார்க்கம், புராதன மார்க்கம் என்று பல காலமாகப் பக்திபூர்வமாக எந்த மக்கள் நம்பிக் கொண்டிருந்தார்களோ, வந்தனை வழிபாடுகளை அன்புடனும், அக்கரையுடனும் செய்து வந்தனரோ, அவர்களே ஏதோ வேண்டா வெறுப்பாக ஈடுபாடு கொண்டிருந்த காலம்.

''மன்னா!'' என்று மகரிஷிக் கோலத்திலிருப்பவன் அழைத்தவுடன் அடியற்ற நெடும்பனையெனக் கீழே வீழ்ந்து, அடிபணியும் மன்னர்களின் மனப்போக்கு மாறிவிட்டது; 'எந்த ஆசிரமத்தைச்சேர்ந்தவர்?என்ன கோரிவந்திருக்கிறீர்? இதற்கு முன்பு எந்த மண்டலத்தில் தங்கியிருந்தீர்?' என்று 'விசாரணை' நடத்திய காலம்! இந்நிலையில், புராண இதிகாசங்களைக் கூறிக்கொண்டு, வாழ்க்கையில் மேம்பாடு பெற, எப்படி முடியும் ரங்கராஜ பண்டிதரால்! நெஞ்சு நெக்குருகக் கேட்ட காலம், கசிந்து கண்ணீர் மல்கிய காலம், கைகூப்பித் தொழுத நாட்கள், பக்திப் பரவசத்தால் மெய் மறந்துபோய் கைத்தாளம் கொட்டி ஆடிய காலம்—இவை போயேவிட்டன—கதை என்றுகூடக் கூறத் தொடங்கி விட்டனர் மக்கள்.

ஆண்டவனுடைய லீலா விநோதங்களை விஸ்தாரமாக எடுத்துச் சொல்லும்போது, சிலர், சிரிப்பதை அடக்கிக்

கொள்கிறார்கள்; வேறு சிலர் சிரிக்கவே செய்கிறார்கள். சிவலீலை, விஷ்ணு மகாத்மீயம், கருட புராணம், அனுமத் பிரபாவம் ஆகியவை பற்றிக் கூறும்போது, முன்பெல்லாம், வெற்றிக் கொடி பிடித்து வீரர் முன்செல்ல, வெண்சாமரம் வீசிடும் வேல்விழியார் உடன் வர, கோலாகலமாகப் பவனி வரும் 'ராஜாதி ராஜன்' போல, 'சபை' செல்லுவார். பகவத்நாம சங்கீர்த்தனம் சொல்லுவார்; மக்கள் இலயித்துக் கிடப்பார்கள்.

தொட்டார் வில்லினை
தொடுத்தார் அம்பு
விட்டார் எதிரே
அறுந்தது நாண்
ஒடிந்தது வில்
மலர்ந்தது இதயம்

என்று அவர் சீதாகலியாணத்தின் சிறப்பினைச் செப்பிய போது மக்கள் எவ்வளவு ஆனந்தப் பரவசமடைவார்கள்! ஆடவரெல்லாம் ஸ்ரீராமராவர், ஆரணங்குகளெல்லாம் சீதா தேவியாவர்! கோபால கிருஷ்ணனுடைய ரச லீலாக்களைக் கேட்டுப் புளகாங்கிதமடைந்தனர்! பத்தினிகள் பட்ட துயர் கேட்டு, விழி சிவந்திடும் அளவுக்குக் கதறுவர்! அப்படியிருந்து வந்த மக்களைக் கபிலவஸ்துவிலிருந்து கிளம்பிய புதுப்புயல், புத்த மார்க்கம், சிந்திக்க வைத்து விட்டது. கதைகளிலே 'ரசம்' இருக்கிறது எனினும், பயன் உண்டோ அவைகளைக் கேட்பதால்! அறிவுக்குத்தான் பொருந்தி வருகிறதோ! நடைமுறைக்கு ஏற்றது என்று சொல்லத்தக்கதாகவாவது இருக்கிறதா? பல விஷயங்கள் வெளியே சொல்வதற்கே வெட்கப்பட வேண்டிய வகையிலல்லவா உள்ளன என்று பேசிய மக்களைவிட, சிந்தித்துக் கொண்டிருந்த மக்களே அதிகம். இத்தகைய சந்தேகம் புகுந்து குடைந்து கொண்டிருந்த நிலையிலேயே அவர்கள் புனிதமானவை என்று நெடுங்காலமாக நம்பிக் கொண்டிருந்த முறையிலே, பற்றற்று நடந்து கொண்டிருந்தார்கள்.

சங்கு சக்ரதாரியாக விஷ்ணு பகவான் கோயிலில் நின்று கொண்டிருந்தார் எப்போதும்போல; வழக்கப்படி அவருக்கு ஆராதனைகள் நடைபெற்றுக் கொண்டு வந்தன. எதிரே நின்று எப்போதும்போல, கைகூப்பித் தொழுதனர் பக்தர்கள். ஆனால் அவர்கள் உள்ளத்தில் இருந்த பக்தி, பிசுபிசுத்துக் கொண்டிருந்தது. சுடர் விட்டெரியும் திருவிளக்கு தரும் ஒளியில், 'கமலக் கண்கள்' தெரிந்தன. முன்பெல்லாம், விழியைத் திறந்து அவர் பார்ப்பது போன்றே ஒரு 'பிரமை' தோன்றும் பக்தர்களுக்கு—இப்போது அப்படித் தோன்றவில்லை.

''என்ன கனிவு! எவ்வளவு கவர்ச்சி! அந்தக் கண்களில் அருள் ஒழுகிடக் கண்டேன்; புளகாங்கிதம் கொண்டேன்!'' என்று உருகி உரைப்பர்—முன்பு. இப்போது மனு கொடுத்தவன் வந்து நிற்பதைக் கவனியாமல் குறிப்பேட்டினைப் புரட்டி கொண்டிருக்கும் கொத்தவால் முன்பு நின்றுகொண்டு ஆர்ப்பாட்டத்துக்குக் குறைச்சலில்லை. அலுவலகத்தில் அழுலுக்குப் பஞ்சமில்லை; ஓயாது வேலை செய்வது போலத்தான் காணப்படுகிறார். என்றாலும் என்ன பலன்? களவு போன என் பொருளைக் கண்டுபிடித்துத் தரும் திறமை மட்டும் இல்லை—இப்படி ஒரு கொத்தவால் இருக்கிறார், நாமும் இவரிடம் வந்து வந்து குறையைக் கூறிவிட்டுப் போகிறோம்' என்று சலிப்புடன் எண்ணிக் கொள்ளும், கிராமத்துக் கிழவன்போலக் கடவுளின் சன்னதியில் நின்று கொண்டிருந்தனர். முன்பெல்லாம் தவறி எங்கே தவறான, கேவலமான, ஆசாபாச உணர்ச்சிகள் ஆண்டவன் ஆலயத்திலே இருக்கும்போது உள்ளத்தில் தலைதூக்கிவிடுமோ, தேவனுடைய கோபத்துக்கு ஆளாக நேரிடுமோ என்று திகில் கொண்டு, ''தேவ தேவா! எம்மைக் காத்தருளும்; சத்ய நெறியின்றும் தவறி நடக்காத மன உறுதியைத் தாரும்; தீய எண்ணங்கள் எம்மைத் தீண்டாதபடி தடுத்தாட்கொள்ளும்; சகல பாவங்களையும் சம்ஹரிக்கும் தங்கள் திருப்பார்வையை, நாயினும் கடையராம் எம்மீது சிறிது செலுத்தும். பிரபோ! பித்துமனம் கொண்ட நான், செய்துள்ள பிழை

களைப் பொறுத்தருளும்; சாசுவதமான இன்பம் பெறும் மார்க்கத்தை சர்வேஸ்வரா! எனக்குக் காட்டும்'' என்று கேட்டு வந்த பக்தர்களிலே மிகப் பலருக்கு, ஆலயத்திலே காணப்படும் அலங்காரமும் ஆடம்பரமும், அர்ச்சகர்களாகி அரசோச்சும் பூசுரரின் பேராசையும் ஆதிக்க வெறியும், அவர்களைப் பற்றி ஆபாசம் நெளியும் கதைகளும் கண்ணிலும் கருத்திலும் உறுத்தின; இந்த இடத்தில் தூய்மையான கருத்து எங்ஙனம் துளிர்விடும்! வாடைக் காற்றடிக்கும் இடத்திலே மல்லிகையின் நறுமணம் தேடுகிறோம்—வீண் வேலை! என்று தோன்றிற்று.

எவ்வளவு அழகான சிலைகள்! எத்துணை நேர்த்தியாகச் சமைத்திருக்கிறான் சிற்பி. அந்தக் கண்கள் கவிதை பாடுவது தெரிகிறதே! கன்னங்கள், கனிந்த பழம் போலல்லவா உள்ளன! அதரம் துடிப்பது போலவே தோற்றமளிக்கிறது. தன் கைவண்ணத்தைச் சற்றே சரிந்த குழலின் பாரம் பின்னுக்கு இழுக்க, கனகப் பந்துகளின் கனம் முன்னுக்கு அழைக்க எப்படக்கம் என் நிலை என்று துடிப்பதுபோல் இடை நெளிய, இந்தக் காட்சியிலே சொக்கி நிற்கும் என் நாதனைக் காணீரோ என்று கேட்பதுபோல் கண் பேச, ஆஹா! கல்லைக் கொண்டு இவ்வளவு அழகாக அளித்திருக்கிறானே, பேசும் பாவையர் கண்டு காமுறத் தகும் சிலை வடிவச் சிங்காரியை. ஸ்ரீதேவி என்றழைக்கட்டும், சிவகாமி என்றுரைக்கட்டும், மீனலோசனி, விசாலாட்சி, விரூபாட்சி, கமலலோசனி என்று பெயர் எதுவேண்டுமானாலும் சொல்லட்டும்; கதை எப்படி வேண்டுமானாலும் கட்டட்டும்; கல்லிலே இந்த எழிலைக் காட்டினானே, அவனைத்தான் நான் தேடுகிறேன், புகழ் பாடிட; கொண்டாடி மகிழ.

இப்படி 'சிலை'யிலே காணப்படும் சிற்பியின் கைத்திறனைப் புகழ்ந்தனர் சிலர்.

சீற்றம் பிறக்கவில்லை, ஆலயத்து மேலோருக்கு. அவர்கள் பக்திப் பரவசத்தால் கனிவுவழிய தரிசிக்கிறார்கள் என்று எண்ணி, தேவ மார்க்கம் தழைத்து நிற்கும், புத்த புயலிலே

வீழ்ந்து போகாது, சிறிதளவு தாழ்ந்து போக நேரிட லாம். ஆனால் அடி பெயர்ந்திடாது—இதோ வைத்த கண் வாங்காது நிற்கிறார்களே, இவர்களெல்லாம் புராதன மார்க்கம் புதுமுறைக்காரர்களால் அழிக்கப்படுவதற்கு இட மளிப்பார்களா? ஒருபோதும் இல்லை!—என்றெண்ணினர், மகிழ்ச்சிபெற்று, மலரால் மகேசனை அர்ச்சித்தனர், பிர சாதமளித்து மகிழ்வித்தனர் பிறரை.

தேவனைத் தரிசிக்க வந்தனர் பக்தர்கள் என்று அர்ச்ச கர்கள் எண்ணிக் கொண்டனர். வந்தவர்களோ 'சிலை' யைக் கண்டு களித்திடும் கலா ரசிகர்கள்; பூஜை செய்கிறார் கள் என்று பூஜாரிக் கூட்டத்தினர் எண்ணிக் கொண்டனர். சிலையை ரசித்தவர்களோ, சிற்பியைப் புகழ்ந்துரைத்தனர். அருள்பெறும் இடம் என்று கூறி ஆலயத்துக்கு அழைத்தால், அழகொழுகும் கலைக்கூடம் இது என்று கூறிப் பாராட்டி னர். ரசிகர்களைப் பக்தர்கள் என்று எண்ணிக் கொண்டனர்; —ஏமாந்தனர்.

ஆரிய மார்க்கம் இங்ஙனம் அடித்தளம் தாக்குண்ட நிலையில் இருந்த காலத்தில் ரங்கராஜ பண்டிதருக்குத் தொழிலில், பொருளும் புகழும் மிகக் குறைந்த அளவுக்குத் தானே கிடைக்க முடியும்.

புத்த மடாலயம் சென்றுவிட்டவர்கள்—நிராசை— நிர்வாணம்—நிர்மலம் எனும் இலட்சிய சித்திக்கான முறை களிலே ஈடுபட்டனர்—புத்த மடாலயம் சேராதவர்களும், புத்த மார்க்கத்தில் புகாமலும், புத்த மார்க்கப் பிரசாரமூலம் பெற்ற தெளிவினால், ஆரிய மார்க்கத்திலே உள்ள ஆபாசங் களை அறிந்து கொண்ட 'இந்துக்கள்' ரங்கராஜ பண்டிதரின் கதைகளைக் குறித்து அவரைக் கேட்ட கேள்விகள் அவருக் குக் கோபமூட்டின. கேள்விகள் தவறானவை என்பதால் அல்ல; பதில் கண்டறிவது கடினமாக இருந்தது. கடுங் கோபம் பிறந்தது பண்டிதருக்கு. எனினும் தனியே இருந்து, அதே கேள்விகளைப் பற்றிச் சிந்திக்கும்போது அவருக்குச் சிரிப்புக்கூட வரும். ஆமாம்! அந்தப் போக்கிரியப் பயல்கள்,

சொல்வதைக் கேட்டுக் கேட்டு எனக்கே இப்போது சந்தேகம் பலமாகிக் கொண்டுதான் வருகிறது என்று தனக்குத் தானே கூறிக் கொள்வார்.

வாசமல்லிகாவுக்குப் பூட்டி அழகு பார்க்கவும், பெருமைப் படவும், தம்மிடம் பொன்னும்,பொருளும் இல்லையே என்று பண்டிதர் ஏங்கிக் கிடந்தாரே தவிர, அந்த வனிதை இயற்கையிடமிருந்து எழிலைச் செல்வமாகக் குறைவின்றிப் பெற்றிருந்தாள்; ஆபரணச் சுமைதாங்கிகள் அரண்மனையில் அசைந்தாடிக் கிடந்தனர்—இந்த அழகு மயிலுக்கு அவை தேவையற்றன! இருக்கவேண்டிய இடமறியாததால், முத்து மாலையும் மோகராக்குவியலும், மரகதமும் பிறவும், சீமாட்டிகளிடம் சிறைப்பட்டுச் சீரழிந்தன. இந்தச் சிங்காரிக்கு அவ்வை ஏன்? முத்தும், பவழமும் அளித்தனை, இயற்கையே! எனினும் அவை தமை அணிந்து மகிழவா செய்தனை? பேழையிலிட்டுப் பாதுகாத்து வரும் வேளையில் அல்லவா என்னை விட்டிருக்கிறாய்; பேழையிலுள்ளதை அவ்வப்போது சிலர், களவாடிச் செல்கிறார்கள்—'ஓ'வெனக் கூவி, அவர்களைப் பிடித்திடத் துரத்திச் சென்றாலும், என்னைத் தடுத்து நிறுத்துகிறாள், நிலமடந்தை. என் செய்வேன்! கொடுத்தும் கெடுத்தாய், இருந்தும் பயனேதும் நான் பெற்றேனில்லை என்றல்லவா கடல் ஒலிக்கிறது, இயற்கையின் வஞ்சனையைக் கண்டு. இதோ செம்பவளத்தை அதரமாக்கி, முத்துக்களை அழகான பற்களாக அமைத்து, பொன்னைப் பொடி செய்து குழம்பாக்கி உடலெல்லாம் பூசி. தேயாத் திங்களாக முகத்தினைத் தீட்டி, நினைக்கும் போதெல்லாம், கனிச்சாறு ஊற்றெடுக்கும் வகையும் தந்து, வாசமல்லிகாவைத் தன் செல்லப் பெண் ஆக்கிக் கொண்டனையே என்று கத்துங் கடலொலி கேட்கிறது.

அவனல்லவா அதை அறிந்திருக்கிறான்! அந்தி நேரத்தில், ஆற்றோரத்தில், ''எண்ணமதைக் கொள்ளையிட்ட வண்ணப்பூவே! எங்கு பெற்றாய் இத்தனை எழிலை எல்லாம்'' என்று கேட்கிறான்! போதும் உமது பரிகாசம் என்று

அவள் சிணுங்கினாள். வண்ணப்பூ மேனிக்கு இந்த வான் காற்று ஆகாது; பண்ணொத்த மொழியாளே! வாராய் இங்கு என்று அழைத்து, நீண்ட இரு கையைப் போர்வையாக்கி, பிறை நெற்றிக்கு முத்தமெனும் பொட்டிட்டு, வெட்கத்தால் முகம் சிவக்க 'விடுங்கள்' என்றே வீணைமொழியிலே அவள் கூறும்போது, தலைசாய்த்து துயிலுவதற்குத் தக்கதன்றோ, எந்தன் தடந்தோட்கள் என்றே மிக்கவும் கோபமது கொண்டான் போலே அவனும் கேட்க, மஞ்சமிதை வேறு அஞ்சுகமும் கொள்ளப் போமோ! என்று அவள் கூறி நெஞ்சம் நிறைந்துள்ள இன்பத்தேனை, அதரம் தன்னில் வைத்து, மகிழ்வூட்டி மகிழ்கின்றாளே, அங்கு அல்லவா தெரியும், பண்டிதர், தன் மகளுக்கு எழிலூட்டப் பொன்னையும் பொருளையும் தேடி அலைய வேண்டிய அவசியமே இல்லை என்னும் பேருண்மை.

'கொண்டலைத் தழுவிடும் மேகம், கூறுவதென்ன கோகிலமே!' என்று அவன் கேட்கிறான்; அவள் காதற்புலமையுடன் ''தழுவிடச் சென்ற மேகமங்கை, பின்னர் அழுதிடும் காரணம் அறிவீரோ?'' என்றல்லவா கேட்கிறாள்! செல்வம் நிரம்ப இருந்தால் வாசமல்லிகாவின் திருமணத்தை மிகச் சிறப்பாக, கோலாகலமாக நடத்தலாம்; அதற்கான காலமா இது? இல்லையே என்று ஆயாசப்படுகிறாரே இந்தப் பண்டிதர். இதோ, வண்டுகள் யாழை மீட்ட, வரிக்குயில் பண்ணிசைக்க, அண்டையில் அருவி பாய்ந்து அழகாய் முழவொலிப்ப, கெண்டைகள் துள்ளியோடிக் கேளிக்கை நடத்திக் காட்ட, வெண்முகில் கருத்துப் பன்னீர்த் துளிகளை வாரிவீச, வாசமல்லிகா—ராமப்பிரசாதன் கடிமணம், பலஆயிரம் வராகன்களைக்கொட்டிச் செலவிட்டாலும் பெறமுடியாத அழகுடன் நடைபெறுகிறது. பண்டிதர் இதனை அறியாமல், பணமில்லை பணமில்லை என்றெண்ணிப் பதைக்கிறார். பேழைக்கல்லவா, பணம் தேவை! இந்த ஆணழகன் தேடுவது, இந்த வடிவழகை, வண்ணமலரை, மண்ணகத்து மதியை, பொன் அவிர்மேனியாளை, புது வாழ்வை! வாசமல்லிகா கிடைக்கும்போது, அவன் அவளுடன் வந்துள்ள பேழைகள் எத்தனை

என்று ஏன் கேட்கப் போகிறான்! அவன் உள்ளத்தை ''முத்து வைத்த நற்பவழப் பெட்டி'' கவர்ந்துவிட்டது!

''அங்கே சென்று, நட்சத்திரங்களை எல்லாம் எடுத்துப் பூப்பந்துகளாக்கி விளையாடினால் எப்படி இருக்கும்?''— என்று குழந்தை போலக் கேட்டாள் மல்லிகா; குறும்புப் புன்னகையுடன், ராமப்பிரசாதன், ''அங்கு நீ சென்றால், தேவலோகத்திலே பெரும் போரல்லவா மூண்டுவிடும்'' என்பான்.

''அங்கு போர் எழ என்ன காரணமிருக்கிறது? இங்கு தான் புத்தமார்க்கத்துக்கும் புராதன மார்க்கத்துக்கும் போர் மூண்டு கொண்டிருக்கிறது என்கிறார்கள். அங்கு போர் எழ என்ன காரணம்?'' என்று அவள் கேட்க, ''அன்பு மலரே! அமரர் உலகிலே நீ சென்றால், எனக்கா உனக்கா என்று அவர்களுக்குள் போட்டி கிளம்பி பெரும் போர்மூண்டு விடாதோ!'' என்று அவன் குறும்பாகச் சொன்னான்.

''எனக்கென்ன அச்சம் அதனால்!'' என்கிறாள் வாசா. பயந்து போகிறான் ராமப்பிரசாதன்! கோபமாகக்கூட இருக்கிறது. ''அதென்ன மல்லிகா, அப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்கிறான். ''ஏன்! அமரர்கள், என் பொருட்டுப் போரிட்டுக் கொண்டால் எனக்கென்ன? அமரர்க்கரசனே குறுக்கிட்டாலும் புறமுதுகிட்டோடச் செய்து என்னை உம்ம வளாக்கிக் கொள்ளும் என் ஆற்றலரசர் இருக்கும்போது எனக்கென்ன அச்சம்?'' என்று அவள் கூறுவாள்; வாரி அணைத்துக் கொள்வான்; அவர்கள் காலடியில் மகதம், மாளவம், கூர்ஜரம், மாரடம், வங்கம்...எல்லாம் உருண்டோடும்; விண்ணகத்து மண்டலங்களை எல்லாம்கூடக் கடந்து, அவர்கள், காதல் உலகு செல்வர்—கண்களைத் திறந்தாலோ, பசும் புற்றரையும், பழமுதிர் சோலையும், நீரூற்றும், இது கலிங்கம் என்பதை நினைவிற்குக் கொண்டுவரும்.

பண்டிதர் பொருள் தேடிட எந்த மண்டலம் சென்றும் பயனில்லை என்று அறிந்திருந்தார்; ஆனால் சம்பந்தி

யிடம் சற்றுக் கௌரவமாகத்தானே பேசி வைக்கவேண்டும்! அதனை வணிகர் அறியாமலில்லை. அவர் பல மண்டலங்கள் சென்று வருகிறார். எங்கும் மாறுதல் உருவாகிக் கொண்டிருக்கிறது. எல்லா மண்டலங்களிலும் புத்தமதம் பரவிவிடவில்லை; இந்து மார்க்கத்தை விடாப் பிடியாகக் காப்பாற்றிக் கொண்டும், புத்த மார்க்கத்தினருக்குப் பல கொடுமைகள் இழைத்துக் கொண்டும் பல மண்டலங்கள் இருந்தன. என்றாலும், அங்கெல்லாம்கூட இந்து மார்க்கத்திலேயே காலத்துக்குப் பயந்து மாறுதல்கள் செய்து வந்தனர். பேரிரைச்சலுடன் ஓடிவரும் ஆற்றைத்தாண்டி அக்கரை செல்ல வேண்டுமானால், தட்டுமுட்டுச் சாமான்களையும் உடன் தூக்கிக் கொண்டா செல்ல முடியும்?

மகதம் இவ்வளவுக்கும் வழி செய்துவிட்டது என்று மறையவர்கள் அடிக்கடி ஆத்திரத்துடன் பேசுவர். அந்தப் பாப பூமியில்தான் இப்போது, கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டுள்ளனர் புத்த மார்க்கத்தினர். அங்கு புத்த மார்க்கத்துக்கான படிப்பும், பயிற்சியும் பெற்று, பாரெங்கும் சென்று பௌத்தத்தைப் பரப்பும் பண்டிதர்களைத் தயாரிக்கிறார்கள்.

புத்த மார்க்கத்தின் புனிதத்தைப் புகட்டும் ஏடுகள் அங்கு மலைமலையாகக் குவிந்து கிடக்கின்றனவாம். ஒரு பெரிய பல்கலைக் கழகமே ஏற்படுத்திவிட்டிருக்கிறார்கள்.

இவ்விதமாகவெல்லாம், அந்த மண்டலம் போய் வந்தவர்கள் வியந்து கூறுவர்; வைதீக மார்க்கக் காவலர்களுக்கு வயிற்றெரிச்சலாக இருக்கும்.

இவ்வளவுக்கும் ஆதரவு அளிக்கும், மகத நாட்டு மன்னன் ரௌரவாதி நரகமல்லவா போய்ச் சேருவான்?''

''அப்படி நாம் கூறுகிறோம்; நம்புகிறோம். அவர்கள் மோட்சம், நரகம் என்ற பேச்சே ஆரியச் சூழ்ச்சி என்கிறார்களே!''

''மேதாவிகளே! யுகயுகமாக இருந்துவரும் ஐதீகத்தைப் பொய்யென்று கூறும் இவர்கள் வாய் புழுத்துப் போகும்—பார்—பார்.''

''அந்த ஐதீகங்களெல்லாம் வீணுரை என்று விளக்கிடவே, அங்கு பேராசிரியர் பலர் பாடம் தருகிறார்களாம்.''

''அதைக் கேட்க ஒரு கூட்டமும் சேருகிறது போலும்!''

''அவ்வளவு அலட்சியமாக நீர் கூறுகிறீர். அந்த நலந்தா பல்கலைக் கழகத்தில் 10,000க்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள்; ஆசிரியர்கள் 1500க்கு மேல்.

''பொய்! பொய்! வீண் புரளி! பத்தாயிரம் பேர் அங்கு படிக்கிறார்களாம்—அது என்ன பாடசாலையா அல்லது பாடலிபுத்திரமா?''

''நீர் கேட்பதும் நியாயம்தான். பாடலிபுத்திரம் போன்ற ஒரு நகரமே அங்கு எழுப்பப்பட்டுத்தான் இருக்கிறது. அங்கு மாணவர்களும், ஆசிரியர்களும், தங்கியிருந்து அற நெறி பற்றிய அறிவு வளர்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.''

இவ்விதமெல்லாம் கேள்விப்பட்டு ஆரிய மதக் காவலர்கள், மனம் புழுங்கிப் போயிருந்தனர்.

சீன யாத்ரீகனான யுவான் சுவாங் கூட, இந்த நலந்தா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பௌத்த மார்க்கம் பற்றிய பாடம் கேட்டுப் பெற்றான் என்றால், ஆத்திரம் எப்படியிருக்கும், ஆரியக் குருமார்களுக்கு?

எவ்வளவு அற்புத அற்புதமான லீலா விநோதங்கள்—பிரபாவங்கள் கொண்டதாக உள்ளன, நமது புராண இதிகாசாதிகள்!

எத்துணை வாதத் திறமையுடன் கோர்க்கப்பட்டுள்ளன நமது சாஸ்திரங்கள்!

எத்தனை எத்தனை உட்பொருள்களை உள்ளடக்கிய தாக நமது வேதங்கள் உள்ளன!

எவ்வளவு காலமாக இந்தப் பாரத்வர்ஷத்தில் உள்ள ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் இந்து மார்க்கத்துக்கு ரட்சகர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். ஆரிய தாசராக இருப்பதைப் பெரும் பேறு என்று கருதும் சிரோன்மணி களாக அல்லவா இருந்து வந்தனர்!

இவ்வளவு 'மகிமை' வாய்ந்த இந்து மார்க்கத்தைக் கற்றறிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு சீனனும் ஆவலைக் காட்டவில்லை; 'பாடம்' கற்றறிய சீனத்து யுவான்சாங் வருகிறானே! எவ்வளவு வேதனை தரும் செய்தி இது?

ஏதோ ஒரு மனக்குழப்பத்தால் மன்னன் மகனொரு வன், தன் பொறுப்பை மறந்து, கடமையைத் துறந்து, அரச பதவியில் இருந்து 'சேவை' செய்ய மனமின்றி, அங்கும் இங்கும் அலைந்து திரிந்து, கண்டேன் பேருண்மையை! காணீர் பேரொளியை! கேண்மின் பெருநெறியை! என்று கூறுகிறானாம். இந்த மக்கள் நேற்று வரை, கைகட்டி வாய் பொத்தி நம் எதிரே நின்று, காணிக்கை செலுத்தி அனுமதி பெற்று, நமது காலைக் கழுவி, நீரைப்பருகி, கதிமோட்சம் கிடைத்தது என்று கிடந்துவந்தனர். கண்ணா மணிவண்ணா! என்று கைத்தாளமிட்டுக் கூத்தாடி நின்றனர்; வேள்விக்கு உதவினர்; வேத பாடசாலைகள் கட்டினர். சமாராதனைக் குச் சம்பிரமமாக ஏற்பாடு செய்தனர், சர்வம் பிரம்மமயம் ஜெகத் என்ற சாஸ்திரத்தை ஏற்றுக் கொண்டு, சரணம்! சரணம்! என்று கூறிக் கிடந்தனர். அப்படிப்பட்டவர்கள், 'வேதம் வேண்டாம், பேதம் கூடாது, ஜாதி ஆகாது, ஆசையை அகற்று' என்று கூறிடும் புத்தனிடம் தங்கள் புத்தியைப் பறிகொடுத்துவிட்டுக்கிடக் கின்றனரே! இவர்களுக்கு வந் துற்ற கெடுமதிக்கு என்ன காரணம்?

வைதீக மார்க்கத்தினர் இதுபோலெல்லாம் கேட்டனர்; கலகமூட்டினர்.

மாடங்களும், சிற்ப வேலைப்பாடமைந்த தூண்களைக் கொண்டு அழகுற விளங்கின. அல்லியும் பிறவும் பூத்து அழகினைத் தேக்கி வைத்துக் கொண்டிருந்த அலங்காரக் குளங்கள் அணியாக அமைந்திருந்தன. ஒவ்வோர் துறைக்கும் தனித் தனிக் கட்டிடம்—ஒன்பது அடுக்கு மாடி ஒன்று ஓங்கி நின்று கொண்டிருந்தது, வளரும் புத்தமார்க்கத்தின் எழிலை விளக்குவதுபோல. இவ்வளவு சிறப்புடன் விளங்கிய நலந்தாவின் வளர்ச்சிக்காக மகதநாட்டு மாமன்னன் மானியமாக 200 கிராமங்கள் தந்திருந்தான். வங்கநாட்டு வேந்தனும் அது போன்ற மானியம் வழங்கினான்.

நலந்தாவில் புனித ஏடுகளைக் குருட்டுப் பாடமாகக் கொண்டு, பாமரரை மிரட்டுவதற்காக அவைகளை உரத்த குரலிலே உச்சரிக்கும் புரோகிதர்கள் தயாரிக்கப்படவில்லை —ஆய்வுரையாளர்கள்—அறநெறி பரப்புவோர்—அன்பு போதனை புரிவோர் ஆகியோர் பயிற்சி பெற்று வந்தனர். ஜாதி பேதம் அறவே நீக்கப்பட்டது; பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெறுவதற்கேற்ற பக்குவம் உளதா என்று மட்டுமே பரிட்சை நடத்தினர்—குலம் என்ன, கோத்திரம் யாது? சிற்றரசனா, சீமான் மகனா? பேழையுடையானா, ஏழையா என்பதல்ல, அங்கு எடைபோட உதவிய படிக் கற்கள்! கற்றறிவாளனா, பற்றினை நீக்கிக் கொள்ளும் உளத்திண்மை உடையவனா, நற்பண்புகளின் கருப்பொருள் அவனிடம் உளதா-இவைகளைக் கண்டறிந்தே துவார பண்டிதர்கள், மாணவர்களைச் சேர்த்துக் கொண்டனர்.

இந்த மாபாவிகளின் கோட்டம், மண்மேடாகாதா! மகேசா! திரிபுரங்களையும் ஒரு நொடியில், ஒரு சிறுபொறியினால் சாம்பலாக்கிய சதாசிவமல்லவா, நீர்! திரிசூலி, நீ நினைத்தால் போதாதா இந்தத் தீயர்களைத் தீக்கிரையாக்க! மராமரம் துளைத்தவனே! ஜானகிராமா! அம்பொன்று எய்தால் போதுமே, இந்த அசுரக் கூட்டத்தினை அடியோடு அழித்திட! என்று திருவுள்ளம் இரங்குமோ? திருவருள் பாலிப்பது எந்நாளோ? என்று மனம் புழுங்கிய மறையவர் கூட்டம், மாரடித்து அழுதவண்ணமிருந்தது!

நலந்தாவின் புகழோ ஆந்தையின் அலறலுக்கும், கோட்டானின் கதறலுக்கும் சட்டை செய்யாது, தண்ணொளி வீசிடும் வெண்ணிலவாகத் திகழ்ந்தது.

ரங்கராஜ பண்டிதரிடம், அவருடைய 'பால்ய' சிநேகிதர் பராசரதாசர் வந்தார்—பார்த்து நீண்ட காலமாகிவிட்டிருந்தது மட்டுமல்ல—பராசரதாசர், பராசரஸ்வாமிகளாகி விட்டிருந்தார்—ரிஷிக்கோலத்தில்! நாட்டின் நிலைமைகளை எல்லாம் எடுத்துப் பேசிக்கொண்டு வந்தனர், இருவரும். பராசரஸ்வாமிகள் சொன்னார். 'பைத்யக்காரா! முன்புபோல நலந்தாவில் அந்த நாசகாரர்கள் மட்டுமே அங்கு கொட்டமடித்துக் கொண்டில்லை. ஆரிய மார்க்கத்தினரும் மெத்தச் சிரமப்பட்டு இடம் பெற்றாகி விட்டது. இப்போது, மாற்றானின் கோட்டைக்குள்ளேயே நமது படை இருக்கிறது. ரங்கராஜா! எந்த நேரத்தில் எந்த முறையில் இதைச் சாதிப்பது என்பதைக் கண்டறிவதே என் வேலை. நலந்தாவில் வேத வகுப்புகள் நடத்தும் பொறுப்பு எனக்கு. அடிக்கடி விவாதங்கள், சச்சரவு, அமளி—ஆமாம்—இப்போது புத்தசாதுக்கள் பாடு திண்டாட்டம்தான்! கைகலப்பு என்று வந்துவிட்டால், நம்முடைய ஆசாமிகளுடைய திறமைதான் மேலோங்கி நிற்கிறது.''

''அதெப்படி ஸ்வாமிகளே?''

''அது எப்படியா? அசடன் கேட்க வேண்டிய கேள்வியை இராமாயணம், மகாபாரதம் அனைத்தும் அறிந்த நீ கேட்கிறாயே! அங்கு ஆரியமதம் பயிலும் மாணவர்களெல்லாம், உண்மையிலேயே மாணவர்கள்தானா? ஐம்பது ஆட்களை எதிர்த்தடிக்கும் வல்லமைசாலிகள் இருக்கிறார்கள்—கையில் ஓலைச்சுவடி இருக்கும் பகலில்; இரவு நேரங்களில் கட்டாரி! ஆமாம்; கூரிய கட்டாரி! ஆரிய போதனைக்குச் செவி சாய்க்க மறுக்கும் சண்டாளர்களின் மார்பிலே கட்டாரி பாயும்—பிறகு முதலைகள்!! ரங்கராஜா! நிர்மூலமாக்குவதற்கான சகல யுத்த சன்னத்தமும் செய்தாகிவிட்டது''.

இருவரின் பேச்சைக் குறுக்கே தடுக்கும் நிலையில் அங்கு பூபதியார் வந்தார். ''ஆரிய சிரேஷ்டரே! இவர் பாஞ்சசன்ய பூபதியார், என் நண்பர்; என் மகள் வாசமல்லிகாவை, இவர் திருக்குமரன் ராமப்பிரசாதனுக்கு ''பாணிக் கிரகணம்' செய்ய ஏற்பாடாகி இருக்கிறது'' என்று பண்டிதர் சொன்னார்; ஒரு கணம் முகம் கருத்தது பராசர ஸ்வாமிகளுக்கு-மறுகணம் ஓர் புன்னகையை வரவழைத்துக்கொண்டு, ''மெத்தச் சந்தோஷம்! வணிகரோ?''என்று கேட்டார். ''ஆமாம்! மண்டலம் பலவற்றிலே தொடர்பு...நலந்தாவுக்குக்கூட, பண்டகசாலைக்குத் தேவையான பொருள்களை இவர் மூலம் தான் பெறுகிறார்கள்...'' என்றார் பண்டிதர்.

''அதுதான் ஆர்ய தர்மம். நலந்தாவில் உள்ள நீசர்கள், நமது மதத்தை அழித்தொழிப்பவராக இருந்தாலும், அவர்கட்கு உதவி செய்வதுதான் ஆரிய தர்மம்...'' என்றார் பராசர ஸ்வாமிகள்.

''உண்மைதான்! மேலும், நலந்தாவில் உள்ளவர்கள், நீசர்களுமல்ல, இது விஷயமாகவே பண்டிதருடன் பேச வந்தேன். என் மனம் நலந்தாவில் இலயித்துவிட்டது. 'சொத்தில் பெரும் பகுதியை நலந்தாவுக்கே மானியமாக்கிவிட்டு குழந்தை வாசமல்லிகாவின் திருமணத்தையும் விரைவிலே முடித்துவிட்டு நலந்தாவுக்கே சென்று தங்கி ஊழியம் செய்து வாழ விரும்புகிறேன். குழந்தை என்னைப் பிரிய மனமின்றிச் சங்கடப் படுகிறது. என்றாலும், பெரியவர் பண்டிதர் இருக்கிறார் என்று தைரியம் கூறினேன்...'' என்றார். பண்டிதரின் முகம் பயங்கரமாக மாறிவிடலாயிற்று. சிரமப்பட்டுச் சமாளித்துக் கொண்டார்.

''பூபதியாரே! சொத்து முழுவதையும் நீர் தானமாகக் கொடுத்துவிட்டு, வாசமல்லிகாவை வெறுங் கையோடு என் இல்லம் அனுப்பினாலும், நான் கவலை கொள்ளமாட்டேன். ஆனால், தாங்கள் நலந்தா சென்று தங்குவது என்றால், அது நாங்கள் பாஷாண்டி மதத்தில் வீழ்ந்துவிட்டது போலத் தோன்றும்—அந்தக் களங்கம், எனக்குள்ள புகழ், என் குடும்பத்தின் கீர்த்தி இவைகளைக் கெடுத்துவிடும்...'' என்றார்.

''ரங்கராஜா! என்ன அவசரமான முடிவுக்கு வருகிறாய்? பூபதியார் நலந்தா சென்று ஊழியம் செய்வதாகச் சொன்னாரே தவிர, புத்தமார்க்கம் புகுந்துவிடுவதாகவா கூறினார்? அங்குதான் இப்போது ஆரிய மார்க்கமும் இருக்கிறதே—சேவை செய்வது என்றால், சகலமும் உணர்ந்த பூபதியார், ஆரிய சேவை செய்கிறார் என்பதுதானே பொருள். இப்போது, யாகம்கூட அங்கு நடத்தப்பட்டு வருகிறது. பூபதியார் போன்றவர்கள், ஆரியரின் புனித கைங்கரியத்துக்குத் தம்மாலான பேருதவி புரிந்துதான் வருகிறார்கள்'' என்று பராசரஸ்வாமிகள், சாகசமாகப் பேசினார். பூபதியாரோ, ''மன்னிக்க வேண்டும். நான் புத்த மார்க்கத்திடம் பற்று கொண்டுவிட்டேன்'' என்றார்.

''அப்படியானால், திருமணம்?'' என்று ஆத்திரமாகக் கேட்டார் பண்டிதர்.

''விரைவில் நடத்திவிட்டுத்தான் நான் நலந்தா செல்வதாக உத்தேசம்.''

''திருமணத்துக்குச் சம்மதிக்க மாட்டான், என் மகன். அவன் மகா உத்தமன்—நமது பூர்விக மதத்தில் நிரம்பப் பற்று கொண்டவன்...''

''வாசமல்லிகாவை அல்லவா அவன் திருமணம் செய்து கொள்ளப்போவது—என் நிலைபற்றிக் கவலை என்ன?''

பண்டிதரை, ஸ்வாமிகள் அதிகம் பேச இடமளிக்கவில்லை.

''தீர்க்காலோசனைக்குக் காலம் கொடு, பூபதியாரே! திடீரென்று தாக்காதீர்'' என்று கூறி அனுப்பிவிட்டார்.

நலந்தா பிரச்சினை நந்தவனத்திலே, புயலையும், புனலையும், கனலையும் கிளப்பிவிட்டது.

செல்வம் போய்விடுகிறதே என்பதுதான், தங்கள் தகப்பனாரின் கோபம், வருத்தம், வேறென்ன? என் அப்பா புத்தமயத்தில் சேர்ந்தால் இவருக்கு என்னவாம்! இவரையும்

தங்களையுமா சேரச் சொல்கிறார் என் தகப்பனார்? அவரு டைய மனச்சாந்திக்கான மார்க்கத்தை அவர் தேடிக் கொள் கிறார் என்று வாசமல்லிகா வாதாட, ''செல்வச் செருக்கு, உன்னைவிட்டு எப்படிப் போகும், மல்லிகா! கேவலம் சொத் துப் போய்விடுகிறதே என்று என் தகப்பனார் பதைப்பதாகக் கருதுகிறாய்—செல்வச் செருக்கல்லவா அதற்குக் காரணம்? அனாதி காலந்தொட்டு இருந்து வரும், மத மார்க்கத்தை இழித்தும் பழித்தும் பேசுபவருடன் எப்படி நாங்கள் உறவு கொள்ள முடியும்'' என்று பேசுவான் பிரசாதன். கொதிப் பான பேச்சு—கோபமான பிரிவுகள்—இப்படி ஆகிவிட்டது நிலைமை.

கண்டதும் ஏற்படும் கனிவு—காதற்பேச்சிலே இருக்கும் கவர்ச்சி—இவை, குறையத் தலைப்பட்டன; மகிழ்ச்சி மங்க லாயிற்று.

''நேற்று முளைத்த ஒரு காளானுக்காக, நமது பூர்வீகப் பாரி ஜாதத்தைக் காலால் மிதித்துத் துவைப்பவரை, அவர் யாராக இருப்பினும், நான் துச்சமாகத்தான் மதிப்பேன்.''

''அவரவரின் மனச்சாட்சிக்குத் தக்கபடி மார்க்க விஷ யம் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை மதிக்காதவர் களை நான் தூசுக்குச் சமமாகக்கூடக் கொள்ளமாட்டேன்.''

''நாவை அடக்கிப் பேசு! தந்தையைக் கேவலமாகப் பேசுவதைக் கேட்டுச் சகித்துக் கொள்ளும் மண்டூகமல்ல நான்.''

''மாவீரராகத்தான் இருங்களேன்...அதனால் உன் முன் மண்டியிட வேண்டுமா என்ன! உமக்கு உம்முடைய மதம், எவ்வளவு ஆபாசம் நிரம்பியதாக இருப்பினும் மேலா னது; என் தந்தையும் அதே மதத்தில் நம்பிக்கை வைத்திருந் தவர்தானே! நவராத்திரி உற்சவ கைங்கரியமும் யாருடைய தாம்! நாலுகால் மண்டபம் யார் கட்டியது? எத்தனை கோயில்களுக்குக் காணிக்கை கொடுத்திருக்கிறார். இப்போது அவர் மனதில், இந்த மதம் மோசமான கொள்கைகள்

கொண்டது என்று தோன்றுகிறது. உடனே அவரைத் தொலைத்துவிடுவதுதான், உங்கள் தர்மமோ? என்னைக் காதலித்து வந்தீரா அல்லது என் தந்தையின் பேழையைக் காதலித்து வந்தீரா என்றுகூடத்தான், எனக்கே இப்போது சந்தேகம் ஏற்படுகிறது.''

''ச்சீ! துஷ்டை! துராத்மா! விலகிச் செல்!''

இவ்விதம் ஊடல், மோதுதலாகவே மாறலாயிற்று.

பூபதியார், நாளுக்கு நாள் அமைதியை அதிகமாக மேற் கொண்டவரானார், புத்தமத ஏடுகளைப் படிப்பதும்—ரசிப்பதும்—பொருள் விளங்காத போதெல்லாம் நலந்தா சென்று பாடம் பெறுவதுமாகவே காலங் கழித்து வந்தார்—வாணிபம் அறவே நின்றுவிட்டது.

''நேற்றுவரை இவரிடம் கணக்கு எழுதி வந்தவன், இன்னும் சில ஆண்டுகளிலே கோடீஸ்வரனாகப் போகிறான்'' என்று கூறி வருந்தினான் பிரசாதன்.

''தந்தையின் செல்வம் போய்விட்டால், என் இளமையும், அழகும் கூடவே போய்விடாது'' என்றாள் மல்லிகா.

''அது ஏன் போகும்! என்னை மயக்க அது இருந்து கொண்டுதான் இருக்கும்'' என்றான் பிரசாதன்.

''நான் மயக்குபவளா?''

''அதிலென்ன சந்தேகம்?''

''அப்படிப்பட்டவளிடம் உமக்கு ஏன் பாசம்—நேசம்?''

''பாழும் மனம் கேட்காததால்...''

''படுகுழி என்று தெரிந்து ஏன் விழவேண்டுமோ?''

''காதலுக்குக் கண் ஏது?''

''காதகனைக் கண்டறிய எனக்குக் கண் இருக்கிறது. இனி என்னைச் சந்திக்க, இந்தப் பொழிலுக்கு வரவேண்டாம்.''

''சந்திக்க வேண்டாம் என்று சொல்லு—பொழிலுக்கு வரவேண்டாமென்று சொல்ல நீ யார்?''

பொழிலுக்குப் போவதை வாசமல்லிகா நிறுத்திக் கொண்டாள்.

பராசர ஸ்வாமிகள் அடிக்கடி வந்துபோனவண்ணமிருந்தார்; ரங்கராஜ பண்டிதர் யாரிடமும் அதிகம் பேசுவதில்லை; ஏதோ தீவிரமான சிந்தனையில் மூழ்கிக் கிடந்தார். மாதங்கள் உருண்டோடின. காதல் முறிந்தே விட்டதென்று ஊரார் பேசிக் கொண்டனர். உகுத்திடும் கண்ணீர், வெளியே தெரியக்கூடாது என்பதற்காக வாசமல்லிகா வெகு பாடுபட்டு வந்தாள். ஆனால், அதற்குள் இவைகளைக் கவனிக்கும் நிலையைக்கூடப் பூபதியார் தாண்டிவிட்டார். நலந்தாவுக்கு நாள் தவறாமல் எதையாவது 'நன்கொடை'யாகத் தருவார்; வாசமல்லிகா முகம்கூடக் கோணுவதில்லை.

''மல்லிகா! நமது தொழுவத்தில் இருக்கிற பசுக்கள்—அதிகம்—அல்லவா?''

''ஆமாப்பா...''

''நலந்தாவுக்கு...?''

''அனுப்புங்களேன்...அங்கு உள்ளவர்களுக்கும் பயன்படும்...''

''அம்மா, மல்லிகா! மகர கண்டிகை விற்று பணமாக்கி விட்டேன்; நீதான் அதை இப்போதெல்லாம் அணிந்து கொள்வதில்லையே.''

''ஆமப்பா, எனக்கு அம்மாதிரி நகைகள் பிடிக்கவில்லை.''

''அப்படியா மகளே! குணவதியல்லவா நீ! பணத்தை..

''நலந்தாவுக்கு அனுப்பிவிடுங்களப்பா...''

''அனுப்பிவிட்டதைச் சொல்லத்தான் வந்தேன், கண்ணே!''

''அப்பா, குளிர் காலத்தில் காஷ்மீர் கம்பளம், நல்ல தல்லவா?''

''ஆமாம், மகளே! உன்னிடம் ஒரு உயர்தரமான கம்ப ளம் உண்டே?''

''எனக்கல்லப்பா? எனக்கென்ன—வாலிபம்தானே! சதா சிந்தனையில் மூழ்கியிருக்கும் நலந்தா நல்லவர்களுக்கு குளிரால், பாபம், எவ்வளவு கஷ்டமோ...''

''என்னம்மா செய்வது? கொடியவனெல்லாம் கோட் டையிலும், அரண்மனையிலும் தங்கி, கோடையிலே பூங் காற்றும், குளிர் காலத்தில் வெப்ப வசதியும் தேடிக் கொள்ள முடிகிறது. அவர்கள் என்ன செய்வார்கள் பாபம். ஆண்டி கள்தானே!''

''அதனால்தான், ஐயாயிரம் காஷ்மீர் சால்வைகளை வரவழைக்க ஏற்பாடு செய்துவிட்டேன்.''

''அருமை மகளே, என்ன மேலான எண்ணம் உனக்கு.'

இவ்விதம், தந்தையுடன் போட்டியிட்டுக் கொண்டு வளர்ந்துவிட்டாள் மல்லிகா.

ஆண்டு மூன்றாயிற்று! எந்த ஆரணங்கும், ராமப்பிர சாதன் கண்வழி நுழைந்து நெஞ்சில் பதியவில்லை—அவ னுடைய செவியில், எத்தனையோ சீமாட்டிகளைப் பற்றிப் போட்டு வைத்தார், பண்டிதர்; பணம் இல்லை. எல்லாவற் றையும் இழந்துவிட்ட நிலையில் இருந்தான் பிரசாதன்; ஆனால் தன் தகப்பனாரை, மல்லிகாவே துச்சமாக மதிக் கிறாள் என்று எண்ணிக் கொண்டதால் ஏற்பட்ட ஆத்திரம் மட்டும் அடங்கவில்லை. மல்லிகா இல்லாத நேரத்திலெல் லாம், மலர்வனம் செல்வான்; அவளை எண்ணிக் கொள் வான்; அவளுக்காக ஏறிக் கனிபறித்த மரங்களைக் கட்டித் தழுவிக் கொள்வான்; அவள் பொருட்டு பயிரிட்ட மலர்ச் செடிகளுக்குக் கண்ணீரை ஊற்றுவான் - பித்தம் பிடித்தவன் போலானான்.

''பிரசாதா! நாம் இருவருமே பெருந்தவறு செய்து விட்டோம்...'' என்கிறார் பண்டிதர் ஒரு நாள்.

ராமப்பிரசாதன் திகைத்துப் போனான்.

''அந்தப் பெண்ணை நேற்று பார்த்தேன்—எலும்பும் தோலுமாக இருக்கிறாள்'' என்றார்.

''ஆமாப்பா! அதனால்தான் அவர்கள் ஆறு கிராமத்துக் குச் சொந்தகாரர்கள் என்று தெரிந்ததும், நான் அந்தச் சம் மந்தம் வேண்டாம் வேண்டாம் என்று கூறினேன்.''

''ஓஹோ! நான் ஒயிலூர் சீமான் மகளைப் பற்றிச் சொல்வதாக எண்ணிக் கொண்டாயோ! நான் பாபம், வாசமல்லிகாவைப் பற்றி அல்லவா கூறுகிறேன். உன் நினைவே அவளைச் சித்திரவதை செய்கிறது. நீ மட்டு மென்ன, துரும்பாகிவிட்டாய். நான் ஏன் இந்தப் பாபத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்? ஸ்வாமிகளும், காதலருக்குத் தடையாக இருப்பது, எல்லாப் பாபத்திலும் கொடியது என்கிறார். ஆகையால்...''

''ஆகையால் என்னப்பா?''

''நாளைக்கே சென்று பூபதியாரிடம் குழந்தைகளின் மனோபீஷ்டம் நிறைவேறட்டும் என்று கூறிவிடப் போகி றேன்.''

''அப்பா...''

''அன்பே!''

ஆருயிரே!

எனக்குத் தெரியும்

எத்தனை நாட்கள்?

எங்கே ஒளிந்திருந்தது இந்தக் காதல்?

நீண்ட காலத்துக்குப் பிறகு இந்தக் கனிரசம்?''

இவை மீண்டும்! மீண்டும் மலர்ச்சோலையில் மணம், நீரோடையில் சிரிப்பொலி, மாலை வேளைகளில் மதுரகீதம், களிநடம் புரியலாயிற்று. மதகு திறந்ததும் பாய்ந்தோடும் வெள்ளம்போல் காதல் பெருக்கெடுத்தது!

''மகிழ்ச்சி, மகளே! அவரும் அறிவாளி; அவனும் பண்பாளன். ஏதோ இடையில் சிறிது காலம் அவர்களுக்கு ஒரு வகைக் கசப்பு இருந்தது. உன் தூய்மையான காதல் வெற்றி பெற்றுவிட்டது. இனி, எனக்கு நிம்மதிதான்'' என்றார் பூபதியார்.

''இதற்குள் நிம்மதி எப்படி அப்பா ஏற்பட்டுவிடும். பதினாயிரம் தூண்களும் தயாராக வேண்டாமோ?'' என்று மல்லிகா கேட்டாள்.

நலந்தாவுக்குப் புதுக்கூடம் அமைக்கும் பணியில், அப்போது பூபதியார் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். பதினாயிரம் செம்மரத் தூண்கள் சித்திர வேலைப்பாடுடன் தயாராகிக் கொண்டிருந்தன. அவைகளைச் செய்வதிலேயே, மகிழ்ச்சி ஊற்றெடுத்தது பூபதியாருக்கு; பண்டிதர் பகையை நீக்கிக் கொண்டது மேலும் மகிழ்ச்சி அளித்தது.

பண்டிதர் அடிக்கடி சென்று, செம்மரத் தூண்களின் அழகினைக் காண்பார்!

நிலவொளியில் பார்க்கும்போது நேத்திரானந்தமாக இருக்கிறது என்பார்.

பூபதியாருக்கு, பண்டிதர் மேலான குணம் கொண்டார் என்பதால், பூரிப்பு; பெருமையுங்கூட.

செம்மரத் தூண்கள் நலந்தா போய்ச் சேர்ந்துவிட்டன! அவைகளை அமைப்பதற்கான, சிற்பிகள் புறப்பட்டனர். தன் 'சேவை'யின் பூர்த்தியை எண்ணி, பூபதியார் களிப்புற்றிருந்தார்.

''செம்மரச் சிங்காரக்கூடம் அமைந்து, அதிலே 'சீலம்' குறித்து, சிறப்புரை நிகழ்ந்தானதும் திருமணம் என்று கூறப்பட்டதால், ஒவ்வொரு தூண் முடிவதும், உள்ளத்துக்கு மகிழ்ச்சியூட்டிற்று, காதலருக்கு.

''நாளையோடு தீர்ந்தது; நாசகாலர்கள் ஒழிவார்கள்''

பிரசாதன், இந்தப் பேச்சுக் கேட்டதும், திடுக்கிட்டுப் போனான். ஸ்வாமிகள் அல்லவா, பேசுகிறார்! உற்றுக் கேட்டிடலானான்.

'ரங்கராஜா! நீ ஆரிய மார்க்கத்துக்குச் செய்துள்ள சேவை, மகத்தானது. மனு மாந்தாதா காலத்திலே ஆரியம் செழித்தது—இப்போது அழிய இருந்த ஆரிய மார்க்கத்தைக் காப்பாற்றும் பெரும்பாக்கியம் உன்னைச் சேர்ந்தது. உத்தமனே! உன்னை நண்பனாக அடையப்பெற்ற நானே பாக்கிய சாலி.''

''என்னால் என்ன ஸ்வாமி! எல்லாம் தாங்கள் காட்டிய வழி நடந்தேன்; இட்ட கட்டளையைநிறைவேற்றினேன். என்னால் என்ன சாதிக்க முடியும்?''

''உன்னால் என்ன சாதிக்க முடியும் என்றா கேட்கிறாய்? நலந்தா வெந்து சாம்பலாகப் போகிறதே நாளைக்கு, யாரால்? உன் கைங்கரியமல்லவா இது? தூள் தூளாகப் போகிறது, அவர்கள் கட்டி வைத்துள்ள மாடங்களும், கூடங்களும்! நலந்தாவிலே கிளம்பப் போகும் ''ஜ்வாலை' நெடுந்தொலைவு தெரியும்—நெடுந்தொலைவு கற்கள் பிளந்து நாலா பக்கமும் பறக்கும்; கட்டிடங்கள், சடசடவெனச் சரியும்...''

''ஸ்வாமி! அந்தப் புத்தப் பண்டாரங்கள்...''

''அவர்களா? ஆரியத்தை அழித்தொழிக்க முனைந்த அந்த அசுரர்களா? கட்டிடத்தின் அடியிலே சிக்குண்டு சிலர், நெருப்பிலே பலர், இடிபாட்டுக்கடியிலே சிலர்—இப்படிச் செத்துத் தொலைவார்கள். பிணக் குவியல்! நலந்தா, புத்த

மதத்தாரின் பாசறை என்றார்களே—சுடுகாடு ஆகப்போகிறது, நாளைக்கு. உத்தமனே! எல்லாச் செம்மரத் தூண்களிலும் நான் கொடுத்த 'பொடி' சேர்த்துவிட்டாயல்லவா, தவறாமல்?''

''ஒவ்வொன்றிலும்—தாங்கள் சொன்ன அளவு! ஒவ்வொரு நாளும் அடிமடி நிறையக் கட்டிக்கொண்டு போயல்லவா, தூண்களின் துவாரத்தில் தூவிவிட்டு வந்தேன்.''

''அவனுக்குத் துளியும் சந்தேகம் எழவில்லையே...?''

''ஏமாளிதானே! என் மகன், வாசமல்லிகாவுடன் காதல் நாடகமாடினானே,அதைக் கண்டே நம்பிவிட்டான்''

''ராமப்பிரசாதன் அறிவானோ?''

''இல்லை, ஸ்வாமிகளே! சிறுவன், மேலும் இளகிய மனம்! இந்தக் காரியத்தை அவன் சதி, சண்டாளத்தனம், கொலை பாதகம் என்று எண்ணிக் கொள்வான். என் சொல்லையும் மீறுவான். நமது இரகசிய ஏற்பாடு அவனுக்குத் துளியும் தெரியாது...அப்படி நடந்து கொண்டேன்...''

''ஒரு மண்டலாதிபதிக்கு இருக்க வேண்டிய மதிநுட்பம் உனக்கு இருக்கிறது ரங்கராஜா. உம்! இருக்கட்டும். நீயே ஒரு மண்டலாதிபதியாக முடியாதா என்ன? ஐயன், நீ செய்துள்ள சேவைக்கு அருள் பாலித்தாக வேண்டுமே...''

''ஸ்வாமி! யாக குண்டத்து நெருப்பு, செம்மரத் தூண்களிலே பாய்ந்து, செம்மரத் தூண்களிலே உள்ள 'அரக்குப் பொடி'யினால் நாசம், வெள்ளம் போலப் பாயும்...அதிலே ஏதும் தங்கு தடையிராதே...?''

''ஒரு துளியும் இல்லை. நிச்சயமாக, நாளைய தினம் நலந்தா சர்வ நாசத்தில் சிக்கப் போகிறது. அதனாலேயே, நானும், மற்றும் சில ஆரியோத்தமர்களும் வெளியேறிவிட்டோம்.''

''பாவிகளா!'' என்று தன்னையும் மீறிக் கூச்சலிட்டு விட்டான், ராமப்பிரசாதன்.

'மல்லிகா! மல்லிகா!' என்று அலறினான் — ஓடினான் நிசப்தமாய் இருந்த வீதிகளின் வழியே அவன்.

நலந்தாவுக்குத் தீ வைக்கிறார்கள்!

நலந்தாவுக்கு நாசம் விளைவிக்கிறார்கள்!

நாளைய தினம் நலந்தாவில் படுகொலை!

வாசமல்லிகா!

நலந்தா!

நலந்தா!

கதறுகிறான் ராமப்பிரசாதன். மக்கள் நடுநிசிக் கூச்சல் கேட்டு பதைத்தெழுந்து வந்தனர்.

வாசமல்லிகா, மாளிகையில் இல்லை! தந்தையுடன், நலந்தா புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கிறாள் என்று காவலாளி சொன்னான். ஐயோ! என்று பயங்கரமாகக் கூச்சலுடன் ஓடினான், அவர்கள் சென்ற திக்கு நோக்கி.

விரட்டிக் கொண்டோடினர், பண்டிதரும் ஸ்வாமிகளும்!

''விடாதே, பிடி! விடாதே, பிடி!'' என்று கூவினர்.

சிலர் பிடிக்க முயற்சித்தபோது, ராமப்பிரசாதன், பாதையில் கிடந்த பெருங் கற்களை அவர்கள் மீது வீசினான்—பற்களை நறநறவெனக் கடித்தான் ''தொட்டால் பிணமாவீர்கள்! பாவிகளே! அங்கே அறிவாளர்கள், அறநெறி அறிந்தோர், புத்தனின் பொன்மொழியை உலகுக்கு அளிக்கும் உத்தமர்கள் படுகொலை செய்யப்படச் சதி நடந்துவிட்டது; நலந்தாவுக்குத் தீ மூட்டப் போகிறார்கள். உடனே தடுத்தாக வேண்டும்—தொடாதே—கிட்டே வராதே'' என்று கூவியபடி ஓடினான். தடுக்க வந்தான் ஒரு குதிரை வீரன்—அவனைக் குப்புறக் கீழே தள்ளிவிட்டான்—குதிரை மீதமர்ந்தான்—சிட்டாகப் பறந்தது பரி.

நலந்தாவுக்குப் போகும் பாதை.

அந்த அறிவாலயம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார், பூபதியார், மகளுடன்; நாலு மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில்.

அதோ, தெரிகிறது, தொலைவில்—குதிரையின் குடல் அறுந்துவிடும் வேகத்தில் செலுத்துகிறான்.

மல்லிகா!

மல்லிகா!

வண்டியில், பாதித் தூக்கத்தில் இருந்த மல்லிகாவுக்கு, இன்பக் கனவு போலிருக்கிறது, அந்தக் குரலொலி.

பூபதியார் வண்டியை நிறுத்தச் சொன்னார்; கீழே இறங்கி நின்றார்; வாச மல்லிகா விழித்துக் கொண்டு கொள்ளைக்காரனோ என்ற பயத்துடன் பார்த்தாள்.

குதிரை நின்றது; கடிவாளம் அறுந்தது;

''ஐயனே! என்னை மன்னித்தருளும்'' என்று பூபதியார் பாதத்தில் வீழ்ந்தான் ராமப்பிரசாதன்.

''என்ன இது? மகனே எழுந்திரு...''

''ஐயோ! நலந்தாவுக்குத் தீமூட்ட, சதி நடந்திருக்கிறது. சதிகாரன் என்னைப் பெற்ற மாபாவி! சடைமுடிதரித்த சண்டாளனுக்குத் துணை—உடந்தை.''

''நலந்தாவுக்கு தீ! என்ன ராமப்பிரசாத்! மன மருட்சியில் பேசுகிறாயா?''

''இல்லை ஐயனே, இல்லை! ஆரிய வஞ்சகர்கள், அந்த அறிவாலயத்தை அழித்துவிடவும், அதிலுள்ள புத்த சாதுக்களைச் சாகடிக்கவும், நாளையதினம், நலந்தாவைக் கொளுவிடச் சதி செய்துவிட்டார்கள். நீங்கள் அனுப்பியிருக்கிற செம்மரத் தூண்களிலே இந்த அழிவுக்கான அரக்குப்பொடி அடைக்கப்பட்டிருக்கிறது.''

பூபதியார் பதைத்தார்—தலை தலை என்று அடித்துக் கொண்டார்.

வண்டி கிளம்பிற்று, நலந்தாவை நோக்கி. மாடுகளுக்குத் தெரியுமா, நடைபெறப் போகும் 'நீசத்தனம்' இப்படிப் பட்டது என்று?

குதிரை வீரர்கள் பத்துப் பேர் 'ஸ்வாமிகளின்' ஆட்கள் வந்து கொண்டிருந்தனர் ராமப்பிரசாதனைப் பிடித்திட.

மாட்டு வண்டிக்கும் குதிரைகளுக்கும் போட்டி. முடிவு என்னவாகியிருக்க முடியும்?

வண்டியைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.

''ராமப்பிரசாத்! நான் இவர்களுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறேன்—வண்டிக்காரனும் துணை இருக்கிறான்—நீ, மல்லிகாவுடன்...'' என்றார் பூபதியார்.

''இந்தக் கொலைபாதகர்களிடம் தாங்கள் சிக்கிக் கொள்வதைப் பார்த்த பிறகா...'' என்றான் பிரசாத்.

''அங்கே, நலந்தாவில் ஆயிரக்கணக்கானவர்கள், தம்பி, அவர்கள் நாட்டுக்கு, உலகுக்கு, மனித குலத்துக்கு ஆற்றவேண்டிய தொண்டு, மிகத் தேவையானது...எனக்கென்ன இன்னும் வாழ்வு...''

''ஐயனே, ஐயனே.''

''கீழே இறங்குங்கள் மரியாதையாக...உயிர் தப்ப வேண்டுமானால்'' என்று கொக்கரித்தனர் முரடர்கள்.

கை கலப்பு மூண்டுவிட்டது—வாட்கள் சுழன்றன—தடிகள் நொறுங்கின—மாடுகள் மிரண்டன—வண்டி உருண்டது—சக்கரத்தில் சிக்குண்ட மல்லிகா, கதறக்கூட இல்லை.

எதிர்ப்புறமிருந்து, பெரிய நெருப்பு ஜ்வாலை பார்த்தார், பூபதியார்—'ஐயோ, என்னாலே, என் ஏமாளித்தனத்தாலே ஏற்பட்டதே பெரும் அழிவு' என்று கதறினார்.

காதுகளைப் பிய்த்துக் கொண்டு போகும் சத்தம்—ஜ்வாலை மேலே, மேலே எழும்பிற்று. நலந்தா நாசமாகிக் கொண்டிருக்கிறது—இங்கே மூவரும், குற்றுயிராகக் கிடக்கின்றனர்.

''பஸ்பமாகிவிட்டதா! ஒழிந்தார்கள். நலந்தா அழிந்த பிறகு இதுகளுக்கு நாதி ஏது'' என்று கோரச் சிரிப்புடன் கூவினார் ஸ்வாமிகள்.

''தங்கள் மகன்...'' என்று கூறிக் கண்ணீர் சிந்தினான், யாரோ ஒருவன்.

''ஆரிய மார்க்கம் பிழைத்தது; பண்டிதரே, உம்மாலே, நலந்தா அழிந்தது. மலைமலையாகக் குவித்து வைத்திருந்த ஏடுகள் பிடி சாம்பலாகி இருக்கும். எந்த மன்றத்தில் அமர்ந்து அவர்கள் தமது மார்க்கத்தைப் போதித்து வந்தனரோ, அங்கேயே, பிணம்—பிணமா—வெந்து கருகிச் சாம்பலாயினர்' என்று பேய்ச்சிரிப்புடன் கூவினார் ஸ்வாமிகள்.

''என் மகன் இறந்துவிட்டானாம், சுவாமி'' என்று கதறினார் பண்டிதர்.

''பகவத் சங்கற்பம், பண்டிதரே! பதினாயிரம் வராகன் உமக்கு முதல் தவணையாகத் தருகிறேன்'' என்றான் கல்னெஞ்சக்காரன்.

''பாவி'' என்று பண்டிதர் பதைத்துக் கதறிக் கொண்டே, ஸ்வாமிகளைத் தாக்கினார்.

''மகன் இறந்தானாம்—இவனுக்கு அதனால் மனக் குழப்பம்—பிடித்துக் கட்டிப் போடுங்கள்'' என்று கட்டளை பிறப்பித்தான் காதகன்.

★

# 3
# தஞ்சை வீழ்ச்சி

**சி**ங்கம் இரை கிடைக்காது திகைத்தாலும், சிறு நரிக்கு எங்கேனும் ஏதேனும் இரை கிடைத்துவிடும் என்பர்! வீரர்கள் வாழ்வு இழந்து, தாழ்வு தீண்டிடும் வேதனை நிலை பெறுவதுண்டு—வஞ்சகர்களோ எப்படியோ, எதைச் செய்தோ, வாழ வழி அமைத்துக் கொள்வர். இந்தச் சோகச் சுமையை, தமிழக வரலாற்றுச் சுவடியிலே காணலாம்—தெளிவாகவும் விளக்கமாகவும் இராது—ஓரிரு வரிகள்—சிறுசிறு சம்பவங்கள் என்ற முறையிலே!!

முடிதரித்த மன்னர்கள் அரசு இழந்தால் அல்லற்படுவர்!

புதிய முலாம் பூசப்பட்டவர்கள் மன்னர்களாகி, புது வாழ்வு துவக்குவர்.

அரசர்கள், வாழ்வு தாழ்வு எனும் இரு நிலைகளிலும் உருட்டப்படுவர், கால வேகத்தால். ஆனால், புரோகிதரோ, புன்னகையை இழந்ததில்லை! மன்னன் மாறுவான்; மணிமுடி, சிரம் மாறும்; மறையவர் குலத்துதித்து அரசவையில் இடம் பிடித்த 'ஜடாமுடி'யின் நிலை மாறாது.

'இவர்களல்லவா பாக்யசாலிகள்' என்பர் யாரும்—இவர்களின் முழு உருவம் இதுமட்டுமல்ல.

நாட்டு நிலை மாறினாலும் தங்கள் நிலையிலே தாழ்வு புகாதபடி பார்த்துக் கொள்ளும் திறமைசாலிகளாக மட்டுமல்ல, புரோகிதர் இருந்தது—நாட்டுநிலை இப்படி இப்படி மாறிவிடக்கூடும் என்று முன்கூட்டியே அறிந்துகொண்டு, அதற்கேற்பத் தங்களைத் தயாராக்கிக் கொள்ளும் யூகசாலிகள்!!

அதுமட்டுமா! நாட்டின் நிலையை இவ்வண்ணம் மாற்றி அமைத்தால், தமது நிலையிலே இவ்வண்ணம் ஏற்றம் கிடைக்கும் என்று யூகித்து, யாரும் அறியா முறையில், எவரும் குறை கூறாத தன்மையில், நாட்டு நிலையை மாற்றி அமைப்பர்.

இதன்படி, மணிமுடிகள் உருண்டிடவும், மண்டலங்கள் கை மாறிடவும், மன்னர்கள் ஓடிடவும், மாமிசப் பிண்டங்கள் மன்னர்களாகிடவுமான, 'சம்பவங்களை' உண்டாக்கி வந்தனர், புரோகிதர்கள்; குருமார்கள் என்ற நிலைக்குக் குறைவு ஏதும் ஏற்படாத வகையிலே, இந்தச் 'சம்பவங்களை' உண்டாக்குவர்.

அரசுக்குள்ளே சமர் மூளும்—களங்களிலே கழுகுகள் வட்டமிடும்—அரண்மனைகளிலே அழுகுரல் எழும்—கோட்டை கொத்தளங்கள் தூள் தூளாகும்—அகழிகளிலே முதலைகளுக்கு விருந்து கிடைக்கும்—இந்த நாட்டுக்கும் அந்த நாட்டுக்கும் போர் என்று சரிதம் இந்தச் சம்பவத்துக்குப் பெயரிடும்—ஆனால், மிக மிகக் கவனமாகக் கூர்ந்து பார்த்து, விடுபட்ட வரிகள், துண்டாடப்பட்ட நிகழ்ச்சி ஓவியங்கள் ஆகியவற்றைக் கண்டறிந்தால் சரிதம் வெளிப்படையாகக் கூறாமலிருக்கும் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். வீண் வேலை என்றெண்ணிச் சிலரும், விஷ வாடை வெளியாகிவிடுமே என்று சிலரும், விளக்கமறிவது சிரமமான காரியமாயிற்றே என்று சிலரும் இருந்துவிடுகின்றனர்—இதனால் முழு உண்மை மங்கி, மடிந்து விடுகிறது. கமண்டல நீருக்கும், மக்களின் குருதிக்கும் இருந்துவந்த பயங்கரத் தொடர்பு மறைக்கப்பட்டுவிடுகிறது. மங்கிக் கிடக்கும் உண்மைகள், தேய்ந்து தெரியும் சம்பவங்கள்—இவைகளிலே ஒன்று, தஞ்சை வீழ்ச்சி—வீரம், வஞ்சகத்தால் வதைக்கப்பட்ட விபரீதச் சம்பவம்.

தஞ்சைத் தரணி தமிழகத்தின் பூஞ்சோலை—அன்றும்!

கடல் கொந்தளித் தெழுந்ததால் புயல் கிளம்பி, இன்று அந்தப் பூந்தோட்டம் அழிவுற்றுக் கிடக்கிறதே—அது போன்றே கமண்டல நீர் கொந்தளித்தது; வஞ்சகப் புயல்

வீசி, தஞ்சைத் தரணியை முன்னமோர் நாள் பிணக்காடு ஆக்கிற்று!

தஞ்சை செல்வோம்—ஆண்டு 1673! ஆள்பவர், வேந்தன் விஜயராகவன்!!

தஞ்சைத் தரணி மட்டுமல்ல, தமிழகமே வைதீக ஆரிய மார்க்கத்துக்கு இரையாகிவிட்டிருந்தது—எனவே, புரோகித வகுப்பாருக்கு, அளவுகடந்த செல்வாக்கு. வீரத்தாலல்ல, பக்தியினால்தான். மன்னர்கள் புகழ் தேடுவது என்ற முறை வலுத்துவிட்ட காலம் அது. இத்தனை களம் கண்டான், வீரப்போரில் ஈடுபட்டு இவ்வளவு தழும்புகளை உடலில் பெற்றான் என்று மன்னர்களைக் குறித்துப் புலவர் பெருமக்கள் வியந்து பாடும் காலம் அல்ல—இன்னின்ன கோயில்களைக் கட்டினான்—இலட்சம் பிராமணர்களுக்கு அன்னதானம் அளித்தான் என்று பிராமணோத்தமர்கள் பாராட்டிப் பேசி, ஆசீர்வாதம் செய்துவந்த காலம்.

மன்னர் மகனுக்கு 'அட்சராப்பியாசம்' (கல்வி துவக்கம்) நடக்கும். நவரத்னங்களைக் கொட்டி, அதைக் கொண்டு, அரசகுமாரனை, ஒரு அந்தணர் எழுத வைப்பார்! பிறகு நவரத்னங்கள், அந்தணர்களுக்குத் தானமாகத் தரப்படும். அப்போதுதான், அரசகுமாரன் புத்தியில் 'பிரகஸ்பதி'யாக வேண்டும் என்று பிராமணர்கள் ஆசீர்வாதம் செய்வர்!

கும்பகோணம் இராமர் ஆலயம், கும்பேஸ்வரர் கோயில், திருவையாறு ஐம்புசேகர் தேர், பசுபதி கோயிலில் தேனுகேசுரர் மண்டபம், மன்னார்குடியில் மணிமண்டபம்—இப்படித் திருப்பணிகள் செய்வர், மன்னர்கள்—மறையவர் வாழ்த்துவர்—மகேசன் அருள் பாலிப்பார்!

துலா புருஷதானம்—ஸ்வர்ண கோதானம்—பூதானம் இப்படிப் பலப்பல!

அந்தணர் அகமகிழ இவைகள்—மன்னர் மனமகிழ்ச்சிக்காக அரண்மனை, கலைக்கூடமாக்கப்பட்டு விளங்கிற்று. கல் பேசும் சிற்பியின் திறத்தால்! கலை, துடியிடையாக,

கொவ்வை அதரமாக, கடைக்கண்ணாக, இடை நெளிவாக, இசையாக, நாடகமாக, நானாவிதமான உருவிலே, கொஞ்சிக் கூத்தாடி, மன்னர்களைக் களிப்புக் கடலிலே தள்ளும்! அருக்கு மங்கையர் மலரடி வருடுவர் அரண்மனையில். எனினும் ஆலயம் சென்று அரங்கனின் திருவடி சரணம் என்று பக்தியையும் சொரிவர்! சல்லாபிகளின் சதங்கை ஒலிக்கும், அரண்மனையில்—ஆலயமணியோசை மன்னன் மனதிலே பகவத் நாம சங்கீர்த்தனத்தின் பெருமையைப் பதிய வைக்கும்! கூந்தலைக் கோதும் கரங்கள் அரண்மனையில்—கூப்பிய கரங்கள் ஆலயத்தில்! இங்ஙனம் இன்பத்திலே மூழ்கியிருந்த மன்னர்கள் காலம்!

விஜயராகவனும், மகாபக்தன்—மகா ரசிகன்! கடவுட் காரியமும் கலை ஆர்வமும், ஒத்த அளவு கொண்டிருந்தான்!

காவியம் படித்தலும், ஓவியத்தைக் கண்டு களிப்பதும், தர்க்கம் கேட்பதும்,பண்டித சிரோமணிகளிடம் பாடம் கேட்பதும், நாடகம் காண்பதும், நாதன் அருள் பெறும் மார்க்கத்தை ஆராய்வதும், விஜயராகவ வேந்தரின், நித்திய நடவடிக்கைகள்.

பிராமணோத்தமர்களின் மனம் துளியும் கோணலாகாது என்ற திடம் கொண்ட தீரன், மகன் மன்னாரு என்பான், துள்ளுமத வேட்கைக் கணையாலே தாக்கப்பட்ட நிலையில் ஓர் ஆரியமங்கையிடம் தகாத முறையிலே நடந்து கொண்டது கேட்டு, மகனென்றும் பாராமல், சிறையில் தள்ளிய சீலன்! பூலோக ஸ்வர்க்கத்தில் பூதேவர் புடை சூழ கொலுவீற்றிருந்த கோமான்!! அந்த விஜயராகவ வேந்தர் மீது போர் தொடுத்தான் மதுரை சொக்கநாதன்! கடும் போர்! விஜயராகவன், வயோதிகப்பருவம்—சொக்கநாதன் படைகளோ சூறாவளி வேகத்தில், தஞ்சைத் தரணியைத் தாக்குகின்றன! மன்னன் மருண்டான்—மகேசனை வேண்டினான்—மறையவர் குலத்துதித்த பெரியவரை நாடினான்—சோமசுந்தர ஸ்வாமி என்பாரிடம் சென்று நிலைமையைக் கூறி, மார்க்கம் கேட்கலானான் மன்னன்.

''ஸ்வாமி! அடியேனுக்கு வந்துள்ள இந்த ஆபத்து போக மார்க்கம் கூறி அருள வேண்டுகிறேன்.''

''விஜயராகவா! விசாரத்தை விடு; பரம பக்தனான உன்னைப் பகவான் கைவிடுவாரா? ஏன் கலங்குகிறாய்?''

''சொக்கன் படை பிரம்மாண்டமானது.''

''துரியனிடம் கூடத்தான் இருந்தது—கண்ணன் பாண்வரைக் காப்பாற்றினான்—நீ தரும சொரூபன்—தடுமாற்றம் வேண்டாம்—ஜெயம் நிச்சயம்.''

மன்னன் திகைத்து நிற்கிறான்—சோமசுந்தர ஸ்வாமிகளின் சீடர்களிலே ஒருவன், குருவாக்கியத்தை விளக்கமாக விரிவுரை செய்கிறான்.

''மன்னரே! குருதேவர் கூறிய பிறகும், குனிந்த தலை நிமிராமல் இருப்பதோ? கொற்றவனே! நிமிர்ந்து நில்லும். கூர்வாளை ஏந்திப் புறப்படும் போருக்கு. வெற்றி நிச்சயம். படைபலம் பாண்டி நாட்டானிடம் இருந்து என்ன செய்ய முடியும்! பரமனின் துணை, அதனினும் மேலான பலமன்றோ? விஜயராகவ வேந்தரே! உமது பக்தியின் மேன்மையை உணராதவரன்றோ, இந்தப் போரின் முடிவு என்னாகுமோ என்று கவலை கொள்வர். எவ்வளவு கைங்கரியங்கள் செய்திருக்கிறீர்—ஆலயத் திருப்பணிகள் அனந்தம்—பிராமணருக்குத் தந்துள்ள தான தருமங்கள் கொஞ்சமா—நீர் செய்த சத்காரியம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அக்ரோணிச் சேனையாக உருவெடுத்துக் களத்தில் உமக்கு உதவி புரிந்து, மதுரைப் படையைச் சிதறடிக்கும். இது குருதேவர் வாக்கு— சத்ய வாக்கு! சத்யத்தின் முன்பு, எத்தகைய சேனாசக்தியும் நில்லாததல்லவா!

ஆயிரமாயிரம் அந்தணச் சிரேஷ்டர்கள், உமது வெற்றிக்காக அரிபரந்தாமனையும் அரனையும் வேண்டிப் பூஜை செய்தவண்ணம் உள்ளனர். அவர்களின் ஆசி, வெற்றியைத் தரும் என்பதிலே, வேதசாரம் உணர்ந்த உமக்குச் சந்தேகம் வரலாகுமா?

அதோ! ஆலயமணிகள் ஒலிக்கின்றன! உமது வெற்றியை வேண்டி விசேஷ பூஜைகள் செய்யப்படுகின்றன!

நாலு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்திநான்கு கலைக்கியானம் உணர்ந்து பரமனின் அருளைப் பெற்றுள்ள பிராமணோத்தமர்களின் ஆசியுடன் போருக்குக் கிளம்புகிறீர்—வெற்றியுடன் திரும்பிவிடுவீர்—இது நிச்சயம்—சத்தியம்—ஜெயவீரராக விளங்குவீர், விஜயராகவரே! விசாரம் வேண்டாம். வெற்றி நிச்சயம் புறப்படும்.''

விஜயராகவ வேந்தருக்கு மனம் நிம்மதியாயிற்று—புதிய நம்பிக்கை பிறந்தது—களம் புகுந்தார்—கடும்போர்—போரின் கடுமை விநாடிக்கு விநாடி வளர்ந்தது—நாசம் தஞ்சையை வேக வேகமாகத் தழுவிக் கொள்ளலாயிற்று.

தஞ்சைப் படைகள் தோற்றோடின—மன்னன் களத்திலே பிணமானான்—மகனும் அங்ஙனமே! தேவிமார்கள் தீயில் வீழ்ந்தனர்! விஜயராகவனின் குடும்பமே இறந்து பட்டது, ஒரே ஒரு சிறு குழந்தை தவிர! அந்தக் குழந்தையை, யாரோ, எங்கோ, எடுத்துச் சென்றுவிட்டனர்! தஞ்சை, சொக்கநாதனிடம் சிக்கிவிட்டது. ''பக்திக் கவசம் பூண்டிருக்கிறாய், மன்னவா! மாற்றானின் படை உன்னைத் துளைக்காது'' என்றார் குரு! சீடர்கள் அதற்கு ஆதாரங்களைக் கூறினர்—தஞ்சை தீயுண்ட நிலை பெற்றது.

மன்னனை, அவனாற்றிய 'புண்யம்' காப்பாற்றும் என்று புகன்ற பூசுரத் தலைவருடைய சீடகோடிகளிலே ஒருவராக உங்களில் யாரேனும், இருந்ததாக எண்ணிக் கொள்ளுங்கள். எனக்கேன், எத்தர் கூட்டத்திலே இடம் என்று கேட்பீர்—ஒப்புக்கு; உண்மையாகவே, அல்ல! கற்பனை புரிக்குச் செல்ல அழைப்பு; வேறொன்றுமில்லை.

குருவோ ஆசீர்வதித்தார்—கொற்றவனோ தோற்றான்; பிணமானான்! சீடனின் மனம் என்ன நிலைபெறும்—சிறிதளவு சிந்தனையும், கொஞ்சம் மனிதத் தன்மையும் கொண்ட சீடன், என்ன எண்ணுவான்! என்ன எண்ணுவீர்கள், நீங்கள், சோமசுந்தர ஸ்வாமியின் சீடர்களிலே ஒருவராக இருந்திருக்க நேரிட்டிருந்தால்?

பயம் பிடித்துக்கொண்டு, ஓட்டமெடுத்துவிட வேண்டும், தஞ்சைத் தரணியைவிட்டு என்று எண்ணுவீர்களா?

சுவைக்குதவாத பேச்சாற்றி வந்த குருதேவன் முகத்தைக் காண்பதும் தீது என்று எண்ணுவீரா?

குழப்பமடையத்தானே செய்யும் மனம்.

இதோ ஒரு சீடன்—கற்பனை உருவந்தான்—கட்டிளங்காளை—காவி உடை—களம் புகுமுன், சோமசுந்தரரின் காலடி வீழ்ந்து ஆசி பெற்ற மன்னனைக் கண்டவன்—தஞ்சை நாசமானதைக் காண்கிறான். கண்ணீர் காவி உடையிலே வீழ்கிறது; கருத்திலே புதியதோர் டலர்ச்சி பிறக்கிறது; மெள்ளக் கூறுகிறான்.

'எங்கும் யாக குண்டங்களை எழுப்பினான்! தேவ ஒலியை நிரப்பினான்! வேள்வித் தீ எங்கும் தோன்றின! உற்சவாதிகள் அமோகம்! கலைக் கூத்தாடிய இடம்! கவிதை புரண்டோடிய இடம்! பாதிப்பிரவாகம் மிகுந்த தஞ்சைப் பதி தோற்றது!

அதோ, கேட்கிறது, தோற்ற துயரால் உயிரை மாய்த்துக் கொள்ளும் தஞ்சை வீரர்களின் மரணக் கூக்குரல்!

அந்தோ! பாண்டிய நாட்டுப் படையின் வெற்றி முழக்கம்.

ஐயோ! அதோ ஜ்வாலை! தஞ்சை அந்தப்புர மாதர்கள் தீயில் வீழ்ந்து மடிகிறார்கள்—படுகொலை—சித்ரவதை—பக்திக்குப் பரிசு இதுவா? பிராமண ஆசீர்வாதப் பலன் இதுதானா? ஓம குண்டம் பலனளிக்கும் என்றனரே—அதோ, மாதர் மடிகின்றனரே பெருநெருப்பில்!

குருதேவர் கூறினது...பூதேவர்கள் புகன்றது...ஆலய விசேஷ பூஜைகள்—ஆசி மொழிகள்—அந்தணர்களின் மந்திர பலம்...எல்லாம் எங்கே? ஏன் பொய்த்துப் போயின? தோல்வியைத் தடுக்க முடியவில்லையே!—பக்திமானான மன்னனைப் பாதுகாக்க, புண்யம், அரணாக நிற்கவில்லையே! புகை கிளம்புகிறதே அரண்மனையில்! களத்திலே புலம்பும் குரல் கேட்கிறதே! என்ன சத்தம்? ஆ! என்ன, என்ன?

மன்னன் மாண்டான்!

ஐயோ!

மன்னரும் மாண்டான்!

அட தெய்வமே!

மாதரசியும் மாண்டாள்.

ஆ! என்ன கொடுமை!

வெற்றி பெற்ற பாண்டியன் படை பவனி வருகிறது!

பவனி! வெற்றிப்பவனி! பாண்டியப் படைக்கு! விஜய ராகவன் தோற்றான்—குடும்பமே சர்வநாசம் அடைந்தது... கொடுமை—கொடுமை! சொல்லொணா வேதனை—தோல்வி! தோல்வி! விஜயராகவனுக்கா தோல்வி? இல்லை! வீணுரை தோற்றது; வேதமும் வேள்வியும்—மானியமும் தானமும் யாகமும் யோகமும்—திருப்பணியும் திருப்பாசுரமும்—அந் தணரும் அவர் தம் ஆசியும் தோற்றன! ஆஹா! மதிமோசம் போனான் மன்னன்! மதியை மாய்த்தோம், எம் போன் றோர்கள் கூடிக்கொண்டு! மன்னனைப் பக்திமானாக இருக்க செய்தோம்—பூரித்தோம்—பாராட்டினோம்—பலவானால் இன்று தோற்கடிக்கப்பட்டான்—ஏமாற்றினோம், மன்னனை —ஏமாளி நானும் நம்பினேன்—நம்பச் செய்தேன். நாடு அன்னியனிடம்!

தஞ்சை வீரனின் பிணம்!

பாபம். வீரனே! களத்திலே நின்று போரிட்டபோது, நீ எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தாயோ, என்னைப் போலவே! நமது மன்னர் பக்திமான்! பரமன் அருள் பெற்ற பிராமணோத்தமரின் ஆசிபெற்ற புண்யவான். அவருடைய வெற்றிக்காக ஆலயங்களிலே விசேஷ அபிஷேகம் நடந்து கொண்டிருக்கிறது. வெற்றி நிச்சயம் நமக்குத்தான் என்று உறுதியுடன் போரிட்டிருப்பாய்—களத்திலே பிணமானாய் கர்ம வீரனே! உன் காலைத் தொட்டுக் கும்பிடுகிறேன்— என்னை மன்னித்துவிடு-இறந்த வீரர்கள் நீங்கள் அனைவரும் என்னை மன்னிக்கக் கோருகிறேன்.

நான் சோமசுந்தர ஸ்வாமிகளின் சீடரில் ஒருவன்—பக்தி வெல்லும்—சத்யம் ஜெயிக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டியவர்களில் ஒருவன்.

மன்னன், நாங்கள் காட்டிய மார்க்கத்தைப் பின்பற்றி நடந்தான்—நீங்கள் மன்னரைப் பின்பற்றினீர்கள், தோல்வி கண்டீர்கள்—எம்மால்—யாகத்துக்குச் செலவான பணம், உமக்கு இன்னோர் வாளைத் தந்திருக்கக்கூடும்! திருப்பணிக்குச் செலவான திரவியம், இன்னொரு கோட்டைச் சுவருக்குச் செலவாகியிருந்தால்—பக்திக்காகச் செலவிட்ட பணம், பயனற்றுப் போய்விட்டது—நீ பிணமானாய்—நான்...? யோகியாவதற்கு இத்தனைப்பாடு —சே! யோகம் தோற்ற பிறகு—ஏன் இந்தக் கோலம்—நண்பா! உன்னை நம்பவைத்த கூட்டத்திலிருந்து இதோ விலகுகிறேன்—உன் தாளைக் கும்பிட்டேன்—இனி வீணனல்ல—வீரன்—வெற்றிக்காக வீரப்போர்—எங்கே சொக்கநாதன் படை! எங்கே! எங்கே?''

இதுதான் சரி—இப்படித்தான் நான் செய்திருப்பேன்! சேர்ந்தே இருந்திருக்கமாட்டேன், காவியக் கூட்டத்தில்—ஏதோ ஒரு காரணத்தால், எப்படியோ சேர்ந்திருந்தாலும், தஞ்சைத் தரணிக்கு அழிவு வந்ததைத் தடுத்திட முடியாது போன, வைதீகக் கூடாரத்தைவிட்டு வெளி ஏறித்தான் சென்றிருப்பேன்—வாள் எடுத்து வீரப்போரிடக் கிளம்பியிருப்பேன் என்று கூறுவீர். நான் அழைத்து வந்துள்ள கற்பனைக்காளை, அந்த நிலை பெற்றான்; சொக்கநாதன் படையைத் தன்னால் முடிந்தமட்டில் அழித்தொழிக்க எண்ணினான்.

வேந்தன் விஜயராகவனின் தஞ்சைத் தரணி, மதுரை மன்னன் சொக்கநாதனிடம் சிக்கிவிட்டது. சொக்கநாதன், தன் தம்பி, அளகிரி என்பானை அரியாசனம் அமரச் செய்தான்! அளகிரியின் படை தஞ்சைத் தரணியில், எவ்விதமான எதிர்ப்பும் தலை தூக்க முடியாதபடி, காவல் புரிகிறது. காவியைக் களைந்துவிட்டு, கட்கமெடுத்து, நாட்டை மீட்கப் போ

கூற முடியும் அவரைப் பற்றி—அவர் போரிலே மாண்டார்—நான் வெளியூர் சபை ஒன்றிலே நாட்டியமாடப் புறப்படுகிறேன்—என் பெயர் சசிலேகா.''

''சசிலேகாவா?''

''ஆமாம்! விஜயராகவ மன்னர் சபையிலே வீற்றிருந்த மகா பண்டிதையின் பெயரையே என் அம்மா எனக்குச் சூட்டினார்கள்.''

''அழகான பெயர்.''

''ஆனால் பொருத்தமில்லை—நான் பண்டிதையுமல்ல—பாடி ஆடிப் பிழைப்பவள்.''

''பாடலும் ஆடலும், கலை—சாமான்யமன்று.''

''பொருத்தமற்ற பெயர் எனக்கு இருப்பதில் என்ன ஆச்சரியம்? அதனால் என்ன கவலை—நமது மன்னர் தோற்று இறந்தார்—பெயர்?''

''விஜய—ராகவன்.''

''உ...ம் பெயருக்கேற்றபடி என்ன நடந்தது—பெயர், பெற்றோரின் ஆசையின் அளவுக்குறி; அவ்வளவுதான். உமது பெயர்...?''

''ஊஹூம். சொல்லமாட்டேன்—அந்தப் பெயர் எனக்குத் துளியும் பொருத்தமில்லை என்று கூறிவிடுவாய்—உன் கேலி மொழியை என்னால் தாங்க முடியாது.''

''தவவேடத்தைத் தாங்கியிருந்த உமக்கு, கேலிப் பேச்சைத் தாங்கவா சிரமமாக இருக்கும். கூறுங்கள்;என்ன உமது பெயர்?''

''கூறமாட்டேன். சசி! நீயே வேறு ஒரு பெயர் வைத்துவிடு எனக்கு!''

''தொட்டிலில் படுத்துக் கொள்ளும் முதலில்—கூறுங்களென்றால்...''

''என் பெயர், எனக்கே இப்போது பிடிக்கவில்லை. நிச்சயமாகத்தான்—நீயே ஒரு பெயர் வைத்துவிடு.''

''என்னவென்று பெயர் வைப்பது? விசித்திரம் என்ற பெயர் பொருத்தமாக இருக்கும். சம்மதமா?''

''ஊஹூம்—வேறே பெயர்—கலாதாசன் என்று பெயரிடேன்.''

''கலைக்கு, திடீர்த் தாசர்கள் கூடாது.''

''உன் இஷ்டம், ஏதாவது பெயர்.''

''சின்னஸ்வாமி!''

''வேண்டாம்! அந்த நிலைதான் வேண்டாம் என்று விட்டுவிட்டேனே!''

''சரி! வீட்டிலேயே இரும்—நான் அரண்மனை போய் வருகிறேன்—பிறகு 'பெயரிடுகிறேன். ஆமாம்! தவசியாக இருந்தவர் தாசி வீட்டில் தங்குவது...''

''நான் தவசியுமல்ல—இது இனித் தாசி வீடுமல்ல.''

''தைரியம் அமோகமாக இருக்கிறது.''

''சசி! உன் நெஞ்சிலே நான் இடம் பெற்றேனா? ஆனந்தம்—ஆனந்தம்...ப்ரியே!...சசி! நான் புதுவாழ்வு பெற்றேன்...''

''புதுவாழ்வு எனக்குத்தான் கண்ணாளா! புதுவாழ்வல்ல! உண்மையைச் சொல்ல வேண்டுமானால், நான் வாழ்வைப் பெற்றேன்—முன்பு அன்னையிடம் சொர்ணம் தந்தவருக்கு அடிமையாக இருந்தேன்—இப்போது அன்பைக் காணிக்கையாகப் பெற்று என்னையே உங்களுக்கு அர்ப்பணிக்கிறேன்.''

''நீ தாசியுமல்ல—நான் தவசியுமாகேன்—நீ எனக்கு—நான் உனக்கு—நீ—சசி—நான்...நாம் இனி இல்லறம் நடத்துவோம்; இன்பம் பெறுவோம்—கட்டுகளும், கற்பனைகளும் ஒழியட்டும்—கண்ணே!''

''அன்பே!''

இப்படி நான், கடமையை மறந்து, காதலில்—அதிலும் ஒரு தாசிப் பெண்ணின் காதலில் ஈடுபட்டு, வேட்டையாடிக் கொண்டிருந்திருக்க மாட்டேன் என்று சீற்றத்துடன் கூறுவீர்கள். நீங்கள் செய்திருக்கமாட்டீர்கள்—நான் காட்டும் கற்பனைக் காளை அவ்வண்ணம் செய்தான்—அவன் செய்ததும், வெறும் காதல் விளையாட்டு மட்டுமல்ல, சசிலேகா மூலம் அவன் மனதிலே கொண்ட கடமையை நிறைவேற்றிக் கொள்ளவும் வாய்ப்பு கிடைத்தது. எப்படி என்கிறீர்களா? சரி, நாகப்பட்டினம் வரை சென்று வருவோம், வாருங்கள்!

நாகப்பட்டினம், நேர்த்தியான துறைமுகம் அன்று. வணிகர் கோட்டமாக விளங்கிற்று. அந்த நகரிலே செல்வம் குடி கொண்ட மாளிகை ஒன்றில்...

வேந்தன் விஜயராகவன் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் மாண்டனர்—ஒரு குழந்தை தவிர என்று கூறப்பட்டிருந்ததல்லவா! அந்தக் குழந்தை சிறுவனாகி செங்கமலம் என்ற பெயருடன், அந்த மாளிகையிலே இருந்து வருகிறான்.

வணிகனின் மகன் என்றே நாகப்பட்டினத்தார் அனைவரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சைத் தரணிக்கு மன்னனாகும் உரிமை கொண்டவன் இந்தச் செங்கமலம் என்பது ஓரிருவருக்குத்தான் தெரியும். சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர், இந்த உண்மையை அறிவிக்க. சிலர் இரகசியமாக இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். செங்கமலத்தைத் தஞ்சைத் தரணிக்கு மன்னனாக்க வேண்டும் என்பது, நாட்டுப் பற்றும், நல்லெண்ணமும் கொண்ட சிலருடைய எண்ணம். யாரார் அவ்விதம் எண்ணம் கொண்டிருந்தனர்? இரகசியமல்லவா அது? வெளியே தெரியாது! அப்படிச்சிலர் உண்டு—விஷயத்தை விளக்கமாக்குவதற்காக, நான் காட்டியுள்ள கற்பனைக் காளை கலைக்கன்னி மூலம் இதை அறிந்து கொண்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன தோன்றும் அவனுக்கு? ஆஹா! இது சரியான வழி! தனியாகப் போரிட்டு நாம் அழிவதைவிட, தக்க சமயத்தை உண்டாக்கிக்கொண்டு, தஞ்சைத் தரணிக்கு உண

மையை உரைத்திடலாம்—தக்க சமயம் வருவதற்காக, நாகப்பட்டினத்தில் செங்கமலம் இருந்துவரும் விஷயத்தைத் தக்கவரிடம் கூறி, மெள்ள மெள்ள ஆதரவு திரட்டவேண்டு மென்றுதானே தோன்றும்! தோன்றினால், விஷயம் வெளி யாகா வண்ணம் பக்குவமாக நடந்து கொண்டு, ஆதரவு திரட்டும் பணியில் ஈடுபடுவானல்லவா! சரி, நமது கற்பனைக் காளையும் கலைமங்கையும், இந்தக் காரியத்திலே ஈடுபடட்டும்; வேறு சிலர், என்ன செய்து கொண்டிருந்தனர் என்பதைக் கவனிப்போம். வாருங்கள், மீண்டும் தஞ்சைக்கு.

அதோ, செல்கிறான், ஒரு வேதியன்.

கணக்கெழுதுபவன்—ஏழ்மை நிலைமைதான்—எண் ணமோ, ஏழடுக்கு மாளிகை மீது செல்கிறது—அத்துடனும் நிற்கவில்லை—மேலே மேலே எழுகிறது!

எழுதுகோல்தான், கரத்தில்—எனினும் எண்ணமோ, செங்கோலைப் பற்றிய திட்டங்களிலே பாய்கிறது.

அரசாங்கக் கணக்கெழுத அமர்த்தப்பட்டவன்தான்— ஆனால் அவன் தஞ்சையின் தலை எழுத்தை மாற்றி எழுத வேண்டும் என்ற துணிவு கொண்டிருக்கிறான். வேதியன்— வஞ்சகன்—வெங்கண்ணா எனும் பெயருடையான்—என் கற்பனையில் உதித்தவனல்ல—உண்மை உருவம்—தஞ்சை யின் உரிமைக்கு உலை வைத்த உலுத்தன்.

அளகிரி ஆள்கிறான்—பிராமணர்கள் வாட்டமடை கிறார்கள்—அவன் ஆரிய விரோதி அல்ல—எனினும் அவன் விஜயராகவன் அல்ல! விஜயராகவனாக இருக்க வேண்டு மானால், பணம் ஏராளமாக வேண்டுமே! அளகிரியிடம் அதிகமான செல்வம் குவியவில்லை—போரில் சிக்கிச் சீர ழிந்த தஞ்சையை மீண்டும் வாழவைக்கும் அளவுக்குத்தான், செல்வம் திரட்ட முடிந்தது. விழாக்கள் இல்லை—விருந்துகள் மிக மட்டம்—தானாதிகாரியமோ சரிவர நடைபெறவில்லை— அரண்மனையிலே கலை இல்லை—ஆலயத்திலே முன்போலக் 'காணிக்கை' கொட்டவில்லை. எனவே பிராமணர்களின்

முகத்திலே மலர்ச்சி இல்லை; மனதிலே புகைச்சல் மூண்டு வந்தது. வெங்கண்ணாவோ, பெரியதோர் திட்டம் போட்ட வண்ணம் இருந்து வந்தான். அவனையொத்தவர்களிடம் பேச நேரிட்டபோது, தன் மனதிலுள்ள இரகசியத்தை வெளியிடாமல், 'சூசகமாக'ப் பேசலானான்.

''என்ன ஸ்வாமி விசாரம்?''

''ஒன்றுமில்லை—விசாரத்துக்குக் காரணம் ஒன்றா இரண்டா கூற.''

''விஜயராகவருடைய காலம் போய்விட்டதே என்ற ஒன்றே போதும், நமக்கெல்லாம் விசாரம் தர. மன்னன் என்றால் விஜயராகவனல்லவா மன்னன்! எவ்வளவு தான தருமங்கள்—எவ்வளவு பகவத் ப்ரீதி—எவ்வளவு பிராமண பக்தி—உம்! எல்லாம் பழங்கதையாகிவிட்டது.''

''ஸ்வாமி! அளகிரியின் சுபாவம் எப்படி?''

''அதையேதான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்—அதே சிந்தனைதான். பாண்டியநாடு, தமிழ் மரபில் விசேஷ அக்கரை இருக்கிறது.''

''வீரன்!''

''விவேகியுங்கூட! உம்! வேதியருடன் அளவளாவுவதிலே. நாயக்க மன்னர்கள்போல விசேஷ சிரத்தை தகாணோம்.''

''கொஞ்சமும் இல்லை என்று கூறும் வெங்கண்ணா!''

''வெற்றி கிடைத்தது வீரர்களால்—சரி—கிடைத்த வெற்றிக்கு ஒரு சந்தோஷக் கொண்டாட்டம் நடத்தி, பிராமணருக்கு ஒரு தான தருமம் செய்தானா? விசேஷ யாகாதிகள் உண்டா? கைங்கரியம் உண்டா?''

''செய்ய உத்தேசமிருக்கிறதா இல்லையா என்று நிச்சயமாகத் தெரியவில்லை.''

''இதென்ன அப்படிப் பேசுகிறீர்? செய்ய மனமிருந்தால், தடை என்ன செய்வதற்கு?''

''பணம் இல்லை! கிடைத்தால் செய்வானா என்பது பற்றியே சிந்திக்கிறேன்.''

''எங்கிருந்து இனிப் புதிதாகக் கிடைக்கப் போறது பணம்?''

''பணம் கிடைக்கும்! வழி இருக்கிறது! எனக்குத் தெரியும்! ஆனால் அவனுக்குத் தெரிவிப்பது நல்லதா...தெரிவிக்கலாமா...தெரிவித்தால் அவன்...சத்காரியங்களுக்குச் செல விடுவானா? அதுதான் தெரியவேண்டும்.''

அளகிரியோ, நாட்டைத் திருத்தத் திட்டங்கள் தீட்டுவான்; பணம் போதுமான அளவு இல்லை என்ற காரணத்தால், கைவிட்டுவிடுவான்; கவலைப்படுவான். வெங்கண்ணா மனதிலே உருவாகிக் கொண்டு வந்த திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கினான். மன்னன் அளகிரியிடம் சென்றான், மிக முக்கியமான விஷயம் பேச.

''அரசே! பொக்கிஷ நிலை சரியாக இல்லை என்று தாங்கள் கொலுமண்டபத்திலே கவலையுடன் பேசினது கேட்டேன்.''

''வெங்கண்ணா! நானோ பாண்டிய நாட்டில் இருக்க வேண்டியவன்—போர் மூலம் இப்பகுதியைப் பெற்றேன்—என் ஆட்சி, முன்பு இருந்த ஆட்சியைவிடப் பலமடங்கு அதிக வசதி யுள்ளதாக இருந்தாலுங்கூட, அன்னியராட்சிதானே என்று மக்கள் எண்ணுவர். நானோ, முன்பு இருந்த ஆட்சியின் சோபிதத்திலே பத்திலோர் பாகமும் செய்து தர முடியாத நிலையில் இருக்கிறேன்—போதுமான பணம் இல்லை.''

''பகவான் கடாட்சிப்பார் வேந்தே! மக்களிடம் அக்கரை கொண்டு, நல்லாட்சி நடத்த விரும்பும் தங்களுக்கு அஷ்ட ஐஸ்வரியமும் தர, ஆண்டவன் தயங்கமாட்டார்.''

''வேதியரே! ஆர்வமூட்டும் உமது பேச்சு கேட்டு அக மகிழ்கிறேன். ஆனால், பகவத் கடாட்சம் கிடைப்பது எப்போது? மக்கள் மனம் மகிழ நான் நல்லாட்சி நடத்துவது எப்போது? உடனடியாகப் பணமன்றோ தேவை.''

''சோழ நாட்டுச் சிறப்பு, பாண்டிய பரிபாலனத்தால் பல மடங்கு சிறப்புறும்''—

''கவிதை அது—நிலைமை வேறாக இருக்கிறதே.''

''கவிதை அல்ல காவலரே! நம்பிக்கை. ஏன், வரம் என்றுகூடக் கூறுவேன். மன்னவா! தங்கள் மனோபீஷ்டம் நிறைவேறும்படிச் செய்யும் சக்தி எனக்கு இருக்கிறது. தங்கள் காலடியிலே, தங்க மோகராக்களையும், நவரத்னக் குவியலையும் கொட்டுகிறேன் பாரும். இந்தப் பஞ்சைப் பிராமணன் ஏதோ ஏய்க்கிறான் என்று எண்ணாதீர். நான் உமக்குப் பெருநிதி கிடைக்கும் மார்க்கம் உரைக்கவே வந்தேன்.''

''பெருநிதியா? எங்கிருக்கிறது?''

''பெரும் புதையல்! தங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.''

''புதையலா? எங்கே? மறையவரே! மறைந்துள்ள மாநிதியை நான் பெறுவது எங்ஙனம்?''

''என்னப்பன், எம்பெருமான், அரங்கன் அருளால் பெரும் புதையல் உமக்குக் கிடைக்கும். வாரும்! அண்ணலைச் சென்று வணங்கி வரங்கேட்போம்!''

''திரு அரங்கத்துக்கா?''

''இல்லை. வேந்தன் விஜயராகவனுக்குத் திருவரங்கத்து அண்ணலிடம் அளவுகடந்த பக்தியல்லவா? அதனால், அண்ணல் அரங்கத்தில் சயனக் கோலத்தில் இருப்பது போன்றே, அரண்மனையில், தோட்டக் கோயில் அமைத்து அரங்கனைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்.''

''அங்கு சென்று?''

''சென்று, பெருஞ் செல்வம் பெறுவோம் வாரீர்—ஆனால் நாம் இருவர் மட்டுமே போகவேண்டும்.''

(இருவரும் தோட்டக் கோயில் சென்றனர்—அரங்கனைக் கண்டனர். வெங்கண்ணா அரங்கனை நோக்கி)

''அரங்கண்ணலே! அரசன் அளகிரி வந்திருக்கிறார். உம்மிடம் வரம் கேட்கிறார். அரசு நிலைக்க, செழிக்க, சிறக்க, பணம் வேண்டும். எல்லாச் செல்வத்திலும் மேலான செல்வமே! எமது அரசருக்குப் பெருநிதி அருள வேண்டுகிறேன். மன்னவா! அண்ணலின் அருளைப் பார்; இப்போது'' என்று கூறிவிட்டு அருகே சென்று அரங்கனைத் தூக்க, மூடி போல் எழும்புகிறது. உள்ளே பேழை. மன்னன் ஆச்சரியத்துடன் சென்று பார்க்க, பெரும் புதையல் இருக்கக் கண்டு மகிழ்கிறான்.

வெங்கண்ணாவைக் கட்டித் தழுவிக் கொள்கிறான். நவரத்னக் குவியலைப் பிடி பிடியாக எடுத்துப் பூரிக்கிறான்; தங்கக் கட்டிகளைத் தூக்கிப் பார்க்கிறான்.

விதவிதமான ஆபரணங்களைக்காண்கிறான். ''அற்புதம் அற்புதம்! அந்தணரே! அரங்கன் சயனித்திருந்தது, அந்த அஷ்ட ஐஸ்வரியத்தின்மீது!! தந்திரமான ஏற்பாடு! மறையவரே! தாங்கள் எப்படி இதனை அறிந்தீர்?''

''அரங்கன் அடியேனுடைய கனவில் தோன்றி இதனைக் கூறினார்.''

''மக்களுக்குக் கூறலாம் மறையவரே! எனக்கு உண்மையைக் கூறும். எப்படித் தெரிந்தது இந்தச் சூட்சமம்?''

''இந்தச் சூட்சமத்தை, என் அண்ணா, முன்பு ஓர் சிற்பி கூறக்கேட்டு என்னிடம் உரைத்தார்.''

''நன்றி, மாதவரே! என் மனமார்ந்த நன்றி. இனித் தஞ்சைத் தரணியில் சுகம் கொஞ்சிடச் செய்கிறேன். இடிந்த கோட்டைகளைச் செப்பனிடுவேன்—தூர்ந்த அகழிகளைத்

தோண்டிடச் செய்வேன்—கலைக்கும் இடமுண்டு—மக்களின் நிலை உயரச் செய்வேன்—மனதிலே உள்ள பல திட்டங்களையும் நிறைவேற்றுவேன். மாநிதி கிடைத்தது—மகிழ்ந்தேன்—மறையவரே, உமக்குப் பொன் வேண்டுமளவு தருகிறேன்.''

''தங்கள் தயை போதும் வேந்தே!''

''இல்லை, குடும்பத்துக்கு வேண்டுமானால், கூச்சம் வேண்டாம், கேளும்.''

''வேண்டாம் வேந்தே! எனக்கேன் செல்வம்? பெருநிதி தஞ்சை மன்னருக்கு உரியது!''

''என் நன்றிக்கு அறிகுறியாகத் தாங்கள் இந்த முத்தாரத்தைத்தடைகூறாமல் அணிந்துகொள்ளத்தான் வேண்டும். மறையவரே! இந்தப் பச்சைகள், தங்கள் செவிகளில், குண்டலமாக இருக்க அருள் புரிந்தாக வேண்டும்.''

''வேந்தே! தங்கள் கொடைத்திறனும் அன்பும் கண்டு நான் பிரம்மானந்தமடைகிறேன்.''

''என் களிப்பு அளவு கடந்தது வேதியரே! அண்ணலை மீண்டும் சயனிக்கச் செய்வோம்! பெருநிதி காத்து, எனக்குத் தந்தருளிய பெம்மானே! உன் பொன்னடி போற்றுகிறேன்''

கணக்கெழுதி வந்த வெங்கண்ணாவின் நிலை, ஒரே அடியாகத் திடீரென்று உயர்ந்தது. அரசன் அளகிரி, வெங்கண்ணாவுக்குப் புதியதோர் அந்தஸ்தைத் தந்தான். இதன் காரணம் புரியாமல், பலர் பலவாறு பேசிக் கொண்டனர்.

வெங்கண்ணரவைப் பார்த்துச் சிலர் பொறாமைப் பட்டனர்.

பிராமணோத்தமர்கள், வெங்கண்ணாவின் ஜாதகப் பலன் அப்படிப்பட்டது என்று பேசினர்.

வெங்கண்ணா, விவேகி. எனவேதான் வேந்தன் அவனை தன் ஆஸ்தானத்திலே ஆலோசகராக இருக்கச் செய்திருக்கிறார் என்று பேசினர் சிலர்.

தஞ்சை மக்களின் கவனத்தைத் தன் பக்கம் இழுக்கும் அளவுக்கு உயர்நிலை பெற்றான் வெங்கண்ணா—எனினும், அவன் மனம் திருப்தி பெறவில்லை—திட்டம் பூரணமாக வில்லை என்று விசாரப்பட்டான்.

அளகிரி, தஞ்சையை ஆண்டுவந்தான்—எனினும் மதுரைச் சொக்கநாதனே மேலரசன். எனவே அளகிரி, எதையும் அண்ணனைக் கேட்டே செய்து வருவான். அதுதானே முறை! ஆனால் வெங்கண்ணாவுக்கு இது பிடிக்கவில்லை.

அளகிரியை அண்ணனிடமிருந்து பிரித்துவிட வேண்டும்—தனியனானால்தான், அளகிரியைத் தன் இஷ்டப்படி ஆட்டிவைக்க முடியும் என்று எண்ணினான்—சூதுமதி கொழுந்துவிட்டெரிந்தது. கொற்றவனிடம் சென்றான்.

''பேராற்றல் படைத்த மன்னரே! பெருநிதியும் கிடைத்துவிட்டது. ஒரே ஒரு குறைதான்...''

''என்ன குறை?''

''பேராற்றலுள்ள தாங்கள், சிற்றரசாக, பாண்டிய மண்டலத்துக்கு இறை செலுத்தும் அரசாக இருப்பது சரியோ? தனி அரசு நடாத்தத் தகுதியும், திறனும், தீரமும் படைத்திருந்தும், சிற்றரசாக இருப்பது...''

''பாண்டிய நாட்டில் உள்ளவன் என் அண்ணன்தானே! அண்ணனிடம்தானே இறை செலுத்துகிறேன்.''

''சகோதர நேசம் சிலாக்கியமானது மன்னவா! ஆனால், சிற்றரசு பேரரசு என்ற தொடர்பு இருக்க வேண்டுமா, அதற்காக? ஏன் இருக்க வேண்டும். தம்பி தனி அரசு ஆள்வது தகாது என்று பாண்டிய மன்னர் எண்ணுவாரோ? தனி அரசுக்கு என்ன தடை இருக்கிறது.''

''தடை ஒன்றுமில்லை. அண்ணன் ஏதாவது தவறாக எண்ணிக் கொண்டால்...''

''அண்ணனின் மனம் என்ன எண்ணும் என்பதை மட்டுந் தானா கவனிக்க வேண்டும்! எதிலே குறைந்தவர் தாங்கள்? வீர தீரத்திலா—அறிவு, ஆற்றலிலா—எதிலே குறைந்தவர் மன்னவா!''

''நான் இதுநாள்வரை சிந்திக்கவே இல்லை வெங் கண்ணா! சிற்றரசு என்ற கவனம்கூட இல்லை.''

''ஓலை வந்ததே மன்னவா! இறைப்பணம் அனுப்ப ஏன் தாமதம் என்று! தம்பிதானே, சௌகரியப்பட்டபோது அனுப்பட்டும் என்றா இருந்துவிட்டார், மதுரை மன்னர்? அளகிரிதான் அவருக்குத் தம்பி—தஞ்சை அரசர், கப்பம் கட்டவேண்டிய நிலையிலுள்ள சிற்றரசர்—இதுதான் மதுரை மன்னரின் நினைப்பு.''

''அப்படித்தான் இருக்கிறது.''

''ஏன் அப்படி இருக்கவேண்டும் என்றுதான் கேட்கி றேன். ஏன் தனி அரசாகக் கூடாது, தஞ்சை? தனி அரசாக இருந்ததுதானே! தஞ்சை மக்கள் மனதிலே இந்தப் பெருங் குறை இருந்துவருகிறது—தஞ்சை, பாண்டிய மண்டலத் துக்கு உட்பட்ட சிற்றரசாகத்தான் இருக்க வேண்டுமா என்று கவலைப்படுகிறார்கள். மேலும், அண்ணன் இன்று ஆளுகிறார் பாண்டிய நாட்டில். நேசம், பாசம் இருக்கிறது. நாளை அண்ணன் மகன் ஆள்வானே—அந்தச் சிறுவனுக்கும் நீர் கப்பம் கட்டிக்கொண்டுதானே சிற்றரசனாக இருக்க வேண்டும். நியாயம் ஆகுமா அது?''

''இல்லைதான். ஆனால்...''

''ஆனால் என்ன? மன்னரே! தயக்கமின்றித் தஞ்சை தனி அரசு என்று பிரகடனம் செய்துவிடும். மாசு துடைக்கப் பட்ட மணியாகும் உமது கீர்த்தி. தமிழகத்திலே நீர் ஆட்சி செய்வது, சோழ வளநாடு! சோழநாட்டு வேந்தரான பிற கும், சிற்றரசாக இருப்பது, உமது ஆற்றலுக்கும் அழகல்ல, இந்நாட்டுக் கீர்த்திக்கும் பழிச் சொல்லாகும். வீண் கலக்கமே வேண்டாம்! தஞ்சைத் தனியரசென்று தெரிவித்துவிடுங்கள்.

சுதந்திர பேரிகைச் சத்தம் எழட்டும். முரசு கொட்டுக, தஞ்சைத் தனி அரசு என்று''

''ஆம்! வெங்கண்ணா! தஞ்சை, இனி தனி அரசுதான். பிரகடனம் தயாரிக்கிறேன்.''

அளகிரியின் அடாத செயல் மதுரை சொக்கநாதனுக்குக் கோபமூட்டிற்று. வெங்கண்ணாவோ, அளகிரிமீது சொக்கநாதன் படை எடுத்துவந்தாலும், சமாளிக்க முடியும் என்று தைரியம் கூறிவந்தான். தம்பி மீது மூண்ட கோபம் வெறுப்பாக மாறிவிட்டது—எனவே, சொக்கநாதன், ''அற்பன்! அவசரபுத்திக்காரன்! என் மனதைப் புண்ணாக்கி விட்டான். இனி அவனுக்கு யார் துணை? எக்கேடோ கெட்டுத் தொலையட்டும். யார் வார்த்தையையோ கேட்டுக்கொண்டு ஆடுகிறான்'' என்று எண்ணி, தொடர்புகளை அறுத்துக் கொண்டான். பெரிய ஆபத்து நீங்கிவிட்டது என்று பூரித்தான், அளகிரி. ''மதுரை மன்னன் மருண்டே போய்விட்டான், பார்த்தீர்களா மன்னவா!'' என்று உபசாரம் பேசினான், வெங்கண்ணா. கப்பலில் இருந்த நங்கூரம் எடுக்கப்பட்டு விட்டது—இனி, கடல் கொந்தளித்தால், கலம் ஆபத்திலே சிக்கிச் சீரழியும். இந்நிலையில், அளகிரி தான் சொல்லுகிறபடி எல்லாம் கேட்டுத் தீரத்தானே வேண்டும் என்று எண்ணினான் வெங்கண்ணா. அந்த வஞ்சகனின் மனக்கண்முன், தஞ்சை மன்னன் அளகிரி தனக்குத் தாசானுதாசனாக நின்று கொண்டு குற்றவேல் புரியும் காட்சி தெரிந்தது—புன்னகை, பெருஞ் சிரிப்பாக மாறிற்று. குரலிலே, ஒருவகை அதிகாரத்தொனி; நடவடிக்கைகளிலே, ஆணவம் படியலாயிற்று. மன்னனுக்கு யோசனைகள் கூறலானான்—விரைவிலே கட்டளைகள் பிறப்பிக்கலானான். தன் இனத்தாருக்கு, விஜயராகவன், காலத்திலே கிடைத்துவந்தது போலவே காணிக்கைகள், தானங்கள் கிடைத்தாக வேண்டும் என்று கூறலானான். ஆரிய தர்மப் பாதுகாப்புத்தான் அரசனின் முக்கியமான கடமை என்று வலியுறுத்தலானான். செல்வத்தைச் சனாதனக் காரியங்களுக்குச் செலவிடுவதே சரியானது என்று சட்டம் பேசலானான். தயக்கமடைந்த மன்னனைக் கண்டிக்கலானான்.

அளகிரி ஆத்திரத்தைச் சின்னாட்கள் அடக்கிக் கொண்டான்; வெங்கண்ணாவின் ஆணவமோ வளரலாயிற்று.

அளகிரி, வெங்கண்ணாவின் போக்கைக் கண்டிக்கலானான்—ஆட்சி உரிமை தனக்கு என்பதை நினைவூட்டினான்—ஆற்றல் உண்டு என்பதை வலியுறுத்தினான்.

வெங்கண்ணாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. இனி, அளகிரி, தன் இஷ்டப்படி ஆடமாட்டான். பொன் கொடுப்பான் பட்டாடை நிறையக் கொடுப்பான், விருந்தளிப்பான், உபசரிப்பான், ஆனால் ஆட்சிமுறையை மாற்ற இசையான்—ஆரியதாசனாக மாட்டான் என்பது விளங்கிவிட்டது. கோபம் கொப்பளித்தது. இதற்கா, நான் இவனுக்குப் புதையலை எடுத்துத் தந்தேன். என் வார்த்தையை வேதமாகக் கொள்வான். என் சுட்டுவிரல் காட்டும் வழி செல்வான் என்றல்லவா, எண்ணிக் கொண்டிருந்தேன். எதிர்த்துப் பேசுகிறான்—துச்சமாகக் கருதுகிறான்—இனி இவனால் ஆபத்தே கூட ஏற்படக்கூடும். எனவே இவனை ஒழித்தாக வேண்டும் என்று தீர்மானித்தான். நச்சு நினைப்பு ஓங்கி வளர்ந்தது! சதித் திட்டம் உருவாயிற்று. அளகிரியும் வெங்கண்ணாவுக்கு கட்டுப்படுவதில்லை என்ற திட்டமான முடிவுக்கு வந்துவிட்டான். அப்போது:

''மன்னவரே! கடைசி முறையாக உம்மைக் காண வந்திருக்கிறேன்.''

''கடைசி முறையா? காலதேவனின் அழைப்பை பெற்றுவிட்டீரா என்ன?''

''மன்னர் கேலி பேசுகிறார்! காலதேவனின் அழைப்பல்ல; புரட்சி பேசுகிறது என்று அறிவிக்கிறேன்.''

''ஏ! வெங்கண்ணா! உன் உருட்டல் மிரட்டல் வேலைகளை என்னிடம் காட்டாதே. ஏது, அளவுக்கு மீறி ஆர்ப்பரிக்கிறாய். இந்தத் தேசத்தின் மன்னன் முன்பு பேசுகிறோம் என்ற எண்ணம் துளியும் இன்றி, ஆர்ப்பரிக்கிறாய்—விளைவு தெரியாமல்!''

''முன்பு நான் ஆட்சியின் இலட்சணம் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்று மட்டுமே கூறினேன்.''

''கூறினாயே! கொட்டிக் கொடு, திரவியத்தை எல்லாம் ஆரியக் கும்பலுக்கு என்று! விஜயராகவன் கொட்டிக் கொடுத்து என்ன பலன் கண்டான்?'' என்று கேட்டேன்.

''இப்பொழுது நான் வந்திருப்பது, ஆரியரை ஆதரிக்கும்படி உம்மைக் கெஞ்சுவதற்காக அல்ல.''

''வேறு என்ன காரியமோ! வேதத்தின் உட்பொருளை விளக்கவோ?''

''அரச பீடத்தில் அமர்ந்திருப்போனே!''

(கன்னத்தில் அறைந்து) ''ஆணவக்காரா! யாரிடம் மரியாதைக் குறைவாகப் பேசுகிறாய்...'' (கை தட்டுகிறான்; காவற்காரர்கள் வருகிறார்கள்) இந்த வாய்க் கொழுப்புப் பிடித்தவனைச் சிறையில் தள்ளுங்கள்'' என்று சீறுகிறான் அளகிரி—வெங்கண்ணா தலை தப்புமா என்று திகில் கொள்ளவில்லை; திமிருடனேயே நிற்கிறான். ஏன்? உயிரைத் துரும்பென மதிக்கும் உள்ளத்தானா! இல்லை, இல்லை! அளகிரியை ஒழிக்கச் சதித்திட்டம் தீட்டிவிட்டோம், எப்படியும் நிறைவேற்றிவிடுவோம் என்ற தைரியம். மேலும் பிராமணனான தன்னைக் கொன்றால் பிரம்மஹத்தி பிடித்துக் கொள்ளும் என்ற பயம் அளகிரிக்கு இருக்கும். எனவே கொல்ல மாட்டான் என்ற தைரியம். மன்னனுடைய கோபம் சிறிது, தணிந்தது. ''மண்டைக்கர்வம் பிடித்தாட்டுகிறதுஇந்தமறையவனுக்கு! எனினும் இவன் என் மண்டலத்துக்குப் பயனளிக்கும் பெருநிதி எனக்குக் கிடைக்கச் செய்தவன்—எனவே சிறையில் போட்டு வாட்ட வேண்டாம்—இவன் இனி என் அரண்மனைக்குள் நுழையக் கூடாது—வெளியே துரத்துங்கள்''—என்று கூறினான். வெங்கண்ணா வெளியேறினான். ''அளகிரி! என்னை யார் என்று அறியாமல் உன் அதிகாரத்தைக் காட்டத் துணிந்தாய். நீ அரசன்—அவ்வளவுதான்! நான் ஆரியன்—அதன் முழுப்பொருளை நீ அறியாய்.

அரசர்களை உண்டாக்க முடியும், அழகிரி! ஆரியன், பிறக்க மட்டுமே முடியும். வெங்கண்ணா ஓர் வேதியன்—பேரர்வீரனா என்று எண்ணி அல்லவா, என் பேச்சைக் கேட்க மறுத்தாய்—மூடனே! நீ அறியாய் வெங்கண்ணா எந்தப் பரம்பரையைச் சேர்ந்தவன் என்பதை.

''நீ அதனை அறியும்படியாகச் செய்கிறேன்.''

''அளகிரி! அந்தணர்களை ஆதரி!''

''ஏன் அந்தணரை மட்டும் குறிப்பிடுகிறீர்! மற்றவர் மக்களல்லவோ?''

''எவ்வளவு மமதையோடு பேசினாய்—என்னை மதிக்க மறுத்தாய்—நீ மண்டலாதிபதி! இருந்தால் என்ன? இனி மண்டலத்துக்கு வேறு அதிபதியைத் தேடுகிறேன், பார். வெங்கண்ணா வீரனல்ல...வேதியன்...தசரதனல்ல; வசிஷ்டன்—அரசனல்ல...ஆரியன்—பார் அவன் ஆற்றலை.

உனக்கு நான், புதைந்து கிடந்த பொக்கிஷத்தைத் தேடி எடுத்துக் கொடுத்தேன்—எதற்கு?

என் குலத்தவருக்குச் செலவிட மனம் இல்லை உனக்கு. ஆரிய சேவை செய்ய மறுக்கும் இந்த அளகிரியை அழித் தொழித்தாக வேண்டும்.''

என்று எண்ணியபடி அரண்மனையை விட்டுக் கிளம்பினான். மூளை வேகமாக வேலை செய்யத் தொடங்கிற்று—துஷ்ட மிருகங்களுக்குக் கண்கள் இரவிலேதான் ஒளி பெறுமாம்—அதுபோல வஞ்சகத் திட்டம் வகுக்கும்போதுதான் வெங்கண்ணாவின் புத்தி மிகக் கூரிமையாக வேலை செய்யலாயிற்று. இனி நாம் நமது கற்பனைக் காளையும் கலைக் கன்னியும், என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்.

**செ**ங்கமலத்தை அரசனாக்க வேண்டும் என்றல்லவா அவர்கள் ஆதரவு திரட்டி வருகிறார்கள். அவர்கள் திட்டம் ஏதும் கொண்டில்லை. தஞ்சைத் தரணியை ஆளும் உரிமை கொண்ட செங்கமலம், எங்கோ ஓரிடத்தில் இருக்கிறான்!

அவனை அரசனாக்குவது, நாட்டுப் பற்று கொண்டோ ருடைய கடமை என்பதை எடுத்துக் கூறி, மெள்ள மெள்ள ஆதரவு திரட்டிக் கொண்டிருந்தனர். அவர்கள் அளகிரியிடம் விரோதம் கொண்ட வெங்கண்ணாவின் உதவி கிடைக்கும் என்று ஆவல் கொள்வது இயற்கைதானே! வஞ்சக வெங் கண்ணாவுக்கும் உரிமைக்காக உயிர் கொடுக்கவும் துணிவுடன் பணியாற்றி வந்தவர்களுக்கும் தொடர்பு ஏற்படாமலிருக்க முடியுமா? செங்கமலம் எனும் அரச குமாரன், நாகப்பட்டி னம் செட்டியார் மாளிகையில் இருக்கும் 'செய்தி' கிடைத்த தும் கூர்மையான கருவி கிடைத்ததாக எண்ணிக் களித்தான் வெங்கண்ணா. அளகிரியை அழிக்க அபூர்வமான கருவி கிடைத்துவிட்டது என்று எக்காளமிட்டான். திட்டம் மேலும் உருவெடுத்தது. கூறுவானா யாரிடமாவது? ஏமா ளியா, கூற!! திட்டத்தின்படி காரியத்தைச் செய்யக் கிளம்பி னான். எங்கு? நாகைக்கா! ப்பூ! அங்கு இலட்சியவாதிகள் செல்லுவர்; இவனோ காரியவாதி. இவன் சென்ற இடம், பீஜப்பூர்.

பீஜப்பூரில், சுல்தான் ஆண்டு வந்தான். அங்கு மராட்டிய மாவீரன் சிவாஜியுடைய தம்பி, வெங்காஜி பெரும் பதவியில் வீற்றிருந்தான். படை பலம் கொண்ட வெங்காஜியிடம், வஞ்சகத்தை ஆயுதமாகக் கொண்ட வெங்கண்ணா சென் றான்!

வெங்காஜி, நிலைமையை அறிந்து கொண்டான். வீர வெற்றிகள் பெறலாம் என்ற எண்ணம், தூண்டிற்று. மாவீ ரன் சிவாஜி போலவேதான் அவன் இளவலும் ரணகள சூரன் எனப் 'பாரத்வர்ஷம்' புகழும் என்று எண்ணினான். அளகிரிக் குத் துணைபுரிய மதுரை சொக்கநாதன் வரமாட்டானென்ற செய்தி, வெங்காஜிக்கு மேலும் தைரியமூட்டிற்று. கிளம்பின படைகள்! வெங்கண்ணா, ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, தஞ்சை சென்றான்.

மாற்றானுக்கு இடங்கொடேல் என்ற முதுமொழிக்கும் மனு வழி பிறந்தவரின் திட்டத்துக்கும், முரணாக இருக்கி றதே—இதனை எங்ஙனம் பிறர் ஒப்புவர் என்று கேட்கத்

தோன்றும் எவருக்கும். இலட்சியத்தை முன்வைத்து, அளகிரி ஆண்டு வந்த தஞ்சையை, உரிமை பெற்ற செங்கமலத்துக்கு பெற்றுத் தருவதைக் கடமை என்று கருதினர் அவர்கள். வெங்கண்ணா வேற்று நாட்டவனைக் கூட்டிக் கொண்டு வந்து நாட்டைக் காட்டிக் கொடுக்கத் துணிந்து விட்டதை அவர்கள் என்ன கண்டார்கள்? அவர்களுடைய நோக்க மும் நேர்த்தியானது; முறையும் சிலாக்கியமானதாக இருக்க வேண்டும் என்று விரும்பினர். சுயநல நோக்கம் கொண்ட வெங்கண்ணா சூழ்ச்சித் திட்டத்தைத்தானே முறையாகக் கொள்வான். யார் தடுத்தாலும் கேட்கவா செய்வான்? தடை செய்பவர்களைத் தகர்த்திடத் துணிவான். செங் கமலத்துக்காக அவர்கள் கிளம்பினர்! வெங்கண்ணாவோ, அளகிரியை அழிக்கக் கிளம்பினான்—மற்றவர்கள் அவனுக்கு வெறும் கருவிகள்.

''வெங்கண்ணா! என்ன? போன காரியம் முடிந்ததா? நமது கனவு நனவாகுமா?''

''வெற்றியை வெங்கண்ணா அழைக்கும்போது, யாரால் அதனைத் தடுக்க முடியும்? அளகிரி, அரசு சாஸ்வதம் என்று எண்ணிக்கொண்டு என்னை உதாசீனம் செய்தான்—அலட் சியப்படுத்தினான்—அவமானப்படுத்தினான்...''

''ஆரிய! சுயசரிதத்தைப் பிறகு கூறுமே! என்ன ஏற்பாடு செய்தீர், செங்கமலத்தை மன்னராக்குவதற்கு? அதைச் சொல்லும் முதலில்.''

''அளகிரியைத் துரத்திக் கொண்டு அழிவு வரப்போகி றது—அரசு அவனிடமிருந்து பறிக்கப்பட்டு—நமது செங்கம லத்திடம் தரப்படும்—நீதான் ஆஸ்தான கலாவாணி— உனக்கு உயரிய அந்தஸ்து - நமது நற்காலம் ஆரம்பமாகிறது. ஆயாசமடையாதீர்—நாம் பட்ட கஷ்டம் வீண்போகவில்லை சசிலேகா! என்னைச் சாமான்யனென்று எண்ணினான் அந் தத் துஷ்டன். வேதிய வெங்கண்ணா வேழப்படை கொண்டு வருவானா, வேற்படைக்காரனா, வேதமோதிதானே என்று எண்ணி இறுமாப்புடன் என்னை எதிர்த்துப் பேசினான்.

பார், லேகா! இன்னும் சில நாட்களிலே—அடுத்த வெள்ளி யன்று—அளகிரியை அழிக்கவரும் பிரம்மாண்டமான படை கிளப்பப் போகும் தூளி, அளகிரி வாழும் அரண்மனையைச் சூழ்ந்து கொள்ளப் போகிறது. பாண்டிய மன்னனின் தம்பி, போரிலே புலி! வருகிறார்கள், இந்தப் புலியைக் கொல்ல, வேட்டைக்காரர்கள்.''

''படையா? எவ்விடமிருந்து? யார் அழைத்து வருகி றார்கள்? தஞ்சைப் பகுதியின் கோடி பாகங்களிலே இருந்து படைதிரட்டினீரா?''

''படையைத் திரட்ட வேண்டுமா? திரட்டப்பட்டுத் தயாராக இருப்பதும், திக்கெட்டும் வெற்றிக்கொடி நாட்டி வருவதுமான, ஒரு வல்லரசின் படையை அல்லவா, அள கிரியைத் தொலைக்க வரச்செய்திருக்கிறேன். நாட்டிலே அளகிரி ஒருவன்தானா மன்னன். இவன் ஒருவனிடம் மட்டும் தானா படை இருக்கிறது?''

''வெங்கண்ணா! விளக்கமாகக் கூறுங்கள்—எந்தப் படை? நான் விடுதலைப் படையை தஞ்சைத் தரணியிலுள்ள சுந்தர வீரர்களைக் கொண்டே அமைக்க வேண்டுமென் றேனே! நீர் கூறும் படை எவ்விடத்தது?''

''விடுதலைப் படைதான் இதுவும்! ஆணவ அளகிரி யிடமிருந்து தஞ்சையை விடுவிக்கப் போகும் படை—வீரப்படை—வெற்றிப் படை—இந்த வேதியின் சுட்டுவிரல் காட்டும் திக்கைச் சுடுகாடு ஆக்கும் சக்தி வாய்ந்த சண்ட மாருதப் படை—டில்லி பாதுஷாவையும் எதிர்க்கக்கூடிய படை—சசிலேகா! பராக்கிரம மிகுந்த பீஜபூர் சுல்தானின் படை வரப்போகிறது, நமக்கு உதவி புரிய.''

''என்ன, என்ன! வெங்கண்ணா! பீஜபூர் படையா? சுல்தானின் சேனையா?''

''ஆமாம்! வெங்கண்ணாவைச் சாமான்யமென்றானே அளகிரி.''

''ஆஹா! வெங்கண்ணா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? நாசத்தைக் கூட்டிக்கொண்டு வருகிறாயே. நமது நாட்டிலே நியாயம் பெறுவதற்கு! நாம் போராடலாம், புரட்சி நடத்தலாம், சதிகூடச் செய்யலாம். நாட்டுப் பற்றுக் கொண்ட வீரர்களை எல்லாம் திரட்டலாம்—நியாயம். ஆனால் இதற்காக அன்னிய நாட்டானையா அழைத்து வருகிறீர்—தேசத்தை நாசமாக்கும் காரியமாகுமே அது. தஞ்சைமீது பீஜபூர் படைகள் பாய்ந்தால், பிறகு சர்வநாசம் ஏற்படுமே. அளகிரி மட்டுமா, அழகு தஞ்சையே அழிந்து விடுமே. அன்னிய ஆட்சி ஏற்பட்டுவிடக்கூடுமே.''

''வீண் பீதி! பீஜபூர் படை நமக்குச் செய்யும் உதவிக் காகக் கொஞ்சம் பணம்தர ஒப்புக் கொண்டேன். அவ்வளவு தான். ஆட்சி நமது இஷ்டப்படி செங்கமலத்துக்குத்தான். அதிலே சந்தேகம் வேண்டாம். நான் ஏமாளியல்ல.''

''நீ ஒரு எத்தன்!''

''நாவை அடக்கிப் பேசடா, நல்லறிவற்ற நாயே''

''ஆஹா! அடே, வஞ்சகா! தேசத்துரோகி! என்னையா கேவலப்படுத்தத் துணிந்தாய்.''

(வீரன் வாளை வீசி மார்புக்குக் குறி பார்க்கிறான்—சசி இடையே நின்று கொண்டு)

''வாளை என் மீது வீசு முதலில். வெட்கமில்லையா உங்கட்கு. பொது விரோதியை ஒழிக்க வேண்டிய சமயமிது. இந்தச் சமயத்திலே போர் முறை பற்றிய விவாதத்தில் ஒரு வரை ஒருவர் தாக்கிக் கொள்வதா: வெகு அழகு.''

''சசி! உன் மதி கண்டு மகிழ்கிறேன். இவன் கருத்தறி யாக் காளை. கண்டபடி பேசுகிறான். கடுங்கோபம் எழச் செய்கிறான். அளகிரியின் படையை, இவனுடைய வாள் வென்றுவிடுமா! துள்ளுகிறான் வீரன்! அளகிரியின் படையை எதிர்க்க, அதைவிடப் பெரியதும், வலிவுள்ளதுமான படையைக் கூட்டி வருவதுதானே யுத்தம்?''

''அதுதான் இல்லை என்கிறேன். வருகிற படை, அளகிரியையும் விரட்டிவிட்டு, தஞ்சையையும் ஆக்கிரமித்துக்கொண்டால்...?''

''வீண் சந்தேகம்...!''

''சந்தேகம் வீண், விபரீதம் என்று எது வேண்டுமானாலும் சொல்லு. ஆனால் அப்படி ஒரு நிலை ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது?''

''நேரிடாது.''

''என்ன உறுதியின் மீது அதனைக் கூறுகிறீர்!''

''என் அறிவு எனக்குக் கூறுகிறது.''

''அறிவு! அன்னியனிடம் அடைக்கலம் புகுந்து, நம் நாட்டு அரச விவகாரத்தைத் தீர்த்துக் கொள்வது நியாயமல்ல. கேடு நிச்சயம் நாட்டுக்குத்தான்.''

''பீஜபூர் படையை வரவழைப்பது தவறு என்று பேசுகிறாயே; நியாயம், சரி, அளகிரியின் படையை எதிர்த்து நாம் மூவர் என்ன செய்ய முடியும்.''

''நாம் மூவர், கருத்துடன் சிறிது பொறுமையுடன் வேலை செய்து வந்தால், அளகிர்யின் படைவரிசையிலேயே பிளவு உண்டாக்க முடியும். தஞ்சையில் வீரர்கள் கிடைக்காமற் போகமாட்டார்கள். படையில் மட்டுந்தான் போர்வீரர்கள் உள்ளனர் என்று எண்ணாதீர். பொதுமக்களுக்குச் சமயம் நேரிட்டால், படைகளையும் எதிர்த்துப் போரிட முடியும்—தெரியும்—நாம் உள்நாட்டிலேயே ஓர் உத்தமப் படையை நிறுவ முடியும்—அதன் மூலம் வெற்றி பெற முடியும்—வெளி நாட்டான் உதவி இன்றி. நீர் செய்திருக்கும் ஏற்பாடு, கடைசியில் தஞ்சையை அன்னியனுக்குக் காட்டிக் கொடுப்பதாகவே முடியும்.''

''நான் உன்னிடம் வாதிடப் போவதில்லை. என் ஏற்பாடு முடிவானது. தீர்மானம் மாற்ற முடியாதது. பீஜபூர் படைகள் தஞ்சைத் திசையை நோக்கிப் புறப்பட்டு விட்டன'

''பெரிய பாதகம் புரிகிறாய்!''

''எது எப்படி ஆவதானாலும் எனக்கு அக்கரை இல்லை. என்னை அரச அவையிலே, ஆணவத்துடன் அவமதித்த அந்த அளகிரி அழிய வேண்டும்—அவனுடைய கொற்றம் கவிழ வேண்டும்—என்னை விரோதித்ததன் பலன் என்ன என்பதை அந்த அவிவேகி உணர வேண்டும்—அளகிரி—இரு, வருகிறதுபடை; வேதிய வெங்கண்ணாவின் வீரப்படை.''

''சசி! கேட்டாயா கெடுமதியாளன் பேச்சை! வருகிறதாம் படை—எதற்கு? செங்கமலத்தை மன்னராக்குவதுகூட இரண்டாந்தரமான வேலை—முதல் வேலை, முக்கியமான வேலை—இந்த மகானுபாவரின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவது. எவ்வளவு சுயநலம் பார்த்தாயா! அளகிரி மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வதிலேதான் இந்த ஆரியனுக்கு அக்கரையே யொழிய, தஞ்சையைச் செங்கமலத்திடம் தருவது அல்ல இவன் குறிக்கோள். செங்கமலம், நான், நீ யாவரும் இவனுக்குக் கருவிகள்—துரோகி! இவனை நான் துளியும் நம்ப முடியாது.''

''வீராதி வீரனே! இப்படி என்னைக் கைவிடலாமா? உன்னை மலைபோல நம்பித்தானே இந்தக் காரியத்தில் இறங்கினேன்...எப்படி? போதுமா, இன்னமும் கொஞ்சம் பணிய வேண்டுமா, உன்னிடம்? முட்டாள்! உன் உதவியை எதிர்பார்த்தா நான் இந்த விவகாரத்தில் இறங்கினேன். எவ்வளவு பெரிய படை எனக்கு ஏவல்புரியக் கிளம்பி இருக்கிறது. வீர வெங்காஜியின் தலைமையில்! வெங்காஜி யார் தெரியுமோ? சிவாஜியின் தம்பி! சிவாஜி யார் தெரியுமோ? காகுபட்டரின் சிஷ்யன்! காகுபட்டர் யார் தெரியுமோ? என் குலம்—என் இனம்—ஆரியன்! அறிவற்றவனே! உன்னுடைய அட்டகாசத்தை இனி அனுமதிக்கப் போவதில்லை! (கை தட்ட, நாலு பேர் ஓடி வருகிறார்கள்) உம்! முதல் கைதி!''

(கத்தியை வீசுகிறான்—நால்வர் பாய்கின்றனர். சசியின் கரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு போகிறான் வெங்கண்ணா. வீரன் கைது. கைகால் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்படுகிறது.)

''ஆரம்பமே இப்படியா? வெங்கண்ணா! அவரை விடு விக்கச் சொல்!''

''உன் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளமுடியாமைக்கு வருந்துகிறேன். பீஜபூர் படையினால்தான் அளகிரியைத் தோற்கடித்துச் செங்கமலத்துக்கு அரசு தர முடியும். அதனை உணராது ஆர்ப்பரிக்கும் இந்தக் காளையை அந்தப் படை இங்கு வரும்போது வெளியே விட்டுவைப்பது, ஆபத்தாக முடியும். ஆகவே நிலைமையிலே உள்ள கொந்தளிப்பு தீரும் வரையில்...''

''சிறையிடத் தீர்மானமா?''

''சிறையல்ல, சேல்விழியே! சீற்றம் கொள்ளாதே! என் பாதுகாப்பில் வைத்திருக்க உத்தேசம். அவனை மட்டு மல்ல, உன்னையும்தான்—'' கை தட்டுகிறான். பணியாட் கள் வருகிறார்கள். அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கிறான். ''உம்! இரண்டாம் கைதி!—இந்த லாவண்யவதியை அழைத்துச் செல்லுங்கள்.''

**மு**றையல்ல, நெறியல்ல என்று கூறுவதற்கு எவர் முன் வந்தாலும், இதுதானே நடந்திருக்கும். வெங்கண்ணாவின் வெறி வேறு—இலட்சியவாதிகளின் ஆர்வம் முற்றிலும் வேறா னது. நான் காட்டிய கற்பனை வீரன் போன்றாரும் கலை மங்கை போன்றாரும், கபடனாம் வெங்கண்ணாவின் பாதை யிலே குறுக்கிட்டால், வெஞ்சிறைதானே கிடைக்கும்! மரண மும் கிடைக்கும். இலட்சியத்துக்காக உழைக்க முன்வந்த கற்பனை வீரனும் கலை மங்கையும், சிறையில் இருக்கட்டும். அளகிரியைக் காண்போம். மராட்டிய வீரன் வெங்காஜீ அழைத்துவந்த சுல்தானின் படைகளை, எதிர்த்து நிற்கும் ஆற்றல் அளகிரிக்கு இல்லை. துளியும் எதிர்பாராத நேரத் தில், கொஞ்சமும் எதிர்பாராத இடத்திலிருந்து பலமான தாக்குதல் கிளம்பவே, அளகிரி திகைத்துப் போனான். வெளிநாட்டிலிருந்து படைகளைக் கூட்டிவரும் அளவுக்கு வஞ்சகனான வெங்கண்ணா, தஞ்சைத் தரணியிலே உள் நாட்டுத் துரோகிகளைத் திரட்டிடாமலா இருந்திருப்பான்?

அளகிரியினால், அழிவைத் தடுக்க முடியவில்லை. மதுரை சொக்கநாதனோ, தம்பி அளகிரியின் புத்திக்குத் தக்க பாடம் கிடைக்கட்டும் என்று இருந்துவிட்டான். பீஜபூர் படைகளை ஒழிக்க, அளகிரிக்குத் துணையாக வரவில்லை. தனி அரசல்லவா, தனி அரசு! எவ்வளவு நெஞ்சழுத்தம், அளகிரிக்கு! படட்டும், படட்டும்—எக்கேடோ கெடட்டும்; கெடட்டும் என்று இருந்துவிட்டான். அளகிரி தோற்றான்—படைகள்—சின்னாபின்னமாயின—வெங்காஜி வெற்றிமுரசு கொட்டினான்—வெங்கண்ணா வெற்றி வெறியனானான். அளகிரி நாட்டைவிட்டு ஓடி ஒளியலானான்! வெங்காஜியின் படை துரத்திச் சென்றது. கடைசியில் அளகிரி அரியலூர் காட்டிலே சென்று ஒளிந்து கொண்டான். தன் நிலைமையை எண்ணி எண்ணிக் கதறினான்—மனம் குழம்பி விட்டது—பித்தம் பிடித்தலைந்தான். வேந்தன் பித்தனானான். வேதியன் வெற்றி வீரனாகத் தஞ்சையில் உலவி வந்தான்!!

''அந்தோ, அழிந்தேன்! மூடன், கபடனுக்கு இரையானேன்! வஞ்சக வெங்கண்ணாவின் சதியால் வீழ்ந்தேன்.

அரசுகளை ஆட்டிப்படைக்கும் ஆரியனே! உன்னை நான், அரச அவையிலே வீற்றிருக்க அனுமதித்தேன்—உன்னுடைய மோசமான கருத்தை உணரவில்லை.

அரசு நம்மிடம்! படை பலம் நம்மிடம்! இவனிடம் என்ன இருக்கிறது!

போரில் நாம் புலி! இவனுக்குப் போர்த்தொழில் என்ன தெரியும் என்று எண்ணி ஏமாந்தேன்.

வாள் என்னிடம்; வஞ்சகம் அவனிடம்! படை என்னிடம்; கபடம் அவனிடம்! அந்தோ! நான் வீழ்ந்தேன்—விரட்டப்பட்டேன். என் பரம்பரைக்கே பழி தேடிக் கொடுத்தேன்! முத்தமிழ் முழங்கும் தமிழகத்தை, மராட்டியப் படையிடம் ஒப்படைத்து விட்ட பெரும்பாவியானேன்! எல்லாம் அந்த வஞ்சகனால்!

அவனுடைய பேராசைக்கு இடமளிக்க மறுத்தேன்—அவன் என்னை அரச பீடத்திலே ஓர் பதுமையாக இருக்க அல்லவா ஏற்பாடு செய்தான்—அளகிரி—எப்படி அதற்குச் சம்மதிக்க முடியும்? வீரக்குலத்தில் உதித்து, எப்படிப் பஞ்சாங்கக்காரனிடம் பணிய முடியும்?

பாவி! படுமோசம் செய்தானே! பீஜபூரானை ஏவினான்—நாட்டுக்குத் துரோகமல்லவா என்று எண்ணினானா—மக்களுக்குக் கஷ்டமல்லவா என்று நினைத்தானா—நண்பனுக்குத் துரோகமாயிற்றே என்று நினைத்தானா!

இரத்தத்தைக் குடித்தலையும் புலியே, நீ அவ்வளவு துரோகம் செய்யமாட்டாய்!

நயவஞ்சகத்தைக் கற்றுக் கொள்ள, நாட்டுக்கு ஓடு, நரியே! அங்கே உனக்கு நல்ல ஆசான் கிடைப்பான், வஞ்சக வெங்கண்ணா!

புல்லிலே படுத்திருந்து, நடப்பவரைக் கடிக்கும் பாம்பே! உனக்கு இல்லை அவ்வளவு விஷம்! நீ ஆளை மட்டுமே கொல்வாய்—அவன் அரசைக் கொன்றான்!

அந்த வஞ்சகனுடைய பேச்சைக் கேட்டு, என் அண்ணனுக்குத் துரோகம் இழைத்தேன். தன் வீரதீர பராக்கிரமத்தால், தஞ்சையை வென்று, தம்பிக்குத் தரணி ஆளும் தகுதி கிடைக்கட்டும் என்று அன்புடன் என்னைத் தஞ்சைப் பதிக்கு அரசனாக்கினான்—என் அண்ணன்.

நான் நன்றி கெட்டவன்! துரோகி! என் அண்ணனையே எதிர்க்கத் துணிந்தேன். தஞ்சை தனி அரசு! என்றல்லவா பிரகடனம் செய்தேன். எவ்வளவு ஆணவம் எனக்கு? அண்ணன் என்ன எண்ணுவான்? துரோகமல்லவா என்று நினைத்தேனா! இல்லை; வெறி! வஞ்சகன் ஊட்டிய வெறி என்னைப் பிடித்து ஆட்டிற்று! மதுரை மண்டலத்துக்குத் தஞ்சை சிற்றரசு அல்ல என்றேன்—தனி அரசு என்றேன்—தனி அரசு! தனி அரசா? 'சனி' அரசு கண்டேன்! இதோ, காட்டு அரசனானேன்.

பீஜபூர் படை வந்திருக்குமா, தஞ்சையும் மதுரையும் ஒரு சக்தியின் இருகூறுகள் என்ற நிலை இருந்திருப்பின். வந்திருப்பினும், பாண்டிய நாட்டுப் படைகள் பாய்ந்து வந்து மராட்டியரைத் தாக்கி, என் மானத்தைக் காத்திருக்குமே!

துரோகி நான்! என் அண்ணனுக்கே கேடு செய்தேன்—நாடு இழந்தேன்—காடு சுற்றுகிறேன்—காட்டிலே துஷ்ட மிருகங்களாவது என்னைக் கொன்று போடக் கூடாதா? எல்லாம் மிரண்டு ஓடுகின்றனவே!

அளகிரிக்கு, அரியலூர் காடுதான் அரண்மனை...அளகிரி!

படுமனமே, படு! பார்ப்பனன் பேச்சைக் கேட்டாய்! படு, மனமே படு!

அளகிரி! அலைந்து திரி, அரியலூர்க் காட்டிலே! ஆரியன் உன் நாட்டிலே-அரண்மனையிலே உலவுகிறான். நீ காட்டிலே அலைந்து கொண்டிரு.

வேண்டும் எனக்கு. இதுவும் வேண்டும், இதற்கு மேலும் வேண்டும்—வஞ்சக வெங்கண்ணாவின் கொஞ்சு மொழியை நம்பிய எனக்கு இது போதாது—அரியலூர்க்காடு!

அண்ணா! சொக்கநாத பூபதி! இதோ, புது ராஜ்யம்! அரியலூர்க்காடு! நான்தான் இங்கே ராஜா! என் பிரஜைகள், ஓநாய், நரி, பாம்பு, புலி, கீரி, காடை, கழுகு...ஏராளம்! ஏராளம்!

அரியலூர் அரசன் அளகிரி வருகிறார், பராக்! பராக்!''

பித்தம் பிடித்த அளகிரி பிதற்றினான்; கதறினான்; அரியலூர்க் காட்டிலே அலைந்து அலைந்து, மாண்டு போனான். மணிமுடிதரித்து, படை பல திரட்டி வாழ்ந்து வந்தான். வஞ்சக வெங்கண்ணாவால் வீழ்த்தப்பட்டான்; வேதிய வெங்கண்ணாவின் மமதை மலையென வளரத்தானே செய்யும்? மராட்டிய வீரனுக்குச் சன்மானங்கள் வழங்கினான்; பீஜபூர் படைகளுக்குப் பரிசுகள் வழங்கினான். கேவலம்

'ராயசம்' வேலை பார்த்து வந்தான்—கணக்கெழுதும் வேலை—அவன், 'ராஜாங்கப் பொக்கிஷத்தைத் திறந்து, சிவாஜியின் தம்பிக்கு வெகுமதிகள் அளிக்கிறான்!

வாள் ஏந்தி அறியான்! களத்திலே கிளம்பும் ஒலி கேட்டாலே உயிர் போகும் விதமான மனத்தினன்—அவன, தஞ்சைத் தரணியிலே தன்னிகரில்லா வெற்றி வீரனாக விளங்குகிறான்.

செங்கமலம் அரசனானான்—வெங்கண்ணாவின் திறமே இதற்குக் காரணம் என்று வியந்தனர் சிலர்—அவனுடைய ஆற்றலைக் கண்டு பயந்தனர் பலர். பீஜபூர் படை பெற வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொண்டு, திரும்பிச் சென்று விட்டது. செங்கமல மன்னன்ஆட்சி ஆரம்பமாயிற்று! வெங்கண்ணா இனித் தன் ஆதிக்கத்துக்குக் குறைவு இல்லை என்று எண்ணினான். செங்கமலம், பெயருக்கு மன்னனாக இருக்கட்டும்—ஆட்சி, அதிகாரம் நம்மிடம் இருக்கும் என்று திட்டமிட்டான். முடி அவனிடம்; பிடி, நம்மிடம் என்று எண்ணினான். வெங்காஜி, தஞ்சையைவிட்டுப் போகு முன்பே, தஞ்சைத் தரணி வெங்கண்ணாவின் அதிகாரத்தின் கீழ்த்தான் சிக்கிவிடும் என்பதை அறிந்தான்—யூகமுள்ள எவருக்கும் தெரியக்கூடியதுதானே அது. விடை பெற்றுக் கொள்ளும்போது, வெங்காஜியும் வெங்கண்ணாவும், எவ்வண்ணம் உரையாடல் நிகழ்த்தியிருப்பர்? எண்ணிப் பாருங்கள்.

''செங்கமலம், சிறுவன்! சிரத்தில் முடியும்; கரத்தில் செங்கோலும் இருக்கிறது. ஆயினும்...''

''ஆட்சி புரிவதற்கான பக்குவம் இல்லையே என்பீர்.''

''செச்சே! ஆளத்தான் நீர் இருக்கிறீரே! வெங்கண்ணா உம்முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். அரசனாக இருப்பதை விட அரசனை ஆட்டிப் படைப்பவனாக இருப்பது, இலாபமானது—மேலும், அரசபீடத்தில் இருப்பவன் சிறுவன்—உம்மால் மன்னனானவன். உம்முடைய சிருஷ்டி! உமது

கைப்பதுமை! தஞ்சைத் தரணிக்கு! உண்மை அரசர், செங்கமலமா! பட்டம் மட்டுமே அவனுக்கு—அதிகாரம் அனைத்தும் உமக்கே.''

''உமது உதவியாலேதான், உரிமையுடைய செங்கமலம் மன்னரானார்!''

''மன்னரானார்—மண் பொம்மை! வேதியரே! பிடி உம்மிடம்தானே இனி. நாங்கள் போரிட்டோம் உன் பொருட்டு—இரத்தம் கொட்டினோம்—பொன் பெற்றோம்; இல்லை என்று கூறவில்லை—ஆனால் அரசரை ஆளும் பதவி உமக்குக் கிடைத்தது. இன்று மட்டுமா! உமக்கு மட்டுமா! தஞ்சையில் விஜயராகவன் அரசாண்டான்—கோவிந்த தீட்சி தருக்குத்தான் செல்வாக்கு. அளகிரி ஆண்டான். உமக்குப் பெருமதிப்பு—செங்கமலம் ஆள வந்திருக்கிறான்—உமக்கே தான் செல்வாக்கு. அரசர்கள் வருவர் போவர். ஆட்டிப் படைக்கும் ஆரியரிடமே அதிகாரம் இருக்கும் என்று ஏற் படுகிறது. இதுவல்லவா அதிர்ஷ்டம். நான் வருகிறேன்; வேதிய வடிவில் உலவும் தஞ்சை வேந்தனே! விடை பெற்றுக் கொள்கிறேன்.''

வெங்கண்ணாவின் மனக்கண்முன், வெங்காஜி குறும்புப் புன்னகையுடன் தன் எதிரே நின்ற காட்சி தெரியலாயிற்று. வெங்கண்ணா, கேட்க வேண்டியதுதான் தாமதம். செங் கமலம், உடனே முதலமைச்சர் பதவியைத் தன் காலடியிலே வைப்பான் என்று எண்ணினான் வெங்கண்ணா. கேட்கவும் செய்தான். செங்கமலத்துக்கோ ஒரு பெரிய சிக்கல்: பீஜபூர் படையை அழைத்து வந்து, தஞ்சைத் தரணியை அளகிரியிட மிருந்து மீட்டு, முடி தந்தவர், வெங்கண்ணா—அவர் முதல மைச்சர் பதவியைக் கேட்கிறார். அதேபோது, அரசு இழந்து அனாதைக் குழந்தையாக இருந்த காலம் தொட்டு, அன்போடு தன்னைக் காப்பாற்றி வந்த, வளர்ப்புத் தந்தை, தன்னை முதலமைச்சர் ஆக்கவேண்டும் என்று கேட்கிறார்—அவருடைய பேச்சையும் தட்டி நடப்பதற்கில்லை; சிக்கலாகி விட்டது பிரச்னை!

வெங்கண்ணா, தனக்கே அந்தப் பதவி உரியது, ஏனெனில், செங்கமலம் மன்னனானதே, என்னால்தானே என்று எக்காளமிட்டான்.

''அரசனானாய், மகனே! ஆனால் எதனால்? உன்னைப் பிழைத்திருக்கச் செய்தோம், நாங்கள், அதனால்! தஞ்சை அரச குடும்பம் அழிந்துபட்டது—உன்னை மரணத்தின் பிடியிலே சிக்கிவிடாமல் பாதுகாத்தவர்கள், நாங்கள்—எனவே, உனக்குக் கிடைத்த அரசாட்சியிலே, எங்களுக்குத்தான் முதல் 'பாத்யதை' உண்டு'' என்று வாதிட்டனர வளர்ப்புப் பெற்றோர்.

''மகனே! நீ உண்மையிலேயே ராஜா ஆவதற்கு முன்பே—அந்த எண்ணம் வரவே முடியாத காலத்திலேயே உன்னை, அன்புடன், 'ராஜா! ராஜா!' என்று கொஞ்சிய தாய் கேட்கும் பிச்சையை, துச்சமென்று தள்ளிவிடுவது தகுமா?

எவ்வளவு அன்புடன் அவர் உன்னை வளர்த்து வந்தார். உன்னைத் தூக்கிச் சுமந்து சுமந்து தழும்பேறிய தோளிலே, பீதாம்பரம் போர்த்து, பிரதானியரில் முதல்வராக இருக்கச் சொல்வதா? உன்னால் முடியாத காரியம்! உனக்காக நாங்கள் பட்டபாடு கொஞ்சமா?'' என்று தாய் கேட்க, 'அம்மா! என்னை வாட்ட வேண்டாம்..' என்று கதறிக் கூறுகிறான் செங்கமலம். இந்தச் சிக்கலான நிலையிலே, மன்னன் இருந்தான்—மமதை வளர்ந்துவரும் நிலையில் வெங்கண்ணா இருந்தான். ''கெஞ்சிப் பெறவேண்டுமா நான், தஞ்சைத் தரணி, அவனுக்கு என்னால் கிடைத்தது என்று உறுமிடலானான் வெங்கண்ணா.

பதவிப் பித்தம் பிடித்தாட்டலாயிற்று—சரி—இரண்டிலொன்று பார்த்துவிட வேண்டியதுதான் என்று துணிந்துவிட்டான் வஞ்சக வெங்கண்ணா. செங்கமலத்தை மிரட்டலானான். மன்னன் தனக்கு ஏற்பட்டுள்ள சிக்கலை எடுத்துரைத்தான். சீறினான் வெங்கண்ணா. அந்தச் சீற்றத்திலே வெங்கண்ணா, மன்னனை எவ்வளவு துச்சமாகக் கருதியிருக்கிறான் என்பது வெட்ட வெளிச்சமாயிற்று.

''மன்னவரே!...மன்னரானவரே! மன்னராக்கப்பட்டவர் நீர் என்பதை மறப்பது நன்றல்ல! நன்றி கொன்றவருக்கு நாடாளும் பட்டம் இருந்து என்ன பயன்! காட்டுநீதி காட்டுகிறீர்—உமக்கு இந்த நாட்டைப் பெற்றுத் தந்த என்னை உதாசீனம் செய்கிறீர்...''

''என் அன்னையின் கண்ணீர்...''

''என் கோபம்?''

''இரண்டுக்கும்தான் பயப்படுகிறேன்.''

''இரண்டில் ஒன்றுக்குத்தான் கட்டுப்பட வேண்டும். அரசு அமைத்த என்னை அமைச்சனாக்காவிட்டால்... எங்கோ கிடந்த உன்னை தஞ்சைப் பதிக்கு மன்னனாக்கிய என்னை விரோதித்துக் கொண்டால்...''

''மறையவரே! என் சிக்கல் தீர்ந்தது—வேதனை ஒழிந்தது.''

''முடிவுக்கு வந்தீரா? முடி தந்த எனக்கு...''

''நல்ல முடிவுக்கு வந்தேன்.''

''என்ன முடிவு செய்தீர்? அமைச்சர் பதவி...?''

''என் தந்தைக்கு அளிப்பது என்று முடிவு செய்துவிட்டேன்.''

''ஆ!...அமைச்சுப் பதவியை எனக்கு அளிக்கப் போவதில்லையா—அழிவை அணைத்துக் கொள்ள...''

''ஆணவத்தை அழிக்கத் தீர்மானித்துவிட்டேன்.''

'ஆரியரே! உமது சீற்றமே, என் சிக்கலைப் போக்கிற்று.'

கட்டளையிட்டுப் பெற வேண்டிய என் தாய், கண்ணீர் பொழிகிறாள். கபடமே உருவான நீ, என்னை மிரட்டிப் பதவியைப் பறிக்கப் பார்க்கிறாய்.

அரசனான மகனே! என்று அன்னை அன்புடன் அழைக்கிறாள்.

ஆணவத்தோடு நீ பேசுகிறாய், என்னை அரசனாக்கியதாக.

நீயும், என் மனம் உருகப் பேசினால் என்ன செய்வது—இருவருக்கும் நான் கடமைப்பட்டவனாயிற்றே—அன்னையின் கண்ணீர்—ஆரிய நண்பனின் அன்பு மொழி எனும் இரண்டும் எம்முன் பொழியப்பட்டால், நான் மனக்குழப்பமடையத்தானே வேண்டி வரும்—யாருடைய மொழிக்குக் கட்டுப்படுவது என்று எண்ணிக் குழம்பினேன்;—உன் ஆணவப் பேச்சு எனக்கிருந்த குழப்பத்தைப் போக்கிவிட்டது. என் தாயின் கண்ணீர் வென்றது.''

''நிதானமாக யோசித்துச் சொல்—சிரத்தில் இருக்கும் முடி.''

''பரம்பரைப் பாத்யத்தின் சின்னம்—அறிந்துரைத்தாய் —அவ்வளவுதான் —அரசனாக்கினாய் —எதற்கு? உனக்கு அடிமையாக இருக்கவா? இதற்கு நான் ஏன் அரசனாக இருக்க வேண்டும்! இப்போதல்லவா தெரிகிறது, உன் போக்கின் காரணம்—தஞ்சைக்கு நீ ஓர் பொம்மை ராஜா தேடுகிறாய்—அதற்கு என்னைப் பொம்மையாக்குகிறாய்—அரசனாக இருப்பேன்—இல்லையேல் சாதாரண மனிதனாக இருப்பேன்—அடிமையாக மட்டும் இருக்கமாட்டேன்—முடி தரிப்பது உனக்குப் பிடி ஆள் ஆவதற்கு என்றால், இது என் காலடியில் கிடக்கட்டும்—கவலை இல்லை—இதை வேண்டேன்.''

''அரசர், ஏட்டுச்சுரையை நம்புகிறார்!''

''நீ உன் பரம்பரைக் குணத்திலே நம்பிக்கை வைக்கிறாய்-அரசுரிமை எனக்கு நிலைக்காதபடி செய்துவிட யோசிக்கிறாய்—முடியவும் கூடும்—ஆனால் முடிதான் போகும்—என் தன்மானம் நிலைக்கும்—அரசன் என்ற பெயர் இராது; அதேபோது ஆரிய அடிமை என்ற இழி சொல்லும் எனக்கு இராது—அரச பீடத்தில் அமர்ந்திருக்கலாம்; ஆனால் ஆரிய தாசனாக இருக்கச் சம்மதிக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறாய், கேள், ஆணவம் கொண்டவனே! நான் தாசனாக மறுக்கிறேன்—அதனால் தஞ்சைத் தரணி ஆளும் நிலை போனாலும் கவலை இல்லை.

போ! அரசு இருக்குமட்டும் அரசனாகவே இருப்பேன்—உன் அடிபணிய மாட்டேன்.

என் அன்னை வென்றாள்—போ! முடிந்த முடிவு!

ஆம்! முடி போவதானாலும் சரி என்ற முடிவுக்கு வந்தாகி விட்டது.''

''சரி!''

எரிமலை வெடித்தது! வஞ்சகம் பீறிட்டுக் கிளம்பிற்று! வெங்கண்ணா சீறினான்! 'சரி' என்று கூறினானே, என்ன அதன் பொருள்? சரி, இவ்வளவுதானா, உன் நன்றி காட்டும் தன்மை என்று வெறுத்துக் கூறினான் என்பதா! செச்சே வெங்கண்ணா அல்லவா, சரி என்று சொன்னான். அண்ணன் தம்பிக்குள் பகை மூட்டிய வெங்கண்ணா! அளகிரியை அழிக்க அன்னிய நாட்டுப்படையை அழைத்துவந்த வஞ்சகனல்லவா? சரி, என்றான்! அதன் பொருள் என்ன, சரி, எனக்கு உபயோகப்பட முடியாதா, உன்னால்? இனி, உன்னையும் தொலைத்துவிடுகிறேன், என்பதுதான்! செங்கமலம் என் பேச்சை மறுத்துவிட்டான், எனவே இனி அவன் மன்னனாக வீற்றிருப்பதா, நான் அதைக் காண்பதா என்று எண்ணினான். நாட்டுப் பற்றுக் கொண்டவனாக இருந்தால், வாளா இருந்துவிட்டிருப்பான். வெங்கண்ணா போன்ற வன்கணாளர்களுக்கு, நாட்டுப் பற்று, நெறி, முறை, எதுதான் உண்டு? யாரை அழித்தாகிலும், வாழ்வுபெற வேண்டும்—என்பது தானே அவன்போன்றாரின் எண்ணம்?எனவே,வெங்கண்ணா செங்கமலத்தை ஒழித்து விடுவது என்று தீர்மானித்தான். எப்படி என்று ஒரு கணம் யோசித்தான்—உடனே புன்னகை பிறந்தது.வெண்ணெயை வைத்துக் கொண்டு,நெய்க்கு அழுவதா? வெங்காஜி இருக்கும்போது, வழி வேறு தேடவா வேண்டும் என்று மெள்ளக் கூறிக் கொண்டான். வேகமாகச் சென்று வெங்காஜியைக் கண்டான்.

''வெங்காஜி! வெற்றி உம்மை அழைக்கிறது. தஞ்சை உமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அரசாள்வதற்கேற்ற அறிவாற்றல் படைத்தோனே! அரசபீடம் தயாராக இருக்கிறது—வருக!''

''வெங்கண்ணா! என்ன பேசுகிறீர்?''

''பேசுகிறேனா! அழைக்கிறேன், மகாப் பிரபோ! அரசாள வருக என்று அழைக்கிறேன்.''

''சித்த ஸ்வாதீனமற்ற...''

''நிலை அல்ல!''

''விருந்துக்கு அழைப்பதுபோல...''

''விருந்துதான்! வெஞ்சமர்தானே வீரருக்கு விருந்து. முன்னம் தஞ்சையினின்றும், தகுதியற்ற அளகிரியை விரட்ட வந்தீர்—வென்றீர்—இம்முறை, தஞ்சைக்கு அரசனாக வீற்றிருக்கும் அறியாச் சிறுவனின் அடாத செயலால் நாடு சீர்குலைந்து நாசமாகாமல் தடுக்க...''

''தடுக்க...''

''தஞ்சையை அவனிடமிருந்து மீட்க வேண்டும்.''

''மீட்க வேண்டுமா?''

''ஆம்! பிறகு, அரியாசனத்தைத் தாங்களே அலங்கரிக்க வேண்டும்.''

''வெங்கண்ணா, பேசுவது தஞ்சை அரசுபற்றி! வெங்காஜியிடம், மராட்டியனிடம், அன்னியனிடம், வெளிநாட்டானிடம்.''

''வெங்காஜியிடம் பேசுகிறேன்-வீரனிடம் பேசுகிறேன்-அன்னியன்! வெளி நாட்டான்! அர்த்தமற்ற வார்த்தைகள், ஆற்றலுள்ளவன் அரசனாதலே முறை.''

''புதியதோர் நீதி நூல்!''

''நீதியல்ல என்றே கூறுவர்—எனினும்...''

''தேசத் துரோகமுமாமே!''

''அப்படியும் கூறுவர்—யார் எப்படிக் கூறினும், செங்கமலம் இனித் தஞ்சையை ஆளக்கூடாது—செங்கோல், ஓர் வலிவுள்ள கரத்தில் இருக்கவேண்டும்—அந்தக் கரம்—இது தமிழ் நாட்டிலே அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்கும் அரும்பணி புரிய இக் கரம் வேண்டும்!''

''அழைப்பது அமளிக்கன்றோ!''

''அமளிக்குப் பிறகு ஆனந்தமன்றோ!''

''ஆரிய! ராஜதந்திரப் பேச்சை நிறுத்துங்கள்; செங் கமலத்தை ஒழித்துவிடத் தீர்மானித்த காரணம்.''

''காரணம்! அவனை அரசனாக்கியதே தவறு என் பதை உணர நேரிட்டதுதான்.''

''அளகிரி, பாண்டிய நாடு—செங்கமலமே, நாயக்க வம்சம்—தஞ்சைப் பதிக்கு உரிமைக்காரன்—அவன் அரசாள் வதே நீதியாகும்—நீதிக்கு வெற்றி கிடைக்கப் படைபலத்தை உதவும் என்றெல்லாம் முன்பு கூறினீர்.''

''உதவியும் பெற்றேன்—ஊர் பேர் இல்லாத அந்த உதவாக்கரையானை, தஞ்சை மன்னனாக்கினேன்.''

''அவன் உமது பேச்சை...மீறி நடக்கத் தொடங்கி னானோ?''

''நடந்தால் நாசமாகிறான். என் குறை அது அல்ல. சொந்த லாபத்தை எண்ணியல்ல நான் இப்பணி புரியக் கிளம் பியது?''

''செங்கமலம் என்ன செய்தான்?''

''பஞ்சமாபாதகத்தைக் கொஞ்சமும் தவறாமல் செய் கிறான்.''

''சிறுவன் செங்கமலமா!''

''சிறுமதியோன் செங்கமலம்! கொடுமை புரிகிறான், கோல் கிடைத்த காரணத்தால்.''

''அவனுடைய வளர்ப்புத் தகப்பன், ஊர் அலறும்படி ஆட்டமாடுகிறான். அவனுக்கு அரச விஷயத்திலே ஈடுபட ...என்ன அதிகாரம் என்கிறீரா? அவன்தான் அமைச்சன்.''

''உம்மை அமைச்சராக்கவில்லையா...''

''அழைத்தான்—மறுத்தேன்—ஆலய வழிபாட்டுக்கு ஆயுளைச் செலவிட நினைத்தேன்—மேலும் நான் பார்த்து அரசனாக்கி வைத்த சிறுவனிடம் நான் சேவகம் செய்வது என்றால், என் மானமும், மதிப்பும் மங்காதோ?''

''அமைச்சரல்லவா நீர்! மற்றவை நீர் கூறாமலே நான் அறிந்து கொண்டேன். வெங்கண்ணா! நான் உமது அழைப்பை ஏற்க மறுத்து—தஞ்சை அரச விவகாரத்தில் தலையிட மறுத்தால், என்ன செய்வீர்...?''

''தங்கள் சூரியமதி மங்கிவிட்டதை எண்ணி வருத்த மடைவேன்—ஆயாசப்படுவேன்—ஆனால் அரச பீடத்தை ஏற்றுக் கொள்ளும்படி, வேறு வேந்தரிடம்—வீரரிடம் சென்று வேண்டிக் கொள்வேன். தஞ்சைத் தரணி இயற்கை யின் கொஞ்சு மொழியால் சீராட்டப் படுவது—காவிரி பாயும் பொன்னாடு—பொன் விளையும் பூமி—வளமிக்க நாடு.''

''உண்மை! செல்வம் கொழிக்கும் தேசம்! நீர்வளம், நிலவளம், குடிவளம் நிரம்பியது.''

''அது அருவிபாட—ஆற்றோரத்தில் அதற்கு ஏற்றபடி தமிழணங்குகள் ஆடுவர்—சோலையிலுள்ள கிளியும் குயி லும் பாட, அதற்கேற்றபடி மயில் ஆட—மன்னவா!—முன் கூட்டியே கூறிவிட்டேன் மன்னா என்று —இத்தகைய இயற் கையின் எழில் மிக்க எமது நாடு.''

''துறைமுகங்களும் உள்ளன.''

''ஆம்! வெளி உலகுடன் தொடர்பு சுலபம்—கப்பல் வாணிபம், பண்டைக்கால முதலே உண்டு, தமிழகத்துக்கும் யவனத்துக்கும்.''

''வெங்கண்ணா! தஞ்சைத் தரணியைக் காப்பாற்றத் தயங்கேன்...''

''தஞ்சை வேந்தே! மன்னன் வெங்காஜி வாழ்க!''

''உஸ்...இதற்குள்...''

''ஏன்? இது முதல் என்று கூறும்—செங்கமலம் தொலைந்தான்...வெங்காஜி வேந்தனானான்-வெங்கண்ணா வென்றான்.''

**பி**றகு! பிறகா? செங்கமலம் விரட்டப்பட்டான்; வெங் காஜி வேந்தனானான்! தமிழகத்திலே, மராட்டியர் ஆள வந்தனர்! சாத்பூரா மலைச்சாரலில் பிறந்த வெங்காஜி, காவிரி பாயும் தஞ்சைக்கு மன்னனானான்! மராட்டிய அரசு அமைந்தது, தமிழகத்தில்! இமயத்தில் இலச்சினையைப் பொறித்த வீரன் வாழ்ந்த தமிழகம், கனகவிஜயன் தலை

யில் கல்லேற்றிச் சுமக்கச் செய்த தமிழகம், கடாரம் கொண்ட தமிழகம், மராட்டியரின் ஆட்சிக்கு இடமளித்துத் தாழ்நிலை பெற்றது! எப்படி? வெங்கண்ணாவின் வஞ்சகத் தால்! தஞ்சையின் வீழ்ச்சிக்குக் காரணம், வெங்கண்ணா எனும் வேதியின் என்பது, எவ்வளவு பேருக்குத் தெரியும்! தெரிந்த சிலர் கூறினாலும், எவ்வளவு பேருடைய செவியில் வீழ்ந்து, சிந்தனையைக் கிளறுகிறது! பிறந்தது தமிழகத்தில்; வாழ்ந்தது தமிழகத்தில்! பழகியது தமிழருடன்! பேசியது தமிழ்மொழி! எனினும், தமிழகத்தின் பூந்தோட்டத்தை, மராட்டியருக்குக் காட்டிக் கொடுத்தான் கயவன்! அன்னிய ஆதிக்கத்தைப் புகுத்தினான்! பொன்னும் பொருளும், போக போக்கியமும், மானியமும் பட்டயமும் பெற்றான்—பேரானந்த தணிந் திருக்கும். தமிழரின் தன்மானமோ—அழிந்துபட்டது; தஞ்சை வீழ்ந்தது—மராட்டிய அரசு ஆரம்பித்தது, மறத் தமிழர் நாட்டில்.

நாடு, உரிமையாளரிடம் இருக்கிறதா, அன்னியனிடம் ஆட்பட்டுக் கிடக்கிறதா என்பது பற்றிய கவலையற்று, கொடுங்கோலா, செங்கோலா என்பதைப் பற்றிய கவலையு மற்று, நமக்கு அந்தஸ்து உயர்வு உண்டா, நமது இனத் துக்கு மேலான நிலை இருக்கிறதா, பாடுபடாமல் பிழைக் கவும், பரிமளமிக்க வாழ்வு பெறவும், மேற்குலத்தோன் என்ற நிலை இருக்கவுமான முறையிலே நாடு நடத்தப்படு கிறதா என்ற சுயநல வெறியுணர்ச்சிகொண்டு வெங்கண்ணா இருமுறை அரசுகளைக் கவிழ்த்தான்—நாட்டை நாசப் படுகுழியில் தள்ளினான்! இதுபோல, பரந்த இந்தத் துணைக் கண்டத்தில், வஞ்சகம் வென்றதைக் காட்டும் வேதனை தரும் நிகழ்ச்சிகள் பலப்பல நடைபெற்றன! அரசுகள் அழிக்கப் பட்டன—அறம் அழிக்கப்பட்டது—நாடு சீரழிவு பெற்றது. சுயநலமும் சூழ்ச்சித் திறனும், இனவெறியும், வைதீக வெறி யும் கொண்டவர்கள் நாட்டுக்கு ஏற்படுத்திய நாசம், ஒன்றி ரண்டு அல்ல—உள்ளத்தைக் குலுக்கக்கூடிய சம்பவங்கள் பலப்பல! தஞ்சை வீழ்ச்சி, அது போன்ற சம்பவங்களிலே ஒன்று! சரிதம் தரும் எச்சரிக்கை!!

★

# 4
# திருமலை கண்ட திவ்ய ஜோதி

*[மதுரை மன்னன் திருமலையின் மாய மரணம் பற்றிய குறிப்புக்களைக் கொண்டு சித்தரிக்கப்படும் ஓவியம் இது. இட்டுக் கட்டியதோ என்று ஐயப்படுவோருக்கு, எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் தீட்டிய 'கன்னியர் வீரம்' என்ற சிறு நூலில், பட்டர் புதல்வி சிறுகதையைப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.]*

**சுந்தரவல்லி :**

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பிரதம பட்டாச்சாரியாரின் திருமகள் நான். பெயர் சுந்தரவல்லி. இளமங்கை—எழில்மிக்கவள்—பூங்கொடி—ஊர் புகழ்கிறது என்னை. இதோ, என் எதிரே இருப்பது விஷக்கோப்பை! தங்கக் கோப்பை! மன்னன் முன்பு தந்த பரிசு இது—அப்பாவுக்கு! எனக்கும் பரிசு தந்திருக்கிறான், விஷம்!

''குழந்தை சொர்ண விக்ரஹம் போலிருக்கிறது! பாப்பா! வாம்மா, வா! ஏன் பயம்? ஓடிவா, ஓடிவா! இதோ பார், உனக்குத்தான் மல்லிகை—வா!''—நான் சிறுமி, பட்டாச்சாரி மகள்—அவர்!—நாடாளும் மன்னன். அவருடைய அன்புமொழி எனக்குத் தேனாக இனித்தது. அப்பா பூரித்துப் போவார். என்னைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் மன்னர்முன் நிறுத்துவார். அவர் என் முகவாய்க்கட்டையைப் பிடித்துத் தூக்குவார்; கன்னத்தைக் கிள்ளுவார்; துவள்வேன். தூக்கி உட்கார வைத்துக் கொள்வார் மடியிலே! ஊரார், 'சுந்தரவல்லி மஹா அதிர்ஷ்டக்காரி! மகாராஜாவுக்கு அவள் மீது உயிர்' என்பார்கள். பலநாள் எனக்குப்

பழமும், பட்சணமும், மல்லியும் முல்லையும் கொண்டு வந்து தருவார். ராஜகாரியங்கள் ஏராளம். என்றாலும், என்னைப் பார்க்கவும், விளையாடவும், எப்படியோ அவருக்கு நேரம் கிடைத்தது. சிறுமிதானே நான்—எனக்கு ஒரே பெருமை! என்னைப் போன்ற சிறுமிகளைப் பார்க்கும்போது, பெருமையாகச் சொல்வேன், 'உங்க ஆத்துக்கு ராஜா வர்றாரோ? எங்காத்துக்கு வரார்—என்னோடு வேடிக்கையாப் பேசிண்டிருப்பார். என் மேலே பிராணன் மகாராஜாவுக்கு'—என்றெல்லாம். சிறுமிகளிலே குறும்புக்காரிகள் கேலி பேசும்-''சுந்தரியோட கண் இருக்கே, அது ராஜாவை மயக்கிவிட்டிருக்கும்'' என்று ஒருத்தி சொல்வாள். கோடி ஆத்துக் கோமளம், ''சுந்தரி சிரிக்கிறப்போ கன்னத்திலே குழி விழறது பாரடி, அதிலேதான் ராஜா சொக்கிப் போறார்'' என்பாள். ''சுந்தரியோட கல்யாணத்துக்கு, ராஜா நிறைய சன்மானம் செய்வார்'' என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

இந்தத் தென்றலால் நான் வளர்க்கப்பட்டேன்— பருவ மங்கையுமானேன்! மன்னன் எப்போதும் போலவே வந்து கொண்டிருந்தார். 'சுந்தரி, சுந்தரி!' என்று கனிவுடன் கூப்பிடுவார். நான் 'நமஸ்காரம்' செய்துவிட்டு, உள்ளே போய்விடுவேன்— அப்பாவும், அவரும் பேசுவார்கள்— நான் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டே இருப்பேன். சிறுமியாக இருந்தபோது இருந்தபடி இப்போது முடியுமா—அடே அப்பா! அப்போது ஒரே வேடிக்கைதானே! அதை எண்ணிக் கொள்வேன். புன்சிரிப்புடன் போகும்போது ஒருமுறை நமஸ்காரம் செய்வேன். அவர் மட்டும் அடிக்கடி, 'சுந்தரி, சுந்தரி' என்று கூப்பிட்டபடி இருப்பார்.

அப்பாவிடம் எனக்குப் பிரமாதமான கோபம் பிறந்தது. அரசர் மீது குற்றம் கண்டுபிடிக்கத் தொடங்கினார். யாரரோ அப்பாவின் மனதைக் கெடுத்தனர்— இவரும் பிறகு, பலருடைய மனதைக் கெடுக்கலானார். மன்னர் எங்கள் நாட்டுக்கு வந்த கிருஸ்தவப் பாதிரிகளுடன் கூடிக் குலவுகிறார் என்பதுதான் புகார்! இதிலே என்ன தவறோ தெரியவில்லை! கிருஸ்தவப் பாதிரிகள் என்றால் என்ன, அவர்களும்

மனிதர்கள்தானே! ஏன், அப்பாவுக்கும் மற்றும் சிலருக்கும் அருவருப்பு—நான் கேட்டேவிட்டேன் அப்பாவை—அவர், 'பைத்யம்! உனக்கென்னடி தெரியும்! நம்ம புராதன மதத்துக்கு வைரிகள் இந்தக் கிருஸ்தவா. நம்ம மதத்திலே உள்ளவாளை, ஏழை எளியவர்களையும் விவரம் அறியாதவர்களையும் பிடித்து, கிருஸ்தவ மதத்திலே சேர்த்துக் கொள்கிறா. இந்த அக்ரமத்தை ராஜன் அனுமதிக்கிறான். இவனே, கிருஸ்தவனாகி விடுவானோன்னு நேக்கு பயமாயிருக்கு—ஊர் முழுதும் இதைப் போலத்தான் பேசிக் கொள்கிறா'' என்று சொன்னார். 'இவ்வளவுதானா! தங்கக் குன்றப்பா மகாராஜா! அவரைச் சந்தேகிப்பது மகாதோஷம்'' என்று நான் வாதாடி வந்தேன்.

ஒருநாள் அப்பா வெளியே போயிருந்தார்—அவர் வந்தார். நமஸ்காரம் செய்ய வேண்டுமே—ஊராளும் ராஜா வந்திருக்கிறார், உட்காருங்கள் என்று சொல்லாவிட்டால் எப்படி...கூச்சத்தோடு நின்றேன்—கும்பிட்டேன்—ஏதோ குளறினேன்-உட்காருங்கள் என்றுதான் சொல்லியிருப்பேன், ஊஞ்சலில் உட்கார்ந்தார். நான் அவர் கண்களில் பட்டும் படாததுமாக நின்று கொண்டிருந்தேன்.

''அப்பா, இல்லையோ...சரி, வருவார், சீக்கிரம்' என்று சொல்லியபடி, மன்னர், நான் இருந்த பக்கம் கவனித்தார்—என்னையும் அறியாமல் கூச்சம். தலை குனிந்தபடி நின்றேன். ''ஏன் கூச்சமோ? சிறு பெண்ணாக இருக்கும்போது எவ்வளவு விளையாடுவாய், மான்குட்டி போல! நான் என்ன புது மனிதனா? என்னைக் கண்டு, ஏன் இவ்வளவு வெட்கம்?'' என்று கேட்டார். நியாயந்தான்—ஆனால் இந்தப் பாழாய்ப் போன வெட்கம், என்னைப் பிடித்து உலுக்கிவிட்டது. கொஞ்சம் ஜலம் கேட்டார்; ஓடினேன் உள்ளே—வெள்ளிச் செம்பிலே வெட்டிவேர் தண்ணீர் நிரப்பி, ஊஞ்சலருகே கொண்டு சென்றேன்—அதை வாங்கும்போது, அவர் கரம், என் கரத்தின்மீது படுவது போலிருந்தது—ஊஞ்சலின் மீது செம்பை வைத்துவிட்டு விலகி நின்றேன். புன்னகையுடன் அவர், ''அடே அப்பா! எவ்வளவு ஜாக்ரதை! நான் என்ன,

பூதமா, பிசாசா?'' என்றார். நான் என்ன பதில் சொல்வது —புன்னகை புரிந்தேன். அப்பா வந்தார், எனக்கு அப்போது தான் மனஅதிர்ச்சி மறைந்தது. பிறகு அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்பா இல்லாத வேளையில் இதுபோல அவர் வரு கிற போதெல்லாம் எனக்குப் பெரிய மன நெருக்கடியாகவே இருந்து வந்தது. 'வேண்டுமென்றே, அப்பா இல்லாத நேர மாகப் பார்த்து வருகிறாரோ, தெரியவில்லையே!' என்று சந்தேகம் கிளம்பிற்று—லேசாகத் திகிலும் பிறந்தது. ஏனென் றால், மகா உத்தமர், தர்மிஷ்டர் என்றாலும், மன்னருக்கு மாதர்களிடம் மையல் அதிகம் என்று அப்பாவும் மற்றவர் களும் பேசிக் கொண்டது எனக்குத் தெரியும். முன்னூறு அழகிகள் இருக்கிறார்கள் அந்தப்புரத்தில் என்று சொன்னார் கள். நானோ பருவ மங்கை! அவரோ அடிக்கடி நான் தனி யாக இருக்கும்போது வருகிறார். அன்னியராக இருந்தால் அப்பா இல்லை என்று ஒரே வார்த்தையில் அனுப்பிவிடு வேன். அரசர்! குழந்தைப் பருவ முதல் விளையாடிய பழக் கம்! எப்படி அலட்சியப்படுத்த முடியும்? ஆனால்...!

என் அடிவயிற்றிலே அடிக்கடி இந்த 'ஆனால்' கிளம் பும். ஆனால் மறுகணம், செச்சே! என் அப்பாவுக்குச் சமானம் என்ற எண்ணம் தோன்றி, சாந்தி உண்டாக்கும்.

என்ன அவசரமாகத்தான் இருக்கட்டும்; இப்படி, வெள் ளிச் செம்பை நானாகத் தருவதற்குள் அவர், என் கரத் தைத் தொடுவதா—நான் கொஞ்சம் முகத்தைச் சுளித்துக் கொண்டேன். அவர், 'செச்சே! இதென்ன இவ்வளவு பயம்! பைத்யமே! உன் அப்பா, ஜெபதபாதிகளை முடித்துக்கொண்டு வீடு வர நெடுநேரமாகும்' என்றார்—என் மனம் பதறிவிட் டது. விலகினேன்—விடவில்லை—கரத்தை உதறித் தள்ளி னேன்; கருத்து புரிந்து விட்டது. அவரோ...என்ன சொல் வேன்—அணைத்துக் கொண்டார்—பிறகு—கூவுவேன் என்று மிரட்டினேன். 'கோமளமே' என்று கெஞ்சலானார்— இதென்ன அக்ரமம் என்றேன்; அவர் காதல் பேசலானார்.

'என்மீது கோபித்து என்ன பயன் கண்ணே! தேவரும் மூவரும் கூட மதிமயங்கக்கூடிய அழகை உனக்குத் தந்த அயன்மீது கோபித்துக் கொள் அல்லது உன் அழகைக் காண எனக்குக் கண்ணளித்த கடவுளின் மீது கோபித்துக் கொள். நான் மன்னன். ஆனால், மனிதன்! முனிவனுமல்ல! மோகனாங்கி!' என்றார். அரசர் பேசும் பாஷையா இது—என் உடல் துடித்தது—நான் துணிந்து, அவரைக் கண்டித்தாக வேண்டும்—விலகினேன்—விழியிலே நீர் தளும்பிற்று—

''இந்த அக்ரமம் ஆகாது—அரசரின் புத்தி இப்படி அழியக்கூடாது'' என்று சொன்னேன்—கோபமாகத்தான். ஆனால் உரத்த குரலிலே அல்ல—வெளியே தெரியக் கூடாதே. பதில் பேச வாயில்லை—ஆனால்...என்னை விடவில்லை... ''உன்னிடம் பிச்சை''என்றுகெஞ்சினார்...இந்தத் துர்ப்பாக்கியனைச் சாகடிக்காதே'' என்றார் சாகசமாக. எனக்கும் வார்த்தைகள் மளமளவெனக் கிளம்பின. ஏசினேன். ''என் மீது என்ன சுந்தரி, தவறு—கரும்பு வில்லோன் என்னைக் கொல்கிறான்'' என்று கூறினார். ஆத்திரம், எனக்கு. கரும்பு வில்லோன் இப்படித்தான் கதியற்ற கன்னியைக் கற்பழிக்கச் சொல்கிறானா? கபடத்துக்குக் கவசமிடாதீர், காவலரே! விநாசத்தைத் தேடிக் கொள்ளாதீர்; அழிந்து போவீர்—நிச்சயமாக—சத்தியமாக'' என்று கூறினேன், அழுதபடி. பயம் போய்விட்டது; கோபம் அதிகரித்தது. ஓடிவந்து என்னைப் பிடித்திழுத்தபடி, 'அழிவேனா! நானா! உன்னைப் பெறாவிட்டால்தான் பேரழகிநான்அழிவேன்-பெற்றால்பெருவாழ் , புதுவாழ்வு இருவருக்கும்' என்றார். வெறுப்பு எனக்கு—அவர் பிடியிலிருந்து விடுபடக்கூட முயற்சிக்கவில்லை—'வாழ்வு எனக்கு கற்பிழந்த பிறகு?' என்று சொன்னேன். என் கூந்தலைக் கோதியபடி அவர், 'கற்பு! யார் வேண்டாமென்பார் அந்தப் பூஷணத்தை—என்னைக் கணவனாகக் கொள்—பதிசொல் தவறாத உத்தமியாக வாழ உன்னை அழைக்கிறேன்; வெறும் உல்லாசத்துக்கு அல்ல'' என்றார். ஒரு கணம் திகைத்துப் போனேன், என்ன சால்வது என்று தெரியாமல்! கற்பு கெடாதாமே! திருமணம் செய்து கொள்

ளச் சொல்கிறாரே! என்று யோசித்தேன். வார்த்தைகள் வெளிவரத் தாமதமாயின—அவருடைய சேட்டைகளோ துரிதமாயின. ''அரசே! குலம் அறியாது பேசுகிறீர்'' என்றேன், அணைப்பிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டபடி. 'அழகு அறிந்து நாடுகிறேன், சுந்தரி! அவ்வளவுதான் எனக்குத் தெரியும் பேச' என்றார். அவருடைய மயக்கத்தைப் போக்க மேலும் பேச எண்ணி, 'அழகு கண்டு அகலிகையிடம் மோகம் கொண்ட இந்திரன் என்ன கதியானான்? தெரியுமே உமக்கு' என்றேன். அவர், என் வாயை அடைக்கும் விதமாக, 'உனக்கு ஒரு கௌதமன் இல்லையே சுந்தரி! அதை மறந்து பேசுகிறாயே' என்றார். ஆமாம்! நான் கன்னி! அவரோ கலியாணம் செய்து கொள்ள அழைக்கிறார். கற்பை, பூஷணமென்று புகழ்கிறார். ஒருவேளை, என்னை மனைவியாகக் கொள்ளத்தான் விரும்புகிறாரோ, என்றெல்லாம் எண்ணம் பிறந்தது. ஆனால் இதை அவர் அப்பாவிடமல்லவா கூறவேண்டும்; இப்படி என்னைத் தனியாகச் சந்தித்தா..முறை வேண்டாமா எதற்கும். கோபம் குறைந்தது; பரிதாபமாக இருந்தது—எனவே, நான் என் தந்தை, ஆதீனம் என்று கூறி என் நிலைமையை விளக்கினேன். அவர் கொஞ்சும் மொழியில், 'நீ உன் தந்தை ஆதீனம், அவரோ சாஸ்திர ஆதீனம், சாஸ்திரமோ பிரம்ம குலமங்கையை க்ஷத்ரியன் மணம் செய்துகொள்ள இடம் தராது—என்ன செய்வது?' என்று கேட்டார். எனக்கு அவருடைய வாதம்கூட, சிறிது மகிழ்ச்சி தந்தது. ஆனால் அவருடைய செய்கை எனக்குக் கோப மூட்டியது. கடுமையாகவே ''என்ன செய்வது—மனதை அடக்குவது—தர்மத்துக்குக் கட்டுப்படுவது—பாப தோஷத்துக்குப் பயந்து நடந்து கொள்வது'' என்று சொன்னேன். நான் சொல்லச் சொல்ல அவர் என்னை நெருங்கி, ''ஏட்டுச் சுரை! எல்லாம் ஏட்டுச் சுரையடி எழிலரசி!'' என்று கூறிவிட்டு, கட்டிப் பிடித்தார்—''காட்டு முறை இது; வேண்டாம்'' என்று கூறியபடி விலகினேன்—சுவற்றிலேகூட மோதிக் கொண்டேன்—மேலே போக இடமுமில்லை; அவர் விடவுமில்லை. 'ஐயோ' என்று அலறினேன். ஆஹா! என்று புகழ்ந்தார்—இதழை இதழ் தொட்டது; துடித்தேன்—

'அட பாவி!' என்று சபித்தேன்; 'என் அன்பே' என்று சரச மொழி பேசிவிட்டு...! அக்ரமம்—என்று கூறியபடி என் பலம் கொண்ட மட்டும் தள்ளினேன். ஆனால் நான்தான் கால் இடறிக் கீழே வீழ்ந்தேன்—அழிந்தேன். நான் அழுத கண் களைத் துடைத்தபடி 'பாவீ! பாதகா!' என்று ஏசினேன். 'அம்ர்தம்! தேவாமிர்தம்!' என்று அந்தப் பாவி பஜனை பாடிக்கொண்டிருந்தான். உள்ளே சென்று, படுக்கையில் புரண்டு புரண்டு அழுதேன். 'சுந்தரி—சுந்தரி—சுந்தரி' என்று விதவிதமாகக் கூறினார்—காலால் எட்டி உதைத் தேன் கதவை—உரத்த குரலில் சிரித்துவிட்டு, வெளியே போய்விட்டார், இரத்தம் குடித்த புலி போல. நான்! நானா! நாசப்படுகுழியிலே தள்ளப்பட்ட நான் என்ன செய்வது? நான், யார் இனி? மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பிரதம பட்டாச்சாரியாரின் மகள் சுந்தரவல்லி, மன்னனின் காமப் பசிக்குப் பலியாக்கப்பட்டுவிட்ட பாபியானாள்! என்ன செய்வது! ராஜசர்ப்பம் தீண்டி விட்டது—துடைக்க முடியாத கறை படிந்துவிட்டது.

அரசன், சாமான்யன்—சகல கலாவல்லவன், சாமான் யன், நல்லவன், கெட்டவன் என்று ஆடவர்களை எப்படி வேண்டுமானாலும், நிலைமையும் குணத்தையும் கொண்டு பிரித்துக் காட்டலாம். ஆனால் பெண்கள் விஷயத்திலே ஆட வர்கள் கொள்ளும் போக்கைக் கவனித்தாலோ, செச்சே! எல்லா ஆடவரும் ஒரே தரமாகத்தான் இருக்கிறார்கள். இந்த அரசன், நான் பந்து ஆடுவதைக் கண்டு மகிழ்ந்தவன் தான்! 'பாப்பா, பாப்பா' என்று கூப்பிட்டவன்தான்! இப் போது, காமப்பசி பிடித்து என்னை நாசம் செய்துவிட்டான், நிலைமையை மறந்து. இனி என் கதி?

மறுமுறை அந்த மாபாவியின் முகத்தை ஏறெடுத்தும் பார்க்கலாகாது என்று தீர்மானித்தேன். அப்பா வருவதற்குள் என் அலங்கோலமான நிலையைத் திருத்திக் கொண்டேன்—தலைவலி—அதனால்தான் முகத்திலே மாறுதல் என்று தந் திரம் பேசினேன். அப்பா, மீனாட்சி கோயிலிலே வந்திருந்த பக்தர்களின் பெருமையைப் பற்றிப் பேசிக் கொண்டே,

பிரசாத வகைகளை வைத்தார். 'அம்பிகே! என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கினாயே' என்று எண்ணி ஏங்கினேன். அப்பா, வேதாந்த விவகாரத்தில் ஈடுபட்டார்—வேதனையில் நான் மூழ்கிக் கிடந்தேன். வேட்டைக்காரன் அரண்மனையில் 'தர்பார்' நடத்தியிருப்பான்! ஊரார்? அவர்களுக்கு என்ன...

மறுபடியும் மறுபடியும் புலி வந்தது! நான் என் கோபத்தையும், வெறுப்பையும் வெளிப்படையாகக் காட்டினால், அப்பா என்னவென்று கேட்பாரே—அதனால், நடிக்க வேண்டி நேரிட்டது. அப்பா இல்லாத சமயங்களிலேயோ, அப்பப்பா! அரசனாகவா இருந்தான்; சித்ரவதை செய்தான். செந்தேனே என்று அவன் கொஞ்சுவது கருந்தேள் கொட்டுவது போலிருந்தது. சரி, இனி, நிலைமையை வேறுவிதமாகவாகிலும் சரிப்படுத்திக் கொண்டாக வேண்டும் என்று எண்ணி, திருமணப் பேச்சைத் துவக்கினேன்—அதற்குத் தடை ஏது என்றான்—அந்த ஏற்பாட்டைத் துரிதப்படுத்தச் சொன்னேன். அவன் அதற்காக 'அச்சாரம்' பெற்ற வண்ணம் இருந்தான்; உரிமையோடு பெறலானான்; நான் என்ன செய்வேன். இனிப்புப் பண்டம் கசக்கலாயிற்று; பால் புளித்தது! பசி குறைந்தது! பாதகன், எனக்குப் 'பரிசு' தந்துவிட்டான். நான் கருவுற்றேன்—அவன் சொல்லத்தான் அதையும் அறிந்து கொண்டேன். பயத்தால் முகம் வெளுத்தது. அப்பா, இதைக்கண்டு கொண்டார். 'ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை' என்ற பதில் எத்தனை நாளைக்குப் பலனளிக்கும்? உண்மையைக் கூற வேண்டியதாகிவிட்டது.

''சுந்தரி! ஏன் உன் முகம் சோபிதமிழந்து கிடக்கிறது. கசங்கிய தாமரை போலாகி இருக்க என்னம்மா காரணம்?''

''ஒன்றுமில்லையப்பா?''

''என்னம்மா ஒன்றுமில்லை. தேககாந்தி மங்கிக் காட்டுகிறது. விழி சதா, மிரட்சி கொண்டபடி இருக்கிறது. இரவு தூங்குவதில்லை சரியா— மனதிலே, உனக்கென்னம்மா விசாரம்?''

''அப்பா! என்னை, வேதனைக்காளாக்காதீர்...''

''பைத்யமே! காரணம் கூறாமல் கலங்கி நிற்கிறாயே.. கண்களிலே நீர்...என்னம்மா...''

''அப்பா! நான் ஓர் பாபி!''

''பாபியா? பைத்யமே! பித்தமா உனக்கு?''

''பித்தனின் காமப்பசிக்கு இரையான பேதையப்பா, நான்....படுகுழியில் தள்ளப்பட்டேன்...பாவியால்...''

''காமப்பசி! பலி! படுகுழி! என்னம்மா பிதற்று கிறாய்?''

''ஐயோ, அப்பா! நான் எப்படிக் கூறுவேன்...என்னை ...மன்னன்...எவ்வளவோ தடுத்தும்...பலாத்காரமாக...''

''சிவ, சிவ! என்ன பாபம்—என்ன கர்மம் இது! திருமலையா இத்தீய செயலைச் செய்தான்...அழியாத அபகீர்த்தியை உண்டாக்கிவிட்டான்—என் குலக் கொழுந்தைக் கெடுத்தானா—மகளைக் கெடுத்தானா மாபாவி—அடே, பாதகா! வஞ்சகா! பஞ்சமா பாதகம் செய்யும் வஞ்சகா! என் குடும்பத்தைக் கெடுத்தாயே—மகளே! பேதைப் பெண்ணே! எப்படியடி இடம் கொடுத்தாய்—உன் கையிலே, ஒரு கத்தி கிடைக்கவில்லையா—அவனைக் கொல்ல? உன்னால் முடியாவிட்டாலும், நீ செத்திருக்கலாமே! என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால்...என் குலப் பெருமை, குடும்பப் பெருமை, எல்லாம் போயிற்று! தேவி! எப்படி இந்தத் தீயகாரியம் நடைபெற அனுமதித்தாய்! உன்னைத் தொழுது வரும் எனக்கா, இந்த அபகீர்த்தி! என் மகள், விபசாரி...கற்பிழந்தவள்...''

''அப்பா! அந்தக் கபடன், என்னைக் கலியாணம் செய்து கொள்ளவும் சம்மதம் என்று பேசுகிறான்.''

''உரக்கப் பேசாதடி! புத்தி யுக்தியற்ற பேதையே! கலியாணமாம்—ஜாதி, ஆசாரம்—சாஸ்திரம்—எல்லாம் என்ன ஆவது?...''

''இப்போது எல்லாம் நாசமாகித்தான் போயிற்று...''

''திருமலை! உன்னைப் பழி வாங்காதிருக்கப் போவதில்லை— நாடாளும் உன்னை, நான் நாசமாக்காவிட்டால், என் பெயர் சந்திரசேகர பட்டர் அல்ல. மமதை கொண்டு, வேதிய குலம் என்றும் பாராமல், உன் நண்பனென்றும் யோசிக்காமல், தேவி மீனாட்சி கோயில் திருப்பணி செய்யும் பட்டர் என்பதையும் பார்க்காமல், என் மகளைக் கெடுத்தாய்! உன்னை நான் பழி வாங்காமுன்னம், ஊண் உறக்கம் கொள்ளேன்— இது சத்தியம்—தேவிமீதாணை—உன்னைத் தொலைத்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்.

தேவி கோயிலுக்கு வா, தெளிவற்ற பெண்ணே! ஆலயம் வா! பக்தர்களை அழைக்கிறேன்! உன்னை மன்னன் கெடுத்த பாபக் கிருத்யத்தை எடுத்துக்கூறி, பாபிக்கு என்ன தண்டனை என்று கேட்கிறேன். கற்பழிக்கும் காதகனையா, காவலனாகக் கொள்கிறீர் என்று கேட்கிறேன்— கல்மனம் கொண்டவனும் கண்ணீர்விடாமலிருக்க முடியாதே! கல்லால் அடித்துக் கொல்வர், காவலனாக உள்ள காதகனை!

''சொல்லடியை நாம் தாங்க வேண்டுமே! ஊர் மக்கள், இழித்தும் பழித்தும் பேசுவரே...''

''ஆமாம்...அதைக் கேட்டுச் சகிக்க முடியாதே...ஆத்திரப் பட்டுப் பயன் இல்லை...ஆனால் என் அடிவயிற்றில் நெருப்பைக் கொட்டிய அக்ரமக்காரனைச் சும்மா விடுவது இல்லை—ஆமாம். என்னம்மா? ஏன் ஐயோ, அப்பா— என்ன?''

''அடி வயிற்றிலே ஒருவிதமான வலி அப்பா!''

''வலியா?''

''பாப மூட்டையைச் சுமக்கிறேன்.''

''பரமேஸ்வரா! ஏனோடாப்பா இந்தச் சோதனை? நான் செய்த பாபம் என்னவோ? தேவி! தேவி!...''

இதற்குமேல், தந்தையும் மகளும் என்ன பேச முடியும்?

அவர் தலைதலையென்று அடித்துக் கொண்டு அழு தார்—நான் என்ன கூறிச் சமாதானப் படுத்துவேன்.

நான் துணிந்துவிட்டேன்—இனி நான் வாழமுடியாத வள்—என் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போய்விட்டது—ஆனால், என் உயிரைப் போக்கிக் கொள் ளவா முடியாது!

மானம் போயிற்று. பறித்தவனோ மன்னன்! 'மணம் செய்து கொள்' என்று வலியுறுத்தலாம்; மக்களிடம் முறை யிடலாம். அந்தப்புரத்தில் போய்ச் சேரலாம். ஆனால் அப்பாவோ, சாஸ்திர விரோதம் என்கிறார். ஆகவே, நான் இனி பிழைத்திருக்க முடியாது. செத்தாக வேண்டும். குடும் பத்துக்கு இழிவைத் தராதிருக்க வேண்டுமானால், சாகத் தான் வேண்டும்.

அப்பாவிடம் வாதாடினேன்— திருமணத்துக்கு. மன் னன் எப்படியும் ஒப்புக் கொள்வாரப்பா என்று கெஞ்சினேன் — அவர், வெந்த புண்ணிலே வேலைச் சொருகாதேடி என்று கொக்கரித்தார். பெண்ணின் வாழ்வு பெரிதா, சாஸ்திர சம்பிரதாயம் பெரிதா என்று கேட்கத் துடித்தேன். நான், அழுகிய பழம், அப்பாவுக்கு அந்த நாற்றம் குடையும்போது, நான் வாதாடுவது வேதனையாகத்தானே இருக்கும். ஆகவே சாவு தவிர வேறு மார்க்கம் இல்லை. ஆமாம், நான் சாகத் தான் வேண்டும். விஷம்! சாவு!! வேறு வழியில்லை.

**சந்திரசேகரபட்டர்**

என் மகள் மாண்டு போனாள்— அந்த இரகசியமும் அவளோடு, மண்ணோடு மண்ணாகப் புதைந்து போய்விட் டது. ஆனால் என் மனம்! நான் கோயில் அர்ச்சகன். என் மூலம்தான் எண்ணற்றவர்கள், தேவியின் அருளைப் பெறு கிறார்கள். ஆனால் தேவி எனக்கு அளித்தது? ஊரெல்லாம் தான் புகழ்ந்தது சுந்தரியின் அழகை! மன்னன் காட்டிய பரிவு, பலருக்குப் பொறாமைத் தீயைக்கூட மூட்டிவிட்டது. அந்தப் பாவி, என் மகளைக் கொன்றான். மாரடைப்பு— ஊராருக்குக் கூறினேன். ஆனால் என் உள்ளம் அறியுமே! விஷமருந்திச் செத்தாள் என் மகள்! பாதகன்,என்ன காரியம் செய்துவிட்டான்! ''சபலம்? ஆமாம், நடந்தது நடந்துவிட்

டது. என்னையும் அறியாமல் நேரிட்டுவிட்டது. அவள் அழகு என் அறிவை அழித்துவிட்டது. அந்தணரே! இனி அதுபற்றிப் பேசிப் பயனில்லை. நிலைமையை, நெஞ்சிலே கபடமின்றிக் கூறிவிட்டேன். நீர் மதியூகி! வேறென்ன சொல்ல—அவ்வளவு தான்''— இப்படிப் பேசினான், என் மகளை இரைகொண்ட காமாந்தகாரன். அவளைத் திருமணம் செய்து கொள்வானாம்—கைவிடமாட்டானாம்! வேறு ஏதாகிலும் ஏற்பாடு செய்யவேண்டுமென்றாலும் தயாராம்! இந்த மண்டலத்திலேயும், எந்த மண்டலத்திலேயும் உள்ள மறையவர் குலத்திலேயும் எனக்குப் பெரும்பழியைத் தேடிக் கொள்வதா? எப்படிச் சம்மதிக்க முடியும் திருமணத்துக்கு.

சுந்தரியும் திருமணம், திருமணம் என்று வாதாடினாள். அவளுக்கு என்ன தெரியும், சாஸ்திர சம்பிரதாய மகிமையும் மேன்மையும்? வேதிய குலம் முழுவதும் என்னை வெறுக்கும், கண்டிக்கும், சபிக்கும். இதை எண்ணித்தானே திருமணம் கூடாது என்றேன். ஒரு வேளை, சுந்தரியைத் திருமணம் செய்து கொண்டு சுகமான வாழ்வளித்து இருக்கக்கூடும் மன்னன்! தங்கப்பல்லக்கிலே செல்லும் அந்தஸ்து கிடைத்திருக்கும் மகளுக்கு. ஆனால் நான்? சண்டாளன் என்றல்லவா தள்ளப்பட்டிருப்பேன். கேவலமாகத்தானே கருதியிருப்பர்! இதற்காகத்தான், மன்னனை சதா சர்வகாலம் வீட்டிற்கு வரவழைத்தபடி இருந்தான்போலும் என்று இழிமொழி பேசுவர். ஏற்கனவே ஏதோ ஓர்விதமான வதந்தி பரவித்தான், வம்பளந்தார்கள் விஷமக்காரர்கள். அன்று கைலாசநாத பட்டரும், கனகசபேசபட்டரும் பேசியது ஒரு தினுசாக இருந்தது—ஏன் அவ்விதம் பேசினார்கள் என்பது பிறகல்லவா புரிந்தது. பித்துக்குளிகள் ஏதோ பிதற்றுகிறார்கள் என்று, நானோ ஏமாளி, எண்ணிக் கொண்டிருந்தேன், அப்போது.

''சௌக்யந்தானே, ஸ்வாமிகளே!''

''இருக்கேன்—ஏன்...''

''கேட்டேன் ஸ்வாமி! லோகாசார முறைப்படி...''

''சந்தோஷம்...வரட்டுமோ''

"ஆஹா! நான் தடை செய்ததை க்ஷமிக்கணும்—ராஜா இந்நேரம் தங்கள் தரிசனத்துக்காகத் தவித்துக் கொண்டிருப்பார்—போய் வாரும்..."

"ஓய்! நீர் பேசுகிறதைக் கவனிச்சா, ஏதோ என்னைக் கேலி செய்கிற மாதிரியாகத் தோன்றதே, என்ன விஷயம்.."

"உம்!..."

"ஓய்! ஏன் பெருமூச்சு விட்றேள்..."

"பட்டாச்சாரியாருக்கு என்னங்காணும் குறை! ராஜன் அவர் வீட்டு வாசல்லே, காத்திண்டிருக்கான், சதாகாலமும்."

"வேத வேதாந்தத்தின் இரகசியத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கம்."

"ஆமாம்—தேவரும் மூவரும் கூடத்தானே அந்த இரகசியத்துக்காக..."

"படாதபாடு பட்டிருந்தாளேன்னோ..."

"அட,ஏன் ஓய்! சும்மா, சுத்தி வளைச்சி பேசிண்டிருக்கேள்—வேதமாம்—வேதாந்தமாம்—இரகசியமாம்..."

"ஓய்! நீர் ஏன் இவ்வளவு கோபிக்கிறீர்?"

"ஒண்ணுமில்லே, ஸ்வாமிகளே! புறப்படும், புறப்படும் ...ராஜா, கோபிக்கப் போறார்..."

"கோபிக்கமாட்டார் ஓய்! பட்டாச்சாரியார், ஆத்துக்குப் போகிறபோது, வழியிலே பேசிண்டிருந்ததாலே, தாமதமாச்சின்னு தெரிஞ்சா உமக்கு, ராஜா சன்மானம் செய்வார் ஓய்! பிரதிதினமும், இந்தக் கைங்கரியத்தைச் செய்திண்டிரும்னுகூடச் சொல்வார்..."

"ஓய்! என்ன இது—குறும்பு—போக்கிரித்தனம்—என்ன பேசறேள்? ஏதோ பூடகமா இருக்கு."

''ஒண்ணுமில்லை ஸ்வாமி! இவன் ஒரு வயத்தெரிச்சல் பிடித்த ஆசாமியோன்னோ? உமக்கு 'ராஜக்ருபை' கிடைத்திருப்பதாலே பொறாமை கொண்டு பேசறான்.''

''ராஜக்ருபை, பட்டாச்சாரி ஸ்வாமிகளோட ஜாதகப் பலன் அல்ல, குமாரி சுந்தரியின் ஜாதகப்பலன் தந்ததாக்கும் இந்தக் க்ருபை.''

இப்படி எல்லாம் பேசினாளே பட்டர் கூட்டம்; அதை எல்லாம் எண்ணிக் கொண்டா, என் மனம் படுகிறபாடு, அடா அடா! சர்வேஸ்வரா! மகளை இழந்தேன்—செல்வத்தை இழந்தேன். மானம் போகாதிருப்பதற்குக் காரணம், விஷயத்தை வெளியே பேசாமல் 'நம்மவா' இருப்பதாலேதான்—அவள் மாண்டு போனதும் ஒருவிதத்திலே நல்லதுதான்... இருந்தால் என் நிலை என்ன ஆகும்? மீனாட்சி கோயில் பட்டருக்கு, மகள் மாரடைப்பால் இறந்துவிட்டதாலே மனக் கவலை என்று பலரும் பேசுகிறார்கள். அவனோ! நடந்தது நடந்துவிட்டது! நாடாள்பவனல்லவா...தைரியமாக..அலட்சியமாக..ஆணவமாகக் கூறுகிறான, 'நடந்தது நடந்துவிட்டது' என்று. இனி நடக்கவேண்டியது ஒன்றுமே இல்லை என்பது அவன் நினைப்பு...யார் என்ன செய்ய முடியும் என்ற அகம்பாவம்...ஆமாம்!..நம்மால் என்ன செய்ய முடிந்தது...இதுவரையில்..அவனைக் காணும்போது கடுங்கோபம் பிறக்கிறது...பிறந்து? பழிபாவத்துக்கு அஞ்சாத பாவி, கெம்பீரமாக உலவுகிறான் ஊரிலே, கோலாகலமாகக் கொலு நடத்துகிறான்....அந்தப்புரத்திலே, மாதர்களின் கூட்டம் இருப்பது கேட்டு மக்கள் ஒருவிதமாகப் பேசுகிறார்கள் என்று சொன்னால், அவன் வாய்க்கொழுப்பு—'ஏன் பட்டரே மக்களுக்கு ராமாயணம் தெரியாதோ! அவருடைய அந்தஸ்துக்கு அவர் அறுபதினாயிரம் கொண்டார்—ஏதோ சக்தியானுசாரம் நமக்கு, என்று கூறக்கூடாதோ?' என்று கேலி பேசுகிறான்—நெடுமதியாளன்.

சுந்தரி, ஒரு ராஜகுமாரியா, அவள் சார்பாக ரதகஜ துரகபதாதிகள் கிளம்ப அல்லது நான் படிக்கும் புண்ய கதைகளிலே கூறப்படுவது போல, சபிக்கக் கூடிய காலமா

இது— கல்லாய்ப் போக—புல்லாய்ப் போக, புழுவாய்ப்போக என்று சாபம் கொடுக்க...என்ன செய்வது...எரியும் கொப்பரை போலுள்ள என் மனதுக்கு, எப்போதுதான் சாந்தி கிடைக்கும்...மன்னனை மாபாவி என்று கூற மனம் துடிக்கிறது. உண்மையைக் கூறவோ முடியவில்லை—மானம் தடுக்கிறது— பழி வாங்கியாக வேண்டும்— ஆனால், எப்படி! எப்படி! ஆமாம். லிங்கண்ணாவைத்தான் கருவியாக்க வேண்டும்.

''லிங்கண்ணா! என் மகள்; மாரடைப்பால் சாகவில்லை; மாபாவிசெய்த அக்ரமத்தால் இறந்தாள் என்று சொன்னால் செச்சே! சொல்லக்கூடாது—கேவலமாகக் கருதுவான். லிங்கண்ணாவுக்கு மன்னன் மீது கோபம் இருக்கிறது, நிரம்ப. அவனை ஏவி விட்டால், மன்னனை ஒழிக்கலாம். மன்னனை ஒழிக்காமுன்பு என் மனமோ சாந்தி அடையாது. கோயில் பட்டாச்சாரிக்கு மன்னன் மீது கோபம் பிறக்கக் காரணம் என்ன என்று யோசிப்பானோ இந்த லிங்கண்ணா? யோசிக்க விடக் கூடாது. என்ன செய்யலாம்? எதையாவது செய்தாக வேண்டும்! பாம்பாகி அவனைப் பிடுங்கிட வேண்டும், நெருப்பாகி அவனைச் சுட்டுப் பொசுக்கிட வேண்டும். எப்படி? திருமலையைத் தீர்த்துக் கட்டியாக வேண்டும்—காரணம் வெளியே தெரியக்கூடாது. லிங்கண்ணாவும் அறிந்து கொள்ளக் கூடாது. லிங்கண்ணாவின் மனதை அறிந்து, தூபமிட வேண்டும். மன்னன், மதியிலி! என் மகளின் மரணத்துக்குப் பிறகு நான் பழைய சம்பவத்தை மறந்தே போனேன் என்று எண்ணிவிட்டான். என் மனதிலே மூண்ட தீ, அணையக் கூடியதா! நானோ பக்குவமாகத்தான் நடந்துகொள்கிறேன். அவனை நேரிடையாக எதிர்த்து ஒழிக்க முடியாது; மாமரத்தின் பின்புறமிருந்துதான் இந்த வாலியைக் கொன்றாக வேண்டும். சமயம் வாய்க்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யோசனை உதயமாகிறது. ஆனால் மறுநாள், அது பைத்யக்கார யோசனை என்று புரிகிறது—தெளிவு பிறக்கவில்லை. சுந்தரியின் உருவம், நித்த நித்தம் என்முன் தெரிகிறது. அப்பா! ஆகமம் சாஸ்திரம் என்றீர். இல்லையானால்

நான் அந்தப்புரம் சென்று சுகப்பட்டு இருக்கக் கூடும் என்று அழுகுரலில் கூறுகிறது அந்த உருவம். (எப்படிச் சம்மதிக்க முடியும், அவள் சொன்ன நீச ஏற்பாட்டுக்கு? மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பட்டாச்சாரியே வர்ணாஸ்ரம விதியை, சனாதன தர்மத்தை, சாஸ்திர சம்பிரதாயத்தை மீறி நடந்தால், பிறகு, நமது குலப்பெருமை, மதமகிமை நிர்மூலமாகிப் போகுமே! ஏற்கனவே கிருஸ்தவப் பாதிரிகள், மக்கள் மனதை மயக்கி வருகிறார்கள்! என் மகளை நான் 'ஜாதிகெட' விட்டிருந்தால், போதுமே! மதமே மாண்டு போகும்! தேவி கோயிலிலிருந்து நான் துரத்தப்பட்டுமிருப்பேன். ஆமாம். அவள் செத்தாள்—வேறுவழி கிடையாது—ஆனால் இவன்—இவனைத் தொலைத்தாக வேண்டுமே! எப்படி? அதுதானே இன்னும் புரியவில்லை. மன்னன் நாஸ்திகனாகி வருகிறான்; தேவியை மறந்துவிட்டான்; புராதன மார்க்கத்தைப் பழிக்கிறான் என்பதை மெள்ள மெள்ளப் பலரிடம் கூறிவருகிறேன்.

பரவுகிறது இந்தச் சேதி. மக்கள் மனம் பதறுகிறது, இது நல்ல, சுபசகுனம்! ஏன்! அந்தப்புர மாதர்கள்கூட, என் தூபத்தால் மன்னனுக்கு விரோதமாகக் கிளம்ப தயாராகி விட்டனர். அதனால்தானே, அந்தப்புரத்திலேயே அரசனைக் குத்திக் கொல்ல ஏற்பாடு செய்தேன்—அரசனின் அபிமான ஸ்திரிகளும் சம்மதித்தனர்—அந்த மடையர்களால் முடியவில்லை, மன்னனைக் கொல்ல. வேறு ஏற்பாடு செய்தாக வேண்டும்—அதுவும் லிங்கண்ணா மூலமாகத்தான்! பார்ப்போம், பழி வாங்காது விடக்கூடாது—முடியாது போனால் முப்புரியா இது?..எப்புரியிலும் நம்மவர் போட்ட திட்டம் தோற்றது கிடையாது. மதுரை மண்டலத்திலே மட்டும், நமது முறை தோற்றா போகும். இல்லை, இல்லை, வெற்றிகிட்டும்! லிங்கண்ணா வெறி கொண்டவனாகவே காணப்படுகிறான். ஒரு நல்ல திட்டம் தயாரித்துக் கொண்டு, அவன் உதவியைத் தேடினால் வெற்றிதான். திட்டம் வேண்டும்—திட்டம் வேண்டும்.

**லிங்கண்ணா :**

மோசமாகிவிட்டது, மன்னன் போக்கு. இந்தக் கிருஸ்தவப் பாதிரிகளுக்கு இப்படியா இடம் தருவது! மதுரை கொந்தளிக்கிறது; மன்னன் ஏதும் நேரிடாது என்று இருக்கிறான், மமதையுடன். என்னிடம் துளியாவது மதிப்பு இருக்கிறதா! என்ன செய்துவிட முடியும் என்ற தைரியம்.

ராஜ சபையிலேயே நம்மையெல்லாம் அலட்சியப்படுத்துகிறான். எவ்வளவு தைரியமாக, மத விஷயத்தைக் கண்டிக்கிறான்! இந்த மண்டலத்திலும், வேறு மண்டலங்களிலும், மறையவர்களிடம் மன்னர்கள் பயபக்தி விசுவாசத்துடன் நடந்து கொள்கிறார்கள். திருமலை மட்டும் தானே தர்க்கிக்கிறான். தர்க்கிப்பது மட்டுமா—அன்று ஒருநாள், சந்திரசேகர பட்டரிடம் சில புதிய கேள்விகள். பாதிரி தயாரித்தார்—படிக்கிறேன், கேளுங்கள்—பட்டரே! பதில் கூறிட முடியுமானால் நல்லது. கவனமாகக் கேட்க வேண்டும் என்று கூறி என் எதிரிலேயே அந்தப் பிராமணனை எவ்வளவு கேவலப்படுத்திவிட்டான்—மதத்தையும் பழித்தான்—

''ஓய்! பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தவர் கடவுள்தானே!''

''ஆமாம்—சந்தேகமென்ன—வேதப் பிரமாணாதிகள் அதைத்தான் வலியுறுத்துகின்றன—உபநிஷத்தும்...''

''போதுமய்யா...நான்தான் ஒப்புக் கொள்கிறேனே... ஒப்புக் கொள்ளும் விஷயத்துக்கு ஓராயிரம் ஆதாரம் ஏன்?''

''பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தான் கடவுள்—உம்மையும் என்னையும்—ஊராள்வோனையும் உழவனையும்—ஈ எறும்பு முதலாய எண்பத்தி நான்கு கோடி ஜீவராசிகளையும் சிருஷ்டித்தான்...''

''சிருஷ்டித்தானல்லவா? இதிலே மக்கள், ஆண்டவனின் குழந்தைகள்தானே...''

''ஆமாம்.''

''அப்படி இருக்க, இதிலே, உயர்ந்த ஜாதி—தாழ்ந்த ஜாதி என்று பேதம் ஏன்?''

''அது சாஸ்திரம்''

''சாஸ்திரம்! சர்வேஸ்வரனுடைய வேலையைக் கெடுப்பதா சாஸ்திரத்தின் இலட்சணம்?''

''இல்லை.''

''என்ன, இல்லை...இல்லை...நாலு ஜாதிக்கு, என்ன காரணம் கூறுகிறார்கள்..?''

''பிரம்மனின் முகத்தில்...''

''முகத்திலே, தோளிலே, துடையிலே, பாதத்திலே, இப்படிக் கூறுகிறார்களே, அது, இந்த நாட்டுக்கு மட்டும் இருக்கிறதே தவிர உலகிலே மற்ற நாடுகளிலே இல்லையே, ஏன்?''

''தெரியவில்லை...''

''விசாரிக்கப்படாதோ...''

''யாரை...''

''விஷயம் தெரிந்தவர்களை...'' என்று பேசிவிட்டு ஒரு பேய்ச் சிரிப்பு சிரித்தபோது, எனக்கு வந்த கோபம், கட்டாரி மீதே கை சென்றது. ஊர் மக்கள், இவனை ஒழித்துக் கட்டுபவர்களை வாழ்த்துவார்கள். அவ்வளவு வெறுப்பு வேந்தனிடம். யாரும் தன்னை ஏதும் செய்ய முடியாது என்ற அகம்பாவம். யாரும் ஒன்றும் செய்ய முடியாதா? நான் என்ன, மரமா! வாள் ஏந்தி அறியாதவனா! இந்த மண்டலத்தையே ஆளும் வல்லமை உண்டு எனக்கு! ஆள நினைத்தால்தான் என்ன தவறு! அன்னியருக்கு இடமளிக்கும் இந்த மன்னனை ஒழித்துவிட்டு, நானே மன்னனானால், ஒரு தவறும் இல்லை. பதவி ஆசை என்பார்கள்—ராஜத் துரோகம் என்று சிலர் தூற்றுவார்கள். ஆனால், மக்களுடைய மனம், எனக்குத் தெரியும் நன்றாக. மாபாவியை ஒழித்தேன்

என்றுகூடத் தைரியமாகக் கூறிவிடலாம். ஆனால் அவ்வளவு வெளிப்படையாகச் செய்வது, ஒருவேளை ஆபத்திலே கொண்டு போய்ச் சேர்க்கக்கூடும். வேறுவிதமாகத்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். நல்ல வேளையாக, இந்த பட்டர் கிடைத்திருக்கிறார். பாவம், வெளியே சொல்ல முடியாத வேதனை அந்த ஆசாமிக்கு. இந்த நிலையில் உள்ளவரைத் தான் தக்க கருவியாக்க வேண்டும். அவருக்கு உள்ள வேதனையின் காரணத்தை அறிந்ததாகக் காட்டிக் கொள்ளக் கூடாது. அன்று, மெள்ள 'ஒத்திகை' பார்த்தேன்—நேர்த்தியாகவே இருந்தது; பட்டரின் ஒத்தாசை நிச்சயம் கிடைக்கும் என்பதிலே சந்தேகமில்லை. மக்கள் ஏதாகிலும் சந்தேகப்பட்டாலும், பட்டர் அவர்களைச் சரிப்படுத்திவிடுவார்! அவர் என்ன சாமான்யமானவரா? தேவி சன்னதியில் பட்டாச்சாரியார்— அவர் வாக்கு சத்தியவாக்கு என்றுதான் யாரும் எண்ணுவார்கள்.

'மன்னனுக்கு மதி கூறுவதைவிட, மணலைக் கயிறாகத் திரித்து விடலாம் போலிருக்கிறது, மறையவரே! விதண்டாவாதம், பேசுவதெல்லாம்; செய்வது, மகா மோசமான, மட்டரகமான காரியம்...''

''மன்னன்!—ராஜா—!''

''மரப் பொம்மைகளா மக்கள்?''

''மன்னன் என்றால், எதுவும் செய்யலாம் என்றா எண்ணுவார்கள்? அந்தக் காலம் மலையேறிவிட்டது.''

''மதுரையிலா?''

''ஏன்? இங்கு மாவீரர் இல்லை என்று எண்ணுகிறீரா?''

''லிங்கண்ணா! வீரருக்கு இங்கு என்ன முறை? உமது வீரதீர பராக்கிரமத்தை நான் அறியமாட்டேனா?''

''ஆனால்...''

''ஆனால் என்று இழுக்கக் காரணம் அந்தணரே! என்ன கூறும்? ராஜ விஸ்வாசம் பலமான பாசமல்லவா?''

''ஆமாம்—ஆனால் ராஜ பதவி மிகவும் பொறுப்பானது அல்லவா?''

''ஆமாம்—தடை என்ன—தர்மசாஸ்திரம் தவறாமல் நடப்பதுதான் ராஜ தர்மம்...''

''தவறினால்...''

''ஆண்டவன் தண்டிப்பார்...ஆண்டவன் அதற்காகத் தான் மக்களுக்கு அறிவையும் ஆற்றலையும் தந்திருக்கிறார். கடிக்க வரும் பாம்பைஎல்லாம்ஆண்டவன் துரத்திக் கொண்டு வந்து அடிக்க வேண்டுமா—நாம் என்ன மண்ணாங்கட்டிகளா?''

''ஏது லிங்கண்ணா! புரட்சிப் பொறி வீசுகிறது, உன் பேச்சில்.''

''பட்டரே! மன்னரிடம் கூறிவிடும்—லிங்கண்ணா உமது நடத்தையைப் பலமாகக் கண்டிக்கிறான்—மக்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர்—அக்ரமத்தைச் சகிக்கமாட்டார்கள் என்று கூறிவிடும்.''

''நானா?...''

''ஏன்? வேறு யார் கூறுவது? உமக்குத் தெரியவில்லையா? மன்னன் நமது புராதன மார்க்கத்தையே நாசமாக்கத் துணிகிறான், பரங்கிகளின் பேச்சைக் கேட்டுக் கொண்டு என்பது...''

''தெரிகிறது—மனம் வேகிறது அந்த பாபாவி செய்யும் காரியத்தை நினைத்தால்'' என்றல்லவா அன்று பேசினார். பட்டாச்சாரிக்கு மனம் எரிமலையாகிக் கிடக்கிறது. அந்த நெருப்புக் குழம்பிலே தள்ளிப் பொசுக்கிவிடலாம் மன்னனை. சரியான சமயம் வாய்க்க வேண்டும். திட்டம் தீட்டிய படிதான் இருப்பார் பட்டாச்சாரி! பழி வாங்கித் தீரவேண்டும் என்ற எண்ணம் அணையாத தீயாக இருக்கிறது அவர் மனதில்.

**திருமலை :**

பணம் இல்லாமல், எவ்வளவு திட்டங்கள் பாழாகிவிடு கின்றன. நானும் கொஞ்சம் வீண் செலவு செய்துவிட்டிருக்கி றேன். அந்தப்புரத்திலே மட்டும், தேவிமார் முன்னூறு—பரிவாரம் பல நூறு—பொன் பாழாகிறது. இவ்வளவு அழகி களும், என் சுந்தரவல்லியின் கால்தூசுக்கு இணையாக மாட் டார்கள்! அந்தப் பொற்கொடியைப் பெற அரும்பாடுபட் டேன்—பெற்றேன்—ஆனால் நிரந்தர விருந்தாகவில்லை. பழைய போதை இந்தப் பட்டாச்சாரிக்கு. பாதிரிமார்கள் தான் பட்டவர்த்தனமாகக் கூறினார்களே, 'வைதீக வெறி, லேசில் போகாது' என்று. எவ்வளவு வாதாடினேன், சுந்தரி யைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று. பிரள யம் வந்துவிடும் என்று பீதி கொண்டான். அவள் அழுதபோ தெல்லாம், அஞ்சியபோதெல்லாம், தைரியம் சொன்னேன், உன்னை என் தேவியாக்கிக் கொள்கிறேன் என்று. சில நாட் களில் இந்தப் பட்டாச்சாரியின் பித்தம் தெளிந்துவிடும். திருமணத்துக்குச் சம்மதிப்பான் என்று எண்ணினேன். அதற் காகவே, பழைய சாஸ்திர சம்பிரதாயங்களிலே உள்ள அர்த்த மற்ற, பொருத்தமற்ற விஷயங்களை எல்லாம், பட்டாச்சாரி யிடமே கூறினேன்—வேடிக்கையாகப் பேசுவது போல. எதற் கும் அசையவில்லை. பாபம்! சுந்தரி திடீரென்று மாண்டு போனாள். மாரடைப்பு என்று புளுகினான். இருக்காது. தற்கொலையாகத்தான் இருக்க வேண்டும். பேதைப் பெண் பீதி கொண்டுவிட்டாள். பட்டாச்சாரி, அவள் செத்ததோடு சம்பவத்தையே மறந்துவிட்டான். மகள் செத்ததுகூட அவ னுக்கு வருத்தமளிக்கவில்லை; ஜாதி கெடவில்லை என்று மகிழ்கிறான். 'எல்லாம் விதி' என்ற ஆறுதல்! என்மீது கோபம்கூட இல்லை. மகாராஜாவைக் கருவியாக்கி பிரமன் தன் வேலையை முடித்துக் கொண்டான் என்று கூறி மனச் சாந்தி தேடிக் கொண்டான் மடையன். ஆனால் 'ராஜபக்தி' அபாரம் அவனுக்கு. இல்லாமலா, நான் பணமின்றி திண் டாடுவது தெரிந்து, தேவி சன்னதியிலே உள்ள இரகசியச் சுரங் கத்திலே, பெரும் பொற் குவியல் பேழைகளில் உள்ள இரக சியத்தைக் கூறினான்! பரம்பரை பரம்பரையாகச் சேர்க்கப்

பட்ட பொன்! நல்ல சமயத்திலே உதவுகிறது. இன்றிரவு நடுநிசிப் பூஜையின்போது சென்று, எடுத்துவர வேண்டும். பட்டாச்சாரி நமக்காகக் காத்துக் கொண்டிருப்பான். எத்தனை பேழைகளோ! எவ்வளவு பொற்குவியலோ!

**சந்திரசேகர பட்டர் :**

நடுநிசி! பக்தகோடிகளெல்லாம் போய்விட்டார்கள். பேராசைக்காரன், காமாந்தகாரன், என் மகளைக் கெடுத்துச் சாகடித்த காதகன் வரப்போகிறான். பேழைகள் எத்தனை! பொற்குவியல் எந்தஅளவு இருக்கும் என்றல்லவாகேட்டான். வா, வா! சந்திரசேகரன் கட்டிய சமாதி தயாராக இருக்கிறது. இதோ லிங்கண்ணாவும் வீரர்களும், எனக்குத் துணையாக வந்துள்ளனர். புல்லேந்தும் கரம்தான். ஆனால் இன்று உன் உயிரைப் போக்கும் வலிமை இதற்கு!! வேதனை, கோபம், வெட்கம், எது கிளம்பினால்தான் என்ன! மணியடிக்கும் இவன், நம்மை என்ன செய்ய முடியும் என்று இறுமாந்து கிடந்தான்! இதோ சவக்குழி—தேவி கோயில் பட்டாச்சாரி வெட்டியிருக்கும் சவக்குழி! உள்ளே சென்று, பேழைகளைப் பார்த்து, வாய் பிளந்து நிற்கும்போது, இந்த விளக்குகள் அணைக்கப்படும்! இருள் சூழ்ந்து கொள்ளும். பிறகு, இந்தப் பெரும்பாறை—லிங்கண்ணா பலசாலி—இருவரும் சேர்ந்து சுரங்க வழியை இதனால் அடைத்துவிடவேண்டும்—உயிரோடு சமாதி—காற்று கிடையாது, பாறைக் கதவு தட்டிப் பயனில்லை—உயிர் ஊசலாடும்—சித்திரவதை—அணு அணுவாக உயிர் கத்தறிக்கப்படும். பிணமாவான் பேயன்! லிங்கண்ணா, இதைத் தர்ம கைங்கரியம் என்றே எண்ணுகிறான். மதத்தைக் காப்பாற்ற மன்னனானாலும், அருமை மைந்தனானாலும், தாய் தகப்பனானாலும், யாராக இருந்தாலும், கொல்வது, புண்ய காரியம் என்றேன்—ஆமாம் என்றான். சொல்லாமலிருப்பானா, சாஸ்திரம் அறிந்தவனாயிற்றே! நான் எதற்காகப் பழி தீர்த்துக் கொள்கிறேன் என்பது, நல்லவேளை, லிங்கண்ணாவுக்குத் தெரியாது. என் திட்டத்தை மெச்சினான். ஆமாம், அதோ மன்னன்—தேவி! உனக்குப் பலி! நரபலி! நரபலி! சுந்தரி, உன் தந்தை சாமான்யனல்ல—இதோ பார், வருகிறான், சாக...

**மதுரை பக்தர்கள் :**

காலம் கலியானாலென்ன, அற்புதம் நடவாமலா போகும். நேற்று நடுஜாமப் பூஜையின்போது, நமது மன்னன் திருமலை, தேவியோடு ஐக்யமாகிவிட்டாராம். தேவியின் மகிமையே மகிமை! திருமலைக்குக் கிடைத்த முக்தியே முக்தி. தேவியைத் தரிசித்தபடி நின்றாராம் மன்னர்—நெடுநேரம். பட்டாச்சாரியார்கூட ஆச்சரியப்பட்டாராம், பாதிரிகளின் சகவாசத்தால், மன்னனுக்கு மத நம்பிக்கைக் குறைந்துவிட்டதாக எண்ணிக்கொண்டோமே, இவர் பக்திப் பரவசராகியல்லவா நிற்கிறார் என்று எண்ணி, இப்படிப் பட்ட 'பக்திமானை' பழித்தோமே என்று வருந்தினாராம். மன்னன் கண்மூடி கரம் கூப்பி, மனனம் செய்தவண்ணம் இருக்கும்போது பட்டாச்சாரியாரின் கண்களைப் பறித்து விடும்படியான ஓர் ஜோதி தோன்றிற்றாம், அம்பாளிடமிருந்து. முகத்திலிருந்தா, காலிலிருந்தா என்று மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லையாம். ஜோதி தோன்றியதும் 'பக்தா' என்று தேவியின் குரல் கேட்டதாம். 'வந்தேன்' என்றாராம் திருமலை; அவ்வளவுதான்! மன்னன் ஜோதியில் கலந்துவிட்டாராம்! என்னே, தேவியின் திருவருள்! என்னே, பக்தியின் பெருமை! திருமலை நாமம் வாழ்க! திவ்ய ஜோதி வாழ்க! தேவியின் நாமம் வாழ்க! திவ்ய ஜோதியில் கலந்த திருமலையான் திருநாமம் என்றென்றும் வாழ்க!

★

# 5
# எங்கும் அவன்

''சோளக் கொல்லைதானேடா! முக்கா ஏக்கரு, உங்க அப்பனுக்கு.''

''ஆமாங்க! மூணு ஏக்கர் இருந்துதுங்க முன்னாடி. அம்மாவுக்கு சீக்கு வந்தப்ப, போயிடுச்சி...''

''உங்க ஆத்தாளும்தானே போயிட்டா...''

''வருஷம் மூணு ஆகுதுங்க, அம்மா காலமாயி. அப்பாரு அப்ப இருந்து பித்துப் பிடிச்சவர்போலக் கிடக்கறாரு...''

''சரி, சரி! இப்ப இந்த முக்கா ஏக்கர் பேர்லே, மூணு நூறு கேக்கறியே கடன்—எப்படிடா கொடுக்கறது.''

''பாடுபட்டு வயத்தைக்கட்டி, வாயைக்கட்டி, பணத்தை மிச்சம் பிடிச்சி கடனைக் கட்டிவிடுவேனுங்க...''

''கடனைக் கட்டற ஆசாமியைப்பாரு, கலியாணமானதும், வசவசன்னு பெத்துத் தள்ளப்போறே, கொழந்தைகளை! குடும்பம் பெருக்குமே தவிர காசு எங்கேடா மிஞ்சப் போவுது?''

''இல்லிங்க! வரப் போறவளோட அதிர்ஷ்டம், எங்க குடும்பத்தை வாழ வைக்கும்னு...''

''ஜோசியம் சொல்லிட்டாங்களா! யாரு? அந்தப் பூஜாரியா? சரி, எக்கேடோ கெட்டுப்போ. கலியாணத்துக்குன்னு கேட்கறப்ப, இல்லைன்னு அபசகுனம் மாதிரிச் சொல்லக் கூடாது என்பாங்க. அமாவாசை கழிச்சி வா, தர்ரேன். கூடவே பத்திரம் எழுதறாம் பாரு...''

''பண்டரி ஐயா தானுங்களே!..கூட்டிக்கிட்டு வாரேன்''

**சொ**க்கன், சோளக்கொல்லையைக் காட்டிக் கடன் வாங்கியாவது சொர்ணத்தைக் கலியாணம் செய்து கொள் ளத் தீர்மானித்ததற்குக் காரணம், பணம் சேர்த்துக் கொண் டிருக்கும் பட்டாளம், சொர்ணத்தின் மீது ஒரு கண் வைத் திருந்தான் என்பதுதான்.

"**அ**க்கா சொல்லிச்சி மாமா வர்றாங்களாம் மதறாஸ் பட்டணத்திலே இருந்து..."

"வரட்டுமே! என்னை என்ன ஊருக்கெல்லாம் மேளம் கொட்டிச் சொல்லச் சொல்லுதா சொர்ணம், ராஜாவர் றாரு ராஜாவர்றாருன்னு."

சொர்ணத்தின் தம்பியிடம் இப்படிப் பேச்சு—அடிக்கடி கோபம்.

கோபத்தைத் தாங்கிக் கொள்ளும் வேலையை, உழவு வேலையோடு சேர்த்து ஏற்றுக் கொண்டது எருது. 'வரட் டுமே!' என்று சொக்கன் அலட்சியமாகப் பேசினானே தவிர, உள்ளூரப் பயந்தான். பட்டாளம் ஒவ்வொரு தடவை வருகிற போதும் ஒவ்வொரு விதமான புது உடையுடன் வருகிறான். போன வருஷம் வந்தபோது கையிலே தங்க முலாம் போட்ட கடியாரம்! விரலிலே மோதிரம் பளபளத்தது! வாயிலே, வழக்கமான சிகரெட்டு! பேச்சிலே குறும்பு!

"சொக்கோய்! தொலைவிலே இருந்து பாத்தா, நிற்கி றது நீயா, உன் கொல்லையிலே இருக்கிற பொம்மையான்னு சரியாப் புரியலைடோய்!"

"ஏன், கண்ணிலே அத்தனை மப்பு! பட்டணத்திலே கண்ணாஸ்பத்ரி இல்லே? காட்டிக்கறதுதானே."

"குறும்பாடா செய்யறே டே! மாடுகூட பழகறவன் தானே! புத்தி வேறே எப்படி இருக்கும்."

"தெரியும், சும்மா கிடடா! தெருப் பொறுக்கி நாய்க ளோட சுத்தறவனுங்க ரொம்பபேரு, இப்படித்தான் தேசம் ஆள்ற ராஜாப் போலப் பேசறது. போ! போ!" இப்படிச் சில தடவைகளில் சச்சரவுகூட மூண்டுவிடும். பட்டாளம் பேச்சை வளர்த்துவதில்லை; சொக்கனுடைய தட்டுக்கு எருதே 'ததிங்கினத்தோம்' போடுகிறபோது, நம்ம முதுகு எம்மாத்திரம் என்ற பயம்.

எப்போதாவது சந்தை கூடும் இடத்துக்கு, சொர்ணத்துடன் சேர்ந்துபோகும் வாய்ப்புக் கிடைக்கும் சொக்கனுக்கு. ஒரே மகிழ்ச்சி, பெருமை. பார்ப்பவர்கள் எல்லோருமா நல்ல இயல்பினர், பலவிதமான பேச்சு, காதில் விழும்.

''பய, சொக்குப்பொடி போட்டுட்டான்டா...''

''கிளிபோல பொண்ணு இருக்குது. இவன் இருக்கறான் தடியனாட்டம்.''

''கட்டிகிட்டா மாடி வீடு கட்டித்தாரேன்னு சொல்லி இருப்பான்.''

''மாடி வீடு கட்டற முகத்தைப் பாரு...''

''பொண்ணு பாரேன்! என்னமோ ஒரு பெரிய இளவரசன் கூடப் போறதுமாதிரி, நடை நடக்கறதை''

கோபத்தை அடக்கிக் கொள்வான் சொக்கன்.

ஒரு எண்ணம் மட்டும் தோன்றும். சொர்ணம் கண்டு பெருமைப்படக் கூடிய விதமாக, வாழ்ந்து காட்ட வேண் வேண்டும். ஊரார் புகழ்ந்திடும்படியாக நடந்து, ஊரே தன்னைப் புகழ்வதைக் கேட்டு சொர்ணம், பெருமை கொண்டிடவேண்டும் என்ற எண்ணம்.

கடனைப் பெற்றுக்கொண்டான். ஊர்ப் பெரியவரை அனுப்பிவைத்தான் சொர்ணத்தின் தந்தையிடம், சொர்ணத்தைத் தரச் சொல்லிக் கேட்டிட. சொர்ணத்தின் தகப்பனார் துளியும் பிடி கொடுக்கவில்லை. ''சோளக்கொல்லை பேர்லேகூடக் கடன்! இவனை நம்பி எவன் ஒரு பெண்ணை ஒப்படைப்பான்? மனசு இடம் கொடுக்கல்லே. மேலும் பட்டாளம் நம்ம பெண்ணைக் கட்டிக் கொள்ளணும்னு ஒரு எண்ணம் கொண்டிருக்கிறதா தெரியுது'' என்றார் அந்த முதியவர். ஊர்ப் பெரியவர், பட்டாளம், பட்டணம்போய் நாலுகாசு சம்பாதித்திருந்தாலும் நடவடிக்கை சரியில்லை என்கிற பேச்சு இருப்பதையும், 'தொடுசு' ஒண்ணு இருப்பதாக கேள்வி என்பதையும் சொல்லிப் பார்த்தார். ''எவ்வளவோ ஆடிக் கிடந்ததுகளெல்லாம் ஒரு கால்கட்டுப் போட்டதும், தன்னாலே அடங்கிப் போகல்லியா, பட்டாளமும் அப்படித்தான்'' என்று தீர்மானமாகக் கூறிவிட்டார் சொர்ணத்தின் தந்தை.

இந்தச் சமயமாகப் பார்த்து, சொக்கனுடைய அப்பா, எங்கோ சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டார். அவரைத் தேடி அலைவதும், சொர்ணத்தை எண்ணி ஏங்குவதுமே சொக்கனுடைய வேலையாகிவிட்டது. கடன் வாங்கி வைத் திருந்த பணத்தைக் கொண்டு, வேறோர் சிறு கொல்லையை வாங்கினான். அதிலே ஒரு வழக்கு முளைத்தது! புதிதாக வந்த கொல்லை, பழையகொல்லையையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போய்விட்டது. சொக்கன், கூலிக்கு உழுபவனா னான்.

கடன் கொடுத்து, கொல்லை மேட்டை எழுதி வாங் கிக் கொண்டாரே, ஏலகிரி—அவருடைய வீட்டிலே எடுபிடி— அவர் நிலத்தைக் கவனித்துக் கொண்ட நேரம்போக.

ஏலகிரியின் ஒரே மகள்—விதவை—இளவயது. படித்த பெண், பண்புமிக்கவள். பெயர் கனிமொழி. உனக்கு நேரிட்டு விட்ட கதியால் மனம் உடைந்த நிலை என்றாலும், இனி உயிர் வாழ ஏதேனும் தொண்டாற்றி வருவது என்ற உறுதி கொண்டு, ஒரு இலவச மருத்துவமனை அமைத்து, அதிலே வேலைக்கமர்ந்த டாக்டர் கமலாவுடன் பணி புரிந்து வந் தாள்—முதலுதவி முறை பயின்று.

ஒவ்வோர் சமயம் சொக்கனுக்கு ஒரு எண்ணம் வரும்— சொர்ணத்தைப் பற்றி, டாக்டரம்மாவிடமாவது, எஜமானி யம்மாவிடமாவது சொல்லி உதவி கேட்கலாமா என்று. உடனே ஒரு 'ரோஷ' உணர்ச்சி குறுக்கிட்டு அந்த எண் ணத்தை விரட்டிடும்.

மருத்துவ மனையில், சொக்கன் பணியாளாக வாய்ப்புக் கிடைத்தது. அதை மிகவும் விரும்பி ஏற்றுக் கொண்டான். வேலை நேரம் போக, டாக்டரிடம் பேசுவதிலே அவனுக்கு ஆர்வம். உலகின் நிலையைத் தெரிந்து கொள்ளும் பள்ளிக் கூட மாக்கிக்கொண்டான் அந்த மருத்துவ மனையை.

டாக்டர் கமலாவின் கணவன், இந்திய விமானப்படை யில் வேலை பார்த்து வருபவர். ஆகவே அவரைப் பற்றிய பேச்சு கிளம்பும் போதெல்லாம், போர்—படை—பாது காப்பு—நாட்டைக் காத்திடும் கடமை—இவை பற்றிய விளக்

கம் கிடைக்கும் சொக்கனுக்கு. ஒரு ஆர்வம் அரும்பிற்று அவன் மனதில்—நாட்டைக் காத்திடும் படையில் சேர்ந்தால் என்ன என்ற எண்ணம்.

'பாய்—பாய்' என்றும், பஞ்சசீலம் என்றும், பாசம் காட்டிப் பேசிவந்த சீனா, இந்தியாவைத் தாக்கிற்று என்ற செய்தி கிடைத்ததும், சொக்கன் மனதிலே அரும்பிக் கொண்டிருந்த எண்ணம் மலர ஆரம்பித்தது. அவன் படையில் சேர முடிவெடுக்கச் செய்தது, டாக்டர் கமலாவின் கண்ணீரும், கனிமொழியின் புன்னகையுந்தான்.

ஒரு தந்தி. டாக்டர் கமலா அதனைப் படித்ததும் முகத்தில் அறைந்து கொண்டு 'கோ'வெனக் கதறக் கண்டாள். 'சொக்கா! என் கணவர்...யுத்தத்தில்...மரணம்...'' என்று விம்மியபடி கூறிடக்கேட்டுப் பதறினான்.டாக்டருக்கு என்ன ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் திகைத்தான்; அவனுடைய கண்களிலும் நீர் துளிர்த்தது.

நாட்டுக்காக உயிரை ஈந்தார்;

வீரமரணமடைந்தார்.

அவர் பெயர் நிலைத்து நிற்கும்!

நாடே புகழ்கிறது அந்த வீரனை!

சொக்கன் இதுபோல எண்ணிட எண்ணிட, படையில் சேர்ந்தாக வேண்டும் என்று 'எண்ணம் உறுதியாகிவிட்டது.

ஏலகிரியிடம் சொல்லிவிட்டு படையில் சேரச் சென்னை செல்வது, டாக்டரிடம் சிபாரிசு கடிதம் வாங்கிக் கொண்டு என்று தீர்மானித்து ஏலகிரியின் வீடு சென்றான். அங்கு அவர் கண்டதும் கேட்டதும், அவனுடைய நெஞ்சினை நெகிழ வைத்தது.

ஏலகிரி கண்ணீர் சிந்தியபடி...

அவர் எதிரில் புன்னகை உதிர்த்தபடி கனிமொழி.

''அப்பா! நாட்டுக்குப் பேராபத்து வருகிறபோது, நம்மைப் போன்ற விவரம் அறிந்தவர்கள்கூட வீறுகொண்டு எழாவிட்டால், நாடு என்ன கதியாவது அப்பா! பயனற்ற வாழ்வு எனக்கு என்று எண்ணிக் கிடந்தேன்; இப்போது

நாட்டுக்குப் பயன்படும் நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. கலங்காதீர்கள். களிப்புடன் விடை கொடுத்து அனுப்புங்கள். களத்திலே போராடிக் காயமுற்று உயிருக்கு மன்றாடும் உத்தமர்களுக்குத்தொண்டாற்றுவதைக்காட்டிலும் தூய்மையான தொண்டு இல்லை,'' என்று கேட்போர் நெஞ்சம் நெகிழும்படிக் கூறிடக் கேட்டான். அதற்குப் பிறகு, அவனுக்குப் படையிலே சேருவதற்குத் துளியேனும் தயக்கம் எழத்தான் முடியுமா? சொக்கன் படை வீரனானான்.

சொக்கன்—டாக்டர் கமலா—கனிமொழி இவர் போன்றார் பல்லோர் நாடு காத்திடக் கிளம்பியதால் ஏற்பட்டதோர் மகத்தான எழுச்சியின் முன் நிற்கொணாது, பாய்ந்து வந்த சீனப் படை பதுங்கிக் கொண்டது. போர் ஓய்ந்தது. டாக்டர் கமலாவும் கனிமொழியும் வீடு திரும்பினர். சொக்கன் படையிலேயே தங்கிவிட்டான்.

கடன்பட்ட நெஞ்சம் கரைவது போல, காலம் கடு வேகத்துடன் கரைந்தது. காஷ்மீருக்குள் பாகிஸ்தான் புகுந்தது; தாக்குதலை முறியடிக்கக் கிளம்பிய ஆற்றல் மறவர் படையில் சொக்கன்!

வெற்றிமேல் வெற்றி பெற்று, பாகிஸ்தானிய தளங்களை அழித்து, இந்தியப் படைகள் முன்னேறி வருவதனை இதழ்கள் மூலம் அறிந்து, டாக்டரும் கனிமொழியும், இந்த வீரப்படையில் ஏதாவதொரு பிரிவிலேதான் நமது சொக்கன் இருப்பான் என்றெண்ணிப் பெருமிதம் கொண்டிருந்தனர்! சீனப் படை எடுப்பின்போது சென்று பணியாற்றியது போன்றே இப்போதும் சென்றிட விரும்பினர். அதற்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது, எதிரியின் இலக்குகளைத் தாக்கித் தகர்த்திடும் போரில் வீரம் காட்டி வெற்றி கண்ட சொக்கன், களத்தில் மாண்டான் என்ற செய்தி கிடைத்தது; கண்ணீர் புரண்டது. ஆனால் தலை நிமிர்ந்தது.

நம்ம ஊர் சொக்கன், போரிலே மாண்டு போனானாம்! பெரிய வீரன், தீரன், தியாகி என்று சர்க்கார் பாராட்டியிருக்கிறது என்று கிராமத்தார் பேசிக் கொண்டனர்.

மருத்துவ மனை விழாவின்போது பலர் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தில், சொக்கன் காணப்பட்டான். சொக்கன் படத்தைப் பெரிய அளவுள்ளதாக்கி ஊர்ப் பொது இடத்தில் வைத்து, மாலையிட்டு வணக்கம் செய்தனர். டாக்டரும் கனிமொழியும் வந்திருந்த பலரும் கசிந்துருகி நின்றனர்.

சொர்ணம், அந்தப் படத்தைக் கண்டு சிலையானாள்! 'அவரைத்தான் நான் மணம் செய்துகொள்ள இருந்தேன்—அவர் மறைந்தார்—இனி நான் விதவையேதான்' என்று எண்ணிக் குமுறி நின்றாள்.

சொர்ணத்தின் தம்பி மறுநாள் இதழ்களில், சொக்கனின் படம் வெளியிடப்பட்டிருந்ததனைக் கண்டான். சொர்ணத்துக்குக் காட்டினான். கண்டாள்; கண்ணீர் உகுத்தாள். இவர் எனக்கு ஏற்றவர் அல்ல என்றல்லவா அப்பா சொன்னார்! 'இவர் வீரர், நாடுகாத்திட்ட தீரர், நாட்டுக்காக உயிரையே தந்த தியாகி!'—என்றெல்லாம் எண்ணிக் குமுறினாள். அதே இதழில் மற்றோர் பக்கத்தில், போர்க் காலத்தைப் பயன் படுத்திக் கொண்டு கள்ளச் சந்தை நடத்தி பிடிபட்ட, பட்டாளம், ஆறு திங்கள் கடுங்காவல் தண்டனை பெற்றதாக ஒரு செய்தியும் வெளியாகி இருந்தது. சொர்ணம் அதைக் காண வில்லை. அவன் கண்களில் எதுவுமே தெரியவில்லை; எங்கு நோக்கினாலும் சொக்கனுடைய உருவமே தெரிந்தது.

★

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1

XA:210
210



# பேரறிஞர் அண்ணா

"அண்ணாவின் பலதிற ஆற்றல் எவரையும் திகைக்க வைக்கக் கூடியது. பொதுமேடை வானில் முன்பு ஒளிர்ந்த மின்மினிகள், விண்மீன்கள், பிறைமதியங்கள் யாவும் ஒதுங்க, பேரொளி வீசிப் புதுப் பொழுது மலரச் செய்யும் "வெங்கதிரவன்" அண்ணா அவர்களே என்பதை அறியாதார் இலர். எழுத்துத் துறையிலும் சுவைகுன்றாது, எப்பொருள் பற்றியும் அறிவுப் பயன் நிறைவுறும் வண்ணம், எத்தனைப் பக்கம் வேண்டுமானாலும் எழுதும் திறன் அவர் தனியுரிமையே ஆகும். எழுத்துக்கு ஒரு நடை, மேடைப் பேச்சுக்கு ஒரு நடை, உரையாடலுக்கு ஒரு நடை என்பது அவரிடம் காண முடியாது. இருந்தால் இருப்பார்; எழுந்தால் எதிலும் ஒரே காளமேகந்தான்..."

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே, சென்னை-600 001.